# தஞ்சமடைந்தபின் கைவிடலாமோ..!

ரமணிசந்திரன்



# தஞ்சமடைந்தபின் கைவிடலாமோ..!

ரமணிசந்திரன்

# அத்தியாயம் -1

“அக்கா, ஆன்ட்டி இன்னைக்கும் பேசாமல் படுத்தே இருக்கிறாங்களே! இனிமே அவங்க நம்ம கூடப் பேசவே மாட்டாங்களா?” கேட்ட இளங்குரலில் இருந்த வேதனை,

சுகந்தினியின் வலியை இன்னமும் கூட்டியது.

சொல்லப் போனால் ரத்த உறவென்று ஒன்றுமில்லை. ஆனால், இதோ அதோ என்று சுமார் பதினெட்டு ஆண்டு கால பந்தம் அவளது நெஞ்சை இறுக்கி வலிக்கச் செய்தது.

உரக்கப் பேசி அறியாத ஜீவன். ஒருவரை ஒரு குறை சொல்லியும் கேட்டதில்லை. கண்களில் சிறு ஏக்கத்தோடு, அப்பாவித்தனமான அவளது முகமே வீட்டினர் அனைவரின் அன்பையும் பெற்றுக் கொடுத்தது எனலாம்.

ஆனால் சிறுவனின் நிலை இன்னும் மோசம். அவனுக்குமே மரகதம் ஆன்ட்டி எந்த விதமான உறவும் கிடையாது. மரகதத்தைப் போலவே, அவனும் யாருமற்றவன்தான்.

ஆனால் மூன்று வயதுச் சிறுவனாக அவனைப் பார்த்ததுமே “கண்ணப்பு . .” என்று அணைத்துக் கொண்ட மரகதம் இந்த ஐந்து ஆண்டுகளாக, அவனுடைய தாயாகவே மாறிப் போயிருந்தாள். குளிப்பாட்டுவது, உணவூட்டுவது எல்லாமே அவள்தான். அப்படிப்பட்டவள் நாலு நாட்களாக அவனைக் கண்டுகொள்ளவே இல்லை என்றால், பாவம் சின்னப் பையனான அவனுக்கு எப்படி இருக்கும்?

இந்தச் சிறுவனைத் தேற்றுவதே முதல் கடமை!

மரகதம் “கண்ணப்பு, கண்ணப்பு” என்றதால், எல்லோருமே அவனைக் “கண்ணன்” என்றே அழைத்தனர். அதன்படியே இப்போதும் அழைத்து, “பேசுவாங்கடா கண்ணா. . ஆனால், ஆன்ட்டிக்கு இப்போது உடம்பு சரியில்லை அல்லவா? உடம்பு நன்றாக இல்லை என்றால், யாருக்காவது வளவளவென்று பேச வருமா? பேசாமல் படுத்திருந்தால்தானே, அவர்களுக்குத் தேவையான ஓய்வு கிடைத்து சீக்கிரமாகக் குணமாகும்? அதனால்தான் ஆன்ட்டி பேசவில்லை. உடல்நிலை சீரானதும் கட்டாயம் பழைய மாதிரியே பேசுவார்கள். கணண்ணப்பு சாப்பிடு என்று உன்னை விரட்டுவார்கள். கவலைப்படாதே. “ என்று அவளது மனதில் இல்லாத நம்பிக்கையைக்

குரலில் காட்டிக் கண்ணனைத் தேற்றினாள்.

அவ்வளவில் திருப்தியடைந்த சிறுவனிடம், “சரி. இனிமேல் போய்ப் பாடத்தைப் படி. ஆன்ட்டி குணமானதும் மாதப் பரீட்சையில் முட்டை எடுத்தேன் என்றா சொல்வாய்? நல்ல மதிப்பெண் காட்ட வேண்டாமா?” என்று திசை திருப்பி விட, அவனும் “அச்சோ, ஆமாம்க்கா! நாலு நாளாகப் படிக்கவே இல்லியே!” என்று புத்தகங்களை எடுத்துக்கொண்டு படிப்பதற்கு அமர்ந்தான்.

ஆனால், மரகதத்தின் உண்மை நிலை என்னவென்று தெரிந்திருந்ததால் சுகந்தினியால் அப்படி ஆறுதல் பெற முடியவில்லை.

பல ஆண்டுகளுக்கு முன்பாக மரகதத்தின் தலையில் பட்டி அடி, இப்போது அதன் வேலையைக் காட்டியது. அடிபட்டபோது ஏற்பட்டு அபாயமற்ற பகுதியில் ஒதுங்கிக் கிடந்த சிறு ரத்தக்கட்டி ஒன்று, நகர்ந்து வந்து, மூளையின் முக்கியமான பகுதியில் வந்து நிலை கொண்டு, மூளைக்குள் நடக்கும் ரத்த ஓட்டத்தில் பிரச்சினை ஏற்படுத்தியது.

அதன் விளைவாக மரகதம் பெருமளவு செயற்றுப் போனாள். அப்படியே மற்றவர்கள் கூறுவதற்கு இணங்க செயல்பட முனைந்தாலும், உறுப்புகள் சரிவர ஒத்துழைக்க மறுத்தன.

சீக்கிரமே பெரிய அறுவை சிகிச்சை செய்யாவிடடால், நாளுக்கு நாள் உடல் பலவீனமுற்று, முடிவை நெருங்குவது நிச்சயம். அதனால், கடவுளிடம் பாரத்தைப் போட்டு சும்மா இருப்பது முடியாத காரியம்.

ஆனால் அந்த அறுவை சிகிச்சைக்குத் தேவையான தொகையான பல லட்சங்கள் இல்லாத நிலை, தாத்தா, பாட்டி, சுகந்தினி மூவரையுமே முடக்கிப் போட்டிருந்தது.

சுகந்தினிக்குத் தாய் தந்தை முகம் நினைவு கிடையாது. அந்த வயதில் பெற்றோர் இருவரும் ஒரு விபத்தில் மறைந்துவிடவே, இரண்டு வயது நிரம்பாத பச்சைக் குழந்தையாகத் தந்தை வழித் தாத்தா பாட்டியிடம் வந்து சேர்ந்தாள்.

ஒரே மகனைப் பெற்றிருந்த வாகதீசன் சிவகாமி தம்பதிக்குத் தாங்க முடியாத பேரதிர்ச்சியே. ஆனால் அவர்கள் இருவரம் வேறு விதமாகச் சிந்தித்தனர்.

நடுத்தர இன மக்கள் அவர்கள். வருகிற வருமானத்துக்குள் சிக்கனமாக வாழ்வதும், மிஞ்சியதைச் சேமிப்பதுமாக வாழ்ந்தவர்கள். எதிர்காலக் கனவு, மகனுக்காக ஒரு நல்ல வீடு கட்டுவது.

ஆனால் இப்போது எந்த மகனுக்காக வீடு கட்டுவது? எந்த

மருமகளுக்காக பொன்னும் பட்டும் வாங்கிக் கொடுப்பது? தாய்க்காக அழும் இந்தப் பச்சைக் குழந்தைக்கு, இந்தக் கனவுகளாலோ, அவைகளை நிறைவெற்ற இவர்கள் பாடுபட்டதாலோ என்ன லாபம்?

சேமிப்பு செலவாகுமே என்று மகனை, மருமகளைப் போய்ப் பார்க்கும் ஆசையைக் கூட அடக்கி வாழ்ந்திருக்கிறார்கள். எல்லாம் வீண்!

சேர்த்த பணத்தில் ஒரு சிறு தொகையை மட்டும் வைத்துக்கொண்டு உண்மையான சில தரும நிறுவனங்களுக்கு மகன், மருமகள் பெயரில் நன்கொடையாக மிச்சத்தைக் கொடுத்தார்கள்.

அதற்காக சும்மா வாரி வழங்கினார்கள் என்று சொல்ல முடியாது.

பேத்தியை நல்லபடியாக வளர்த்தார்கள். செலவு போக மிஞ்சியதை முதியோர் இல்லம், ஏழை மாணவர்களின் படிப்புக்கு உதவுதல் என்று தானம் செய்தார்கள்.

இயன்றபோது, தொண்டு நிறுவனங்களில் உழைப்புத் தானமும் செய்தார்கள்.

என்னமோ உள்ளூர ஒரு திருப்தி  . . மகன் மருமகள் அருகில் இருப்பது போன்ற ஆறுதல் தோன்றவே, அதையே தொடர்ந்தனர்.

அவர்களது மனம் தேறப் பேத்தியும் ஓர் ஒளி விளக்காக இருந்தாள்.

இப்படி நடந்த வாழ்வில், சுகந்தினிக்கு ஐந்து வயது நிரம்பியபோது வந்து சேர்ந்தவள்தான் மாகதம்.

தோள்ப் பைஎன்றும் சொல்ல முடியாமல், கைப்பை என்றும் கூற முடியாத ஒரு பையுடன் ஓடி ஒதுங்க முயன்ற ஒரு முப்பது வயதுப் பெண், கடைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த வாகதீசன் தம்பதியைக் கண்டதும் அவர்கள் பின்னே வந்து நின்று கொண்டாள்.

ஒளிவது போல நம் பின்னே ஏன் நிற்கிறாள் என்று பார்த்தபோதுதான் அவளைச் சிலர் துரத்தி வருவது புரிந்தது. அவளது கண்களில் பயம் தெரிந்தது.

சிவகாமி அந்தப் பெண்ணின் கையை ஆதரவாகப் பற்றிக் கொள்ள, “யாருப்பா?” என்று வாகதீசன் அதட்டவும், ஓடுகிற நாயை விரட்டும் அந்தக் கூட்டம் கலைந்து விலகிப் போயிற்று.

அந்தப் பெண்ணிடம் விவரம் கேட்டபோது, பெயர் மரகதம் என்பதற்கு மேல் ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை.

மனநிலை சற்றுச் சரியில்லாதவள் என்பது பார்த்தாலே புரிய,

அப்போதைக்கு வீட்டுக்கே அழைத்து வந்தனர்.

முகத்தில் பசியைப் பார்த்துவிட்டு உணவு கொடுக்கவும், அவசரமாக உண்டு கைகழுவியவள் அப்படியே படுத்து உறங்கிவிட்டதாகப் பாட்டி சுகந்தினியிடம் சொல்லியிருக்கிறாள். அவ்வளவு பசி! அவ்வளவு களைப்பு!

யார், எங்கிருந்து வந்தாள் என்ற கேள்விகளுக்கு மலங்க மலங்க விழித்தாளாம்.

மிஞ்சி மிஞ்சி முப்பது வயது கூட இராது. இந்த நிலையில் அவளை எப்படி வெளியே அனுப்புவது? பெரியவர்களுக்கு மனம் இணங்கவில்லை.

வாகதீசனுக்குத் தெரிந்த காவல் அதிகாரியிடம் அவளைப் பற்றி விசாரிக்கும்படி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, மரகதம் அவர்கள் வீட்டிலேயே இருக்குமாறு ஏற்பாடு செய்தார்கள். உணவு உடை கொடுத்துப் பராமரித்தார்கள்.

வீட்டை விட்டு வெளியே செல்ல அவளும் முயற்சிக்கவில்லை. அதிலும், சுகந்தினியைப் பார்த்த பிறகு, ஐந்து வயதுச் சிறுமியான அவளுக்கு வேண்டியது பார்த்துச் செய்து அவள் கூடவே இருக்கலானாள்.

அதிகாரி விசாரித்த அளவில், சுமார் முப்பது கிலோமீட்டர் தள்ளி ஒரு கிராமப் புறத்தில், ஆதரவற்றோருக்கான இல்லம் மாதிரி ஓர் இடத்தில் கொடுத்த வேலை செய்து வாழ்ந்த பெண் என்று தெரிய வந்ததாம்.

ஒரு தரும காரியமாக, அதை இலவசமாக நடத்தி வந்த பெரியவர் இறந்து போனார். அவர் மறைந்துவிட்ட நிலையில், அடுத்த தலைமுறை வேறு மாதிரி யோசித்திருக்கிறது.

அந்த இல்லம் முறைப்படியாக அரசு அனுமதியில் நடந்தது அல்ல. அங்கிருந்து தற்செயலாகவோ, அங்கே இருக்கப் பிடிக்காமலோ வெளியேறிவிட்ட அவளை, இல்லத்தில் தேடவும் இல்லை .

அந்த நிலையில் அவள் இங்கிருப்பதே மேல் என்று நல்லவரும், வாகதீசனுக்கு நண்பருமான அந்தக் காவல் அதிகாரிக்குத் தோன்றிவிட்டது. எனவே, அவள் உங்களுடனேயே இருக்கட்டும் என்றாராம்.

அவளும் தன்னாலான வேலைகளைச் செய்து கொடுத்து, அந்தக் குடும்பத்தோடு ஒட்டிக் கொண்டாள்.

பெரிதாக யோசித்து எதையும் செய்வதில்லை. ஆனால் சொன்னால் செய்வாள். சின்னச் சின்ன வேலைகளைச் செய்யக் கொடுக்கவே மெல்ல அதை வழக்கமாக்கிக் கொண்டாள். தோட்டத்துக்கு நீர் ஊற்றுவது, துவைத்த துணி காயப்போட்டு மடிப்பது, இவை போன்ற எளிய வேலைகள். தூசி தும்பு இருந்தால் பார்த்துப் பார்த்து சுத்தம் செய்வாள். வயதாகிக் கொண்டிருந்த பாட்டிக்கு, இது பெரிய உதவியாக இருந்தது.

சும்மா வாய் பேசுவதும் இல்லை.

அப்போது சுகந்தினிக்கு ஐந்து வயது. பார்த்தவுடன் சிறுமியுடன் ஒட்டிப் போனாள். சுகந்தினியும் அப்படியே.

அதிலிருந்து பல ஆண்டுகளாக அவர்களோடுதான் வசித்துக் கொண்டிருக்கிறாள். அப்படியே வீட்டின் ஓர் அங்கமாகவே மரகதம் மாறிப் போனாள்.

இப்படியே பதினெட்டு ஆண்டுகள் ஓடிப் போயின.

பள்ளிப் படிப்பு முடிந்து, சுகந்தினி கல்லூரி மாணவியாக அடியெடுத்து வைத்த ஆண்டு, அந்தக் கூட்டுக்குள் அடைக்கலமாக வந்து சேர்ந்த இன்னொருவன், கண்ணன்.

வாரம் ஒரு நாள் உழைப்பு தானம் செய்வது தாத்தாவின் வழக்கம். முடிந்தால் பாட்டியும் செய்வதுதான்.

மடத்தில் சிகிச்சைக்கு வந்த ஒருத்தி, கணவனும் மனைவியுமாக முகம் சுளிக்காமல் பணி புரிவதைப் பார்த்துக் கொண்டே இருந்திருக்கிறாள்.

உயிர்க் கொல்லி நோய் அவளுக்கு. உறவு, நட்பு என்று உதவிக்கு யாரும் இல்லாமல் இங்கே வந்து சேர்ந்திருந்தாள். என்றோ போயிருக்க வேண்டிய அவளது உயிரைப் பிடித்து வைத்திருந்ததே மூன்று வயது நிரம்பாத மகனின் எதிர்காலம் பற்றிய கவலைதான்.

தானாக வந்து பணி புரியும் வாகதீசன் தம்பதியிடம் அவளுக்குப் பெரு மதிப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டிருந்தது. மகனை வளர்த்து ஆளாக்க முடியுமா என்று அவர்களிடம் கேட்டாளாம்.

அவ்வளவுதான். பெற்றோரை இழந்து அழுதுகொண்டு கிடந்த பேத்திதான், பெரியவர்களின் நினைவுக்கு வந்தாளாம். தயங்காமல் தலையாட்டிவிட்டார்கள்!

படிக்க வையுங்கள் என்று மட்டும் கேட்டதோடு அவளது உயிர்

அடங்கிவிட, மடத்திலும் சம்மதிக்கவே, தாத்தாவும் பாட்டியும் கண்ணனை வீட்டுக்கு அழைத்து வந்தார்கள்.

“நமக்கு வரும் பென்ஷன் இதற்கு மேல் தாங்காது. நிறுத்திக் கொள்ளுவோம் “ என்று இருவரும் பேசிக் கொண்டதாகக் கூறிப் பாட்டி. சுகந்தினியிடம் சிறுவனைக் கொடுத்தாள்.

ஆனால் இடையே பாய்ந்து வந்து “அப்பு அப்பு, என் கண்ணப்பு வந்தாயா?” என்று பையனை வாங்கிக் கொண்டவள் மரகதமே!

அவளிடம் அந்த அளவு உயிர்ப்பை கண்டு மற்ற மூவருக்கும் ஆச்சரியமாகிப் போயிற்று.

“அப்பு, கண்ணப்ப் என்று பிள்ளையை அணைத்த மரகதம் பையனிடம் உயிராக இருந்தாள். அவளது ஒளி மங்கிய கண்களில் உயிர் தெரிந்தது. முதல் சில நாட்கள், கையை விட்டுப் பிள்ளையை இறக்கவே இல்லை!

பெற்றவளும் செல்லமாகக் “கண்ணு, கண்ணா” என்றே அவனை அழைத்துப் பழகியிருந்ததால், சிறுவனைக் கண்ணன் என்றே எல்லோரும் கூப்பிடலாயினர்.

அவனுக்கும் அது இயல்பாகவே தோன்றிற்று.

சற்று இயல்புக்குத் திரும்பியதும், மரகதத்திடம் “யார் அந்த கண்ணப்பு?” என்று வாகதீசன் விசாரித்துப் பார்த்தார்.

“இதோ இருக்கிறானே! இவன்தானே என் கண்ணப்பு!” என்று மரகதம் சிரிக்கவும், இளகி, “இப்படியே இருக்கட்டும்.” என்று பாட்டி கூற, அப்படியே விட்டுவிட்டனர்.

ஒருவேளை மரகதத்துடைய அந்தக் கண்ணப்பு இறந்து போயிருந்தால், அந்த நினைவுகளைத் தூண்டி அவளை வருத்துவானேன் என்ற எண்ணம் சிவகாமிக்கு.

அவர்கள் விட்டுவிட்டாலும், மரகதம் தானாகவே அவ்வப்போது பையனிடம் ஏதோ சொல்வாள். யாரோ அன்னத்தாயின் பெயர் வரும். “அவள் வந்ததும் நாம் சேர்ந்து போவோம்” என்பாள்.

எங்கே என்று கேட்டால், ஒன்றும் புரியாமல் மலங்க விழிப்பாள். கண்களில் கலக்கமும் பயமுமாகச் சுற்று முற்றும் பார்ப்பாள்.

அவள் கலங்குவது தாங்காமல், அவளிடம் எந்தக் கேள்வியுமே கேட்க வேண்டாம் என்று பெரியவர்கள் முடிவெடுத்தனர்.

மேலே ஐந்து ஆண்டுகள் நல்லபடியாக, சந்தோஷமாகவே

கழிந்தன. ஒரு குழந்தைப் பையனின் வளர்ச்சி எல்லோர் முகங்களிலும் மலர்ச்சியைக் கொண்டு வந்தது.

சுகந்தினியின் படிப்பு முடிந்து, அவள் வேலைக்குச் செல்லத் தொடங்கினாள்.

இனியும் இப்படியே எல்லாப் பணத்தையும் செலவு செய்துகொண்டே இருக்கக் கூடாது. சுகந்தியின் திருமணத்துக்குச் சேர்க்க வேண்டும் என்றாள் சிவகாமி.

சற்று யோசித்துவிட்டு, “செல்லத்தின் வருமானத்தைச் சேர்ப்போம். மற்றபடி நம்மால் ஆனதைத் தொடர்ந்து செய்வோம்.” என்று வாகதீசன் சொன்னதும் சுகந்தனியின் காதில் விழுந்தது.

திருமணமா . . என்று யோசனை ஓடிற்று.

ஆனால் அது பற்றி மேலே அவள் எண்ணிப் பார்க்குமுன், “அக்கா, இன்னைக்குக் கணக்கு டெஸ்டிலே எனக்கு ரெண்டு மார்க் போயே போச்! பத்துக்கு எட்டுதான் கிடைச்சுது.” என்று கண்ணன் ஓடி வந்தான்.

தன் யோசனை அடியோடு மறந்து, “ஏன் கண்ணா? கணக்குப் போட உனக்குப் பிடிக்குமே! அப்புறம் எப்படி இரண்டு மதிப்பெண் கம்மியாகிப் போயிற்று? எதில் விட்டாய்?” என்று அவனது பாடத்தில் மூழ்கினாள் பெரியவள்.

எப்போதுமே சிறுவனின் கல்வி அவளது பொறுப்பு! புத்திசாலிப் பையனாக அவனும் விரும்பிப் படிக்க, கற்றுக் கொடுப்பது அவளுக்கும் பிடித்துப் போயிற்று.

இருவரும் படிப்பில் மூழ்குவதை மரகதம் அருகிருந்து சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டிருப்பாள். சற்றுத் தள்ளியிருந்து ஏதாவது தையல் வேலை செய்தபடி பாட்டியும், கணக்கு வழக்குப் பார்த்தபடி தாத்தாவும் எல்லோருமே ஒருவரை ஒருவர் பார்க்கும் இடத்தில் இருப்பார்கள்.

அவ்வப்போது ஏதாவது பேச்சும் நடக்கும். மொத்தத்தில் வயது பாகுபாடின்றி ஐவருக்கும் இடையே இயல்பாக ஏற்பட்டிருந்த நெருக்கம் மேலும் மேலும் வலுவடைந்திருந்தது.

இப்படியே சந்தோஷமாக வாழ்வதை விட்டு, என்ன கல்யாணம் என்றுகூட, சுகந்தினி நினைத்திருக்கிறாள்.

இந்த நிலையில்தான், ஒரு நாள் உட்கார்ந்த நிலையிலேயே மரகதம் தூங்கிவிட்டிருந்தாள். அடுத்தும் அவ்வப்போது இது நடந்தது.

இரவு சரியாகத் தூங்கவில்லை போல . . .அதிக வேலை செய்தாளோ . . . இப்படியெல்லாம் யோசிக்கும்போதே, இது தூக்கமில்லையோ, மயக்கமோ என்ற சந்தேகம் சுகந்தினிக்கு ஏற்பட்டது.

மருத்துவ ஆலோசனையைத் தேடிப் போனபோது, அவளது கவலையை அவரும் உறுதி செய்ததோடு, சிகிச்சைச் செலவு பற்றிய பெரிய குண்டையும் போட்டார்.

ஏற்கனவே பல பரிசோதனைகள், ஸ்கேன் என்று செலவான சிலபல ஆயிரங்கள் பெரிய பாதிப்பாக யாருக்கும் தோன்றவில்லை. ஆனால் மருத்துவர் கூறிய பல லட்சங்கள்?

நிச்சயமாகப் பெரிய தொகைதான். மூளையின் முக்கியப் பகுதியில் செய்யப்பட வேண்டியிருந்த அறுவை சிகிச்சை சாதாரணமானது அல்ல!

அந்த மாதிரிப் பணம் அவர்களிடம் இல்லை. சுகந்தினியின் வருமானத்தில் இன்னும் சேர்க்கத் தொடங்கவில்லை. வேலைக்குப் போக வர வசதியாக அவளுக்கு ஸ்கூட்டி வாங்கினார்கள். வாடகை வீடு என்றாலும், ரொம்ப காலமாகக் குடியிருக்கும் உரிமையில் சில சில்லறை மராமத்து வேலைகள் செய்தார்கள். கடன் வாங்கிப் பழக்கம் இல்லை. வாழ்க்கைச் செலவும் கூடிக்கொண்டேதானே போகிறது!

இப்படிப்பட்ட பெரிய தொகையை யார் கடன் கொடுப்பார்கள் என்பதோடு, வட்டியோடு திருப்பிக் கொடுப்பது எப்படி? கடன் கொடுப்போர் அதைக் கேட்பார்கள் அல்லவா?

துணிந்து கடன் கேட்டபோது, நிதி நிறுவனத்தாரும் அதையே கேட்டுப் பணம் தா மறுத்தார்கள். பிணையாக வைக்கச் சொந்த சொத்தும் இல்லையே.

மரகதம் எப்போதும் பத்திரமாக வைத்திருக்கும் பையைத் திறந்து பார்ப்பதற்கு, முதல் முறையாக முடிவு செய்தார் வாகதீசன்.

மிகவும் பிரியமாகப் பழகியபோதும் அந்தப் பையைத் தொட அவள் யாரையும் அனுமதித்தது இல்லை. பைக்குள் இருப்பது சில துணிகளே என்பது பையின் தோற்றத்திலேயே தெரியும். பதினெட்டு ஆண்டுகளில் அவை மிகவும் பழசாகிச் சிதைந்திருக்கவும் கூடும்.

ஆனால், அவற்றோடு மரகதம் பற்றிய ஏதேனும் விவரம் இருக்கக் கூடுமோ என்று வாகதீசன் எதிர்பார்த்தார்.

மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில், ஏதோ ஓர் “இல்ல”த்தில் தள்ளிவிட்டுப் போனவர்களைப் பற்றி இதுவரை அந்த வீட்டில் நினைத்துப் பார்த்தது கூடக் கிடையாது.

ஆனால் இன்று பிழைப்பதே சந்தேகத்துக்கு இடமாகிவிட்ட நிலையில், உறவென்று யாரும் இருந்தால் அவர்களுக்குத் தெரிவிப்பது கடமை என்று வாகதீசன் கருதினார்.

இன்னும் முக்கியமாக, ஒருவேளை அவளுடைய குடும்பத்தினர் மனம் மாறி, அவளைக் காப்பாற்ற முயற்சிக்கக் கூடும் அல்லவா?

யாரும் அவளைத் தேடும் முயற்சியே செய்யாத நிலையில், இது மிகவும் பலவீனமான நம்பிக்கையே என்றாலும், ஒரு முயற்சி செய்வது கடமை என்று அவருக்குத் தோன்றியது.

செய்யக் கூடிய முயற்சியைச் செய்துவிட்டால், அப்புறம் கடவுள் விட்ட வழி!

மனதினுள் மரகதத்திடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, இத்தனை ஆண்டுகளாக அவள் பத்திரப்படுத்தி வைத்திருந்த பையை முதல் தடவையாகத் திறந்து பார்க்கும்படி, பேத்தியை வாகதீசன் பணித்தார்.

அடுத்தவர் வீட்டுக்குள், அவர் அறியாமல் நுழைவது போன்ற கூச்சத்தை அடக்கிக்கொண்டு பையை ஆராய்ந்தால், அவர்களுக்குத் தேவையான விவரம் எதுவும் அதில் இல்லை!

அவர்கள் எண்ணியிருந்தது போலச் சில துணிகள், சுமார் மூன்று வயது சிறுவனுக்கு அணியக் கூடிய அளவில் இருந்தன.

உடைகள் அவளுடைய உண்மையான “கண்ணப்பு”வுக்கு உரியவை என்பது தெளிவாகப் புரிந்தது. முன்பு அந்தக் கண்ணப்பனுக்குப் பயன்படாமல் போனது போலவே, இப்போதும் அவை பயனற்றுப் போயின.

துணிகளை வெளியே எடுத்து வைத்துவிட்டுத் தேடியபோது, உள் புறத்தில் ஒரு “ஸிப்” தெரிந்தது. ஆவலாக “ஸிப்”பைத் திறந்து பார்த்தால், அதனுள் லேசாகப் பழுப்பு நிறம் ஏறிக்கொண்டிருந்த ஒரு புகைப்படம் கிடைத்தது. மரகதத்தின் படம்தான்.

அதில், மரகதம் இளம் பெண்ணாக நிறைய நகைகள் அணிந்து, ஐந்தாறு மாதக் கருவைச் சுமந்தபடி வெட்கச் சிரிப்புடன் நின்றிருந்தாள். தெரிய வந்தது அவ்வளவே!

மற்றபடி அவர்கள் விரும்பிய விவரங்கள் எதுவுமே பையில் இல்லை.

எத்தனை தரம் தேடினாலும் பாத்திரத்தில் இருந்தால்தானே கரண்டியில் வரும்?

ஏமாற்றத்துடன், “பழைய மாதிரியே பைக்குள் எல்லாவற்றையும் வைத்து, மரகதத்தின் அலமாரியிலும் வைத்துவிடம்மா.” என்றார் வாகதீசன்.

“சரி தாத்தா.” என்று துணிகளை பைக்குள் முன் மாதிரியே அடுக்கி வைத்தாள் பேத்தி.

அடுத்துப் படத்தை உள்ளே வைக்குமுன், “எவ்வளவு அழகாக இருக்கிறார்கள்.” என்று கூறி, மரகதத்தின் சிறு வயதுப் படத்தை மீண்டும் ஒரு முறை பார்த்த சுகந்தினிக்கு அதில் ஒரு துப்புக் கிடைத்தது!

# அத்தியாயம் -2

சுகந்தினி அந்தப் புகைப்படத்தை இப்படியும் அப்படியுமாகத் திருப்பித் திருப்பிப் பார்க்கவும், “எத்தனை விதமாகப் பார்த்தாலும் இருப்பதுதானே தெரியப் போகிறது? உள்ளே வைத்துவிட்டு வாம்மா. ஏதோ கடவுள் விட்ட வழி நடக்கட்டும்!” என்று சலிப்புடன் வாகதீசன் பேத்தியிடம் கூறினார்.

“அப்படியில்லை தாத்தா!” என்ற பேத்தியின் குரலில் பரபரப்பு தெரிந்தது. “தாத்தா, இந்தப் படத்தின் பின்னணியைப் பாருங்கள். ஒரு தொழிற்சாலை தெரிகிறதா? அதைத்தான் என்ன தொழிற்சாலை என்று கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். தொழிற்சாலைக்கு உள்ளே வைத்து ஃபோட்டோ எடுத்திருப்பதால், வெளி வாசல் பெயர்ப் பலகை படத்தில் விழவில்லை. உள்ளேயொ, சின்ன எழுத்தில் இருப்பதோடு, நிழலும் வெயிலுமாக விழுவதில் எழுத்துகள் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், பக்கத்தில் மழை வெள்ளமாக வந்தால் போவதற்காகச் சின்னதாக ஒரு பாலம் தெரிகிறது பாருங்கள். தினமும், இந்த இடம் தாண்டித்தான் நான் அலுவலகம் செல்கிறேன் என்பதால். . . .” என்று அவள் சொல்லும்போதே, வாகதீசன் அவசரமாகக் குறுக்கிட்டார்.

“பின்னே என்னம்மா? நாளை வேலைக்குப் போகிறபோது தொழிற்சாலை பெயரைத் தெரிந்துகொண்டு கொள்ளலாமே..” என்று ஆர்வத்துடன் கூறினார் அவர்.

தாத்தாவின் வேகத்தைப் பார்த்து, பேத்தி லேசாக முறுவலித்தாள்.

“அவசரப்படாதீர்கள் தாத்தா. மரகதம் ஆன்ட்டி நம் வீட்டுக்கு வந்தே பதினெட்டு ஆண்டுகள் ஆகிறது. அதற்கு முன்பாகவும் ஏதோ “இல்ல”த்தில் சில ஆண்டுகள் இருந்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள். எப்படியும் இருபது . . . இன்னும் கூடவே இருக்கலாம்., அத்தனை ஆண்டுகளுக்கு முன்பாக எடுக்கப்பட்ட படம் இது. இப்போது, அதே தொழில் நிறுவனமே அங்கே இருக்கிறதா என்பதே சந்தேகம். இதில் ஒரே தளமாகத் தெரிகிறது. இப்போது இங்கே இருப்பது நாலு மாடிக் கட்டிடம்! ஒருவேளை, இது அவர்களின் வளர்ச்சியாகவும் இருக்கலாம். அன்றி, இடத்தை வேறு யாராவது வாங்கி அவர்கள் அங்கே பெரிதாகக் கட்டியும் இருக்கலாம். அதனால்தான் நிறுவனப் பெயரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தேன்.” என்று விளக்கம் உரைத்தாள் பேத்தி.

பேத்தியின் கூற்று சரியாக இருக்கவே , அவரும் படத்தை வாங்கி ஆராய்ந்து பார்த்தார்.ஓரிரு எழுத்துக்கள் தவிர, அவராலும் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

படத்தில் இருந்த எழுத்துகளைக் குறித்து வைத்துக்கொண்டு, மறுநாள் மாலை வேலையிலிருந்து திரும்பி வரும்போது, அந்தத் தொழில் நிறுவனம் பற்றிய விவரம் அறிந்து வருவதாகச் சொன்னாள் சுகந்தினி.

ஒன்றுமில்லாததற்கு, ஏதோ ஒரு தொடக்கம் கிடைத்தது, வீட்டினர் மூவருக்குமே ஆறுதலாக இருந்தது.

மறுநாள் வேலைக்குக் கிளம்பிச் சென்று  ஒரு மணி நேரத்தில் சுகந்தினி தாத்தாவை அழைத்துப் பேசினாள்.

“தாத்தா, இது பழைய அதே நிறுவனம்தான். குணசீலன் இன்டஸ்ட்ரீஸ் என்று இருக்கிறது. இடையில் விடுபட்ட எழுத்துகள் எல்லாம் சரியாகப் பொருந்துகின்றன. மாலையில் திரும்பும்போது, மேலே என்ன செய்ய முடிகிறது என்று பார்க்கிறேன்.” என்று, கிடைத்த நல்ல செய்தியைப் பகிர்ந்துகொண்டாள்.

இன்னும் போக வேண்டியது வெகு தூரம் இருந்தது. இருபது ஆண்டுகளுக்கும் மேலாக மரகதத்தைத் தேடக் கூட இல்லாமல் அலட்சியப்படுத்தியிருந்த அவளுடைய குடும்பம் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது அவளை ஏற்பார்களா?

ஏற்பது, ஏற்காதது ஒரு புறம் இருக்கட்டும் , மனிதாபிமான அடிப்படையிலேனும் அவளது மருத்துவத்துக்குத் தேவையான பெரும் தோகையைத் தருவார்களா என்று பல கலக்கங்கள் அவர்களை ஆட்டிப் படைக்கத்தான் செய்தன.

ஆனால், அது பற்றி மேலே அடியெடுத்து வைப்பதற்கு ஒரு திசை தெரிந்ததே அப்போதைக்குப் பெரிதாகத் தோன்றியது.

ஆனால் மாலையில் சுகந்தினி ஒருவித முன்னேற்றமும் இல்லாமல் திரும்பி வரவும் பெரியவர்கள் முகம் வாடிப் போயிற்று.

“அந்தத் தொழிற்சாலைக்கு ஏகப்பட்ட செக்யூரிட்டி வைத்திருக்கிறார்கள், தாத்தா. யாரைப் பார்க்க வேண்டும்? எதற்காக? என்று கேள்வி மேல் கேள்வி கேட்கிறார்கள். நான் யாரை என்று பெயர் சொல்லட்டும்? ஒரு சினேகிதியுடைய அப்பா, பேர் சரியாகத் தெரியாது, பார்த்தால் அடையாளம் கண்டுகொள்வேன் என்று வாயில் வந்ததைச் சொல்லி சமாளித்தேன். அவ்வளவு பாதுகாப்பு, பந்தாவைப்

பார்க்கும்போது, தனியே உள்ளே செல்வதே தப்போ என்று எனக்குத் தயக்கமாகி விட்டது. என்ன செய்வது என்று யோசித்தபோது, கதவைத் திறக்கும்படி உள்ளிருந்து அந்த செக்யூரிடிக்கு உத்திரவு வந்திருக்க வேண்டும். “உரிமையாளர் கார் வருகிறது., விலகிக் கொள்ளம்மா” என்று அவன் கதவைத் திறக்கப் போனான். நானும் ஒதுங்கிப் போவது போல சற்றுத் தள்ளிப் போய்விட்டு, கேட் வழியே வந்த அந்தக் காரைப் பின்தொடர்ந்து போனேன். ஆனால் கொஞ்ச நேரத்தில் ஒரு சிக்னலில் காரைத் தவற விட்டுவிட்டேன், தாத்தா. நாளைக்கு இன்னும் கவனமாத் தொடர்ந்து போய் ஆன்ட்டி பற்றி அந்த ஆளிடம் பேசப் போகிறேன், தாத்தா.” என்று முடித்தாள்.

“செய்யம்மா. நாளைக்கு எப்படியாவது பேசிவிடு.” என்றனர் பெரியோர்.

மரகதத்தின் நிலைமை மோசமடைவதைப் பக்கத்தில் இருந்து பார்க்கிறவர்கள் அவர்கள் அல்லவா?

மறநாளும் இதுவே நடக்க, சுகந்தினியே பொறுமை இழந்தாள்.

“என்னம்மா, நாளுக்கு நாள் மரகதம் மோசமாவது போலத் தோன்றுகிறதே . . .” என்று பாட்டியும் தாத்தாவும் வருந்துவதைப் பார்க்க, அவள் தன குற்றம் போல உணர்ந்தாள்.

கண்ணன் வேறு, மரகதத்தின் படுக்கை அருகிலேயே சுருண்டு கிடந்தான்.

சே, அப்படியென்ன ஒரு காரை . . அதுவும் பெரிய காரை, ஒரு டூவீலரால் தொடர முடியாமல் போவது? இன்னொரு நாலு சக்கர வாகனத்தில் தொடர்வது கடினமாக இருக்கலாம். ஆனால் இரு சக்கர வண்டி? சின்ன இடத்திலேயே வளைந்து நெளிந்து முன்னேறிப் போய்விடலாம்.

அப்படி ஒரு ஸ்கூட்டியை வைத்துக்கொண்டு, அந்தப் பெரிய டயோட்டாவைத் தவற விடுவது என்றால், அவளுக்குத்தானே திறமையில்லை என்று பொருள்?

யாரும் எதுவும் சொல்லாமலே, “இன்று எப்படியாவது அந்த ஆளைப் பிடித்து விடுகிறேன், தாத்தா.” என்று சுகந்தினி சூளுரைத்தாள்.

இன்று அந்தக் குணசீலன் இன்டஸ்ட்ரீசுடைய முதலாளியைக் கவனமாகப் பின்தொடர்ந்து போய்ச் சந்தித்தாக வேண்டும். அப்படி இன்றும் அவன் நழுவிச் சென்றுவிட்டால், நாளை அவனது தொழிற்சாலை வாயிலில் நின்று அடாவடி செய்தேனும் அவனை

நிறுத்திப் பேசியாக வேண்டும் என்று மனதுக்குள் உறுதி செய்துகொண்ட பிறகே, அன்றைய வேலையை அவளால் அமைதியாகச் செய்ய முடிந்தது.

அன்றைய வேலை முடிந்ததும், அதே நினைவாக வந்து சற்று மறைவாக நின்று, அந்தக் கார் வருவதற்காகக் காத்திருந்தாள்.

கார் வெளியே வந்தது. லேசான கறுப்படித்த கண்ணாடியின் பின் காராளனின் முகம் தெளிவாகத் தெரியாவிட்டாலும், வழக்கம்போலவே பெரும்சாலைப் போக்குவரத்தில் அந்தக் கார் எளிதாக இணைந்து செல்லலாயிற்று.

ஆனால் இந்த முறை காரை விட்டுவிடாமல், சற்று அருகாகவே அந்தக் காரைத் தொடர்ந்து சுகந்தினியும் செல்லலானாள். யூ திருப்பம் எடுத்துக் கார் சென்றபோதும் அப்படியே. இன்னும் ஒரு தரம் திரும்பிய கார், போக்கு வரத்து நெரிசலில் இருந்து விடுபட்டு வேகமாகச் செல்லலாயிற்று.

இதற்கு மேல் அந்தக் காரை ஒட்டிச் செல்லத் தயங்கி, சற்றுத் தூரமாகவே அந்தக் காரின் பின்னே சுகந்தினி சென்றாள்.

அடுத்தடுத்துக் கிளைப் பாதைகளில் வளைந்து திரும்பி, விரைந்து சென்ற கார் திடுமெனக் காணாமல் போயிற்று.

இவ்வளவு தூரம் வந்துவிட்டு, இப்போது விட்டுவிடுவதா?

சற்று யோசித்துவிட்டு, அவளும் அந்தச் செம்மண் பாதையிலேயே செல்லலானாள்.

எப்படியும், இவனை இன்று பிடித்தாக வேண்டும். மரகதம் ஆன்ட்டியின் சிகிச்சைக்கு விரைவிலே பணம் வேண்டுமே. அதைத் தள்ளிப்போட்டுக்கொண்டே இருக்க முடியாது!

வளைந்து சென்ற செம்மண் பாதையின் இருபுறமும் பசிய வயல்கள் அழகாகக் காட்சியளித்தன. ஆனால் அழகை ரசிப்பதில் கவனம் குறைந்தால் சறுக்கி வயலுக்குள் விழ வேண்டியிருக்கும்.

அத்தோடு, அந்தக் காரை வேறு கண்டுபிடித்தாக வேண்டும்.

இருபுறமும் எட்டிப் பார்த்தவாறு மெதுவாக ஓட்டுகையில் பின்னிருந்து ஒரு கார் வேகமாக வந்து., அகலக் குறைவான அந்தச் சாலையில் அவளை ஓரம்கட்டி, வழி மறித்து நின்றது.

கார் இடித்துத் தள்ளி விடுமோ என்ற பயத்தில் இதயம் தொண்டையில் வந்து துடிக்க, முடிந்த வரை ஓரத்தில் ஸ்கூட்டியைக்

கவனமாக நிறுத்திவிட்டு, ஆத்திரமாகத் திரும்பினாள்.

“ஏய், நீ என்ன நினைத்துக் கொண்டு, இப்படிப் பின்னாலே வந்தாய்?” என்று அதட்டியவளின் குரல் தானாகத் தேய்ந்து நின்றது.

ஏனெனில் அவளை ஓரம் கட்டி நிறுத்தியது, இவ்வளவு நேரமாக அவள் பின் தொடர்ந்து வந்த காரே. காரின் பின்புறமும், சுற்றுமுற்றும் கண்ணுக்கெட்டியவரை யாருமற்ற தனி வழிச் சாலை!

அப்படியானால் . . . இந்தத் தனி வழிச் சாலையில் அவள் செல்வதைக் கவனித்து, அவன் வேண்டுமென்றே அவளை இங்கே கொணர்ந்து மடக்கியிருக்கிறானா? அல்லது முன்பே கவனித்திருப்பானா? ஆனால் ஏன் இப்படி?

சட்டென உள்ளூரச் சிலீரென்று ஒரு பயம்.தாக்க, உடனே கிளம்பி விட வசதியாக வண்டியை நகர்த்த முயன்றாள் அவள்.

ஆனால் அதற்குள்ளாகக் காரிலிருந்து இறங்கி வந்திருந்த அவன், ஒரு கையை ஸ்கூட்டி மேல் அழுத்தமாக வைத்து, “ஜாக்கிரதை. லேசாகத் தள்ளினாலே சரிவில் உருண்டு வயலில் விழுந்து விடுவாய்.” என்றான் அதட்டலாக.

அடி வயிற்றில் எழுந்த அச்சத்தை மறைத்து, “என்ன மிரட்டுகிறாய்? எதற்காக என் பின்னே வந்து . . .” என்று அதட்டிப் பேச முயன்றவளின் பேச்சில் “போதும்!” என்று குறுக்கிட்டு நிறுத்தி, “நான் கேட்க வேண்டிய கேள்வியெல்லாம் நீ கேட்கிறாயே? விசித்திரமாக இல்லை?” என்றான் அவன் ஏளனமாக.

அவன் கேட்க வேண்டிய கேள்வி!

அப்படியானால் யாரோ தனியாகப் போகிறவளை அவன் மடக்கவில்லை. அவள் காரைத் தொடர்ந்ததைக் கவனித்தே, பொறி வைத்துப் பிடிப்பது போல, இந்தத் தனியிடத்திற்கு வரவழைத்திருக்கிறான்.

சுனந்தினியும் அவனோடு பேச வேண்டும்தான். அதற்காகத்தானே இந்த அலைச்சல்!

ஆனால் பேசுவது, அவன் கை ஓங்கியிருக்க, செயலற்ற நிலையில் அவனிடம் மாட்டிக்கொண்டு அல்ல! இவன் எப்படிப்பட்டவனோ என்பது வேறு!

இப்போது என்ன செய்வது?

செய்வது அறியாமல் அவள் திகைத்து விழிக்க, அவன் கேட்டான்.

“இன்று மூன்றாவது நாள். ஒருத்தி, ஓர் இளம் பெண், என் காரின் பின்னே தினந்தோறும் தொடர்வதைக் கண்டுபிடிக்க முடியாத அளவு நான் ஒன்றும் முட்டாளல்ல. சொல்லு. எதற்காக என்னைத் தொடர்கிறாய்? வேவு பார்க்கிறாயா? என்னைப் பற்றி அறிந்து என்ன செய்யப் போகிறாய்? ஏதாவது சூழ்நிலையில் என்னை நிறுத்திப் பணம் பிடுங்கவா? அல்லது பணத்துக்காக எதைச் செய்யவும் தயார் என்று காட்டுவதற்காகவா?” ஒரு மாதிரி இளக்காரக் குரலில் அவன் பேசிக்கொண்டே போனான். “சொல்லு. என்னை. எதற்காகப் பின் தொடர்ந்தாய்?”

அவனது கற்பனைக் குற்றச்சாட்டுகள் அவளுக்கு ஆத்திரமூட்டியபோதும், மூன்று தினங்களாக அவன் பின்னே அவள் அலைந்தது உண்மைதானே?

முகம் கன்ற, சுனந்தினி உண்மையை ஒப்புக் கொண்டாள். “மூன்று நாட்களாக உங்களை நான் பின்தொடர்ந்தது உண்மைதான். ஆனால் அதன் காரணம், ஒரு முக்கியமான விஷயம் பற்றி உங்களிடம் நான் பேச வேண்டும் என்றுதான். அதற்காகவேதான் . . “ என்று அவள் சொல்லி வரும்போதே, அவன் பொறுமையற்றுக் குறுக்கிட்டான்.

“ஹூம், எதிர்பார்த்தேன்.” என்றான் மிகவும் எகத்தாளமாக. “அப்படி என்னிடம் நீ என்னம்மா பேச வேண்டும்? பேரமா? அழகாகத்தான் இருக்கிறோமே, அதைக் காட்டி நிறையக் கறக்கலாம் என்று நினைத்தாயா? . . “

மேலே மேலே அசிங்கமாக என்னவெல்லாம் சொல்லுகிறான்! இவனெல்லாம் நல்லவிதமாக ஒருவருக்கு உதவி செய்வானா, என்ன? இவனிடம் எதையும் கேட்பதே கேவலம்!

அடச்சீ என்பது போலக் கையால் ஒரு சைகையுடன் வெறுப்பாக நோக்கிவிட்டு, சுகந்தினி ஸ்கூட்டியை எடுக்க முயற்சி செய்தாள்.

இன்னமும் அருகே வந்து, அவள் கிளம்ப விடாமல் தடுத்து, “தள்ளி விட்டால், ரோடு சரிவும் அடுத்து உழுது சகதியாக இருக்கும் வயலுமாக உடம்பும் உடையும் சேறாவதோடு, காயமும் ஏற்படக் கூடும். எல்லாம் பரவாயில்லை என்றால் கிளம்ப முயற்சி செய். அல்லது, மரியாதையாக என்னைப் பின் பற்றியதன் காரணத்தைச் சொல்லு. சொல்லு, பணம் பறிக்கும் முயற்சிதானா?”

பணம் பணம் என்று அவன் கூறியது, அவள் மனதில் இன்னொரு பீதியைக் கிளப்பியது.

அந்தப் படத்தில் மரகதம் நிறைய நகைகளை அணிந்திருந்தாள். படத்தில் காணப்படும் அந்த நகைகளை முதலில் கொடு என்பானோ என்று தகராறு செய்வானோ என்றோர் எண்ணம் தோன்றவும், உண்மையான காரணத்தைச் சொல்லக் கூட, அவளுக்குத் தயக்கம் உண்டாயிற்று.

முதலில் அவனிடம் சிறைப்பட்டது போல நிற்கும் இந்த நிலையில் இருந்து வெளியே வரவேண்டும்.

எப்படி என்று அவள் யோசிப்பதற்குக் கூட இடம் தராமல், “என்ன நான் முதலில் சொன்னது போலத்தானா? அழகைக் காட்டிப் பணம் பறிக்கத்தானா?” என்று பொறுமையற்றுப் படபடததான் அவன்.

அவனது வார்த்தைகளிலும் ஏளனத்திலும் கொதித்துப் போன சுகந்தினி, என்ன வந்தாலும் வரட்டும் என்று  கைப்பையில் வைத்திருந்த ஃபோட்டோவை எடுத்து நீட்டினாள்.

ஒன்று அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவனான இவன், படத்தைப் பார்த்ததும், அடையாளம் புரியாமல் “யாரிவள்” என்று கேட்கக் கூடும். அல்லது, அத்தை, சித்தி என்று ஏதாவது உறவைச் சொல்லி, படத்தில் இருப்பவள் அணிந்திருக்கும் நகைகளைக் கொடு என்று அவளை விரட்டக் கூடும்.

எது நடந்தாலும், முன்னேப் பின்னே நகர முடியாமல் நின்று அவனது பேச்சைக் கேட்கிற கொடுமைக்குப் பரவாயில்லை  என்று தோன்றி விடவேதான், அவள் மரகதத்தின் புகைப்படத்தை அவனிடம் காட்டியது.

ஆனால் இதெல்லாம் பரவாயில்லை என்பது போல, அவன் முகம் செந்தணலாய்ச் சிவந்து சீறியது.

“ஏய்!” என்று உறுமியவன், நகர விடாமல் ஸ்கூட்டியைப் பிடித்திருந்த கைகளை எடுத்து, நெறித்து விடுகிறவன் போல அவளது கழுத்தைப் பிடித்துவிட்டான்.

எதிர்பாராத இந்தத் தாக்குதலில் சுகந்தினி தடுமாறி விழப் போக, ஸ்கூட்டரும் சரியலாயிற்று.

“சட்!” என்று எரிச்சலுற்றவன், பற்றியிருந்த கழுத்தை விட்டுத் தடுமாறிய அவளை ஒரு கரத்தாலும், சரிந்து கொண்டிருந்த ஸ்கூட்டியை ஒரு கையாலும் பிடித்து நிறுத்தினான்.

அவனது உதவியால் உடல் தன்னிலைக்கு வந்துவிட, அவளும் சேர்ந்து ஸ்கூட்டியை இழுத்துச் சாலையில் நிறுத்தினார்கள்.

வாகனமோ அவளோ வயலுக்குள் விழப் போவதில்லை என்று தெரிந்த வினாடியிலேயே, கார்க்காரன் மீண்டும் பொழியத் தொடங்கிவிட்டான்.

“சொல்லு, யார் நீ? இவளது அடுத்த வாரிசா? எதற்கு வந்தாய்? பணம் வேண்டுமாமா? அதற்காகத்தான் அவளிடமிருந்து தூது வந்திருக்கிறாயா? ஆடிய ஆட்டமெல்லாம் முடிந்து, இன்னும் ஏதாவது பெயருமா என்று கேட்டு அனுப்பினாளா? அவளுக்காகத் தூது வந்தாயா? அல்லது, அப்படியே உன் வாடிக்கையைப் பெருக்க வந்தாயா? . .”

செவிகளில் நாராசம் பாய்ந்தது போல என்று சுகந்தினி படித்திருக்கிறாள். நாராசம் என்பது , காதுக்குள் பாயக் கூடிய சிறு அம்பு என்றும் கேள்விப் பட்டிருக்கிறாள்.

ஆனால், வெறும் வார்த்தைகளைக் கேட்கும்போதே இப்படி வலிக்கும் என்று அனுபவித்தபோதுதான் அவளுக்குத் தெரிந்தது.

காதுகளைக் கைகளால் பொத்திக்கொண்டு “போதும், நிறுத்துங்கள்!” என்று அவள் அலறியது, அவளே எதிர்பாராத செயல்.

அந்தக் கத்தலில் அவனும் ஒரு கணம் வாயடைத்து நிறுத்த, இப்போது சொல்மழை பொழிந்தது அவள்.

“சேச்சே! என்ன மனிதர் நீங்கள்? வாயைத் திறந்தாலே நாற்றமடிக்கும் பேச்சுத்தான் பேச வருமா? அசிங்க அசிங்கமாக என்னவெல்லாம் பிதற்றுகிறீர்கள்? ஏன் சார், கொஞ்சம் நல்ல விதமாகவும் யோசிப்பதுதானே?

“இந்த ஆன்ட்டி எப்படிப் பட்டவர்கள் என்று உங்களுக்கு என்ன தெரியும்? மரகதம் ஆன்ட்டி மன நிலை சரியில்லாதவர்கள் பாவம்! சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பாக என் தாத்தாவும் பாட்டியும் இவர்களை எங்கள் வீட்டுக்குக் கூட்டி வந்தார்கள். கைப்பை ஒன்று வைத்திருந்தார்களாம். மலங்க விழித்துக் கொண்டு தெருவில் நின்றார்களாம். கூட்டி வந்து உணவு கொடுத்தால் உண்டுவிட்டு அப்படியே விழுந்து தூங்கிவிட்டார்களாம். எத்தனை நாள் பட்டினியோ?

“விசாரித்துப் பார்த்தால் அவர்களுக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லையாம், பாவம். அவர்கள் வெளியே போகப் பயப்படவே, யாரும் தேடி வந்தால் சொல்லுங்கள் என்று ஏரியா இன்ஸ்பெக்டரிடம் சொல்லிவிட்டுத் தாத்தா பாட்டி எங்கள் வீட்டிலேயே ஆன்ட்டிக்குத் தங்க இடம் கொடுத்தார்கள்.

“அதிகாரியாக ஆய்வாளர் விசாரித்ததில், அதற்கு முன்பாகச் சில ஆண்டுகளாக ஆன்ட்டி ஓர் இல்லத்தில் இருந்ததாகவும், அதை நடத்திய பெரியவர் சமீபத்தில் இறந்து நிலைமை மாறியதால் அங்கே இருக்க முடியாமல் வெளியேறி இருக்கிறார்கள் என்றும் தெரிய வந்தது. பாவம், இவர்கள் உங்களுடனேயே இருக்கட்டுமே என்றுவிட்டார் காவல் அதிகாரி.

“அது, சும்மா சொந்தப் பணத்தைக் கொண்டு தரும காரியமாக ஒருவர் நடத்தி வந்த இல்லமாம் முறைப்படிப் பதிவு செய்யாதது. வெளியேறியவர்களை யாரும் தேடுவதாகவும் இல்லை. அதிலிருந்து, சுமார் பதினெட்டு ஆண்டுகளாக, ஆன்ட்டி எங்கள் வீட்டிலேயே இருக்கிறார்கள்.

“சென்ற மாதத்திலிருந்து ஆன்ட்டிக்கு உடம்பு சரியில்லை. மருத்துவரிடம் கூட்டிப் போனோம். எப்போதோ தலையில் அடி பட்டதால் ஏற்பட்ட மூளை தொடர்பாக நோய். சீக்கிரமே அறுவை சிகிச்கை செய்தாக வேண்டும். செலவு பல லட்சங்கள் ஆகும் என்று மருத்துவமனையில் சொல்கிறார்கள். பணத்துக்கு நாங்கள் எங்கே போவது?

“என் தாத்தா பாட்டிக்குப் பணத்திடம் மதிப்புக் கிடையாது. செலவு போகத் தருமத்துக்குக் கொடுத்துவிடுவார்கள். பணத்தைச் சேமிப்பதே இல்லை. ஏதேனும் அவசரத்துக்கு என்று, கையில் இருப்பாக ஓரளவு வைத்திருப்பார்கள். அவ்வளவுதான்.

“ஆனால் இந்த சிகிச்சைக்குப் பணம் கட்டாயம் தேவை. பெரிய தொகை! அதற்கு ஏதாவது வழி கிடைக்கக் கூடுமோ என்றுதான், இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, முதல் முறையாக ஆன்ட்டி அறியாமல் அவர்கள் பையை எடுத்துத் திறந்து பார்த்தோம்.

“பைக்குள் இந்தப் படம் இருந்தது. பின்னணியில் பாருங்கள்., உங்கள் தொழிற்சாலை தெரிகிறது. இஇந்த வழியில்தான் நான் வேலைக்குப் போவதும் வருவதும். “ஆன்ட்டி அணிந்திருக்கும் நகைகள், நிற்கும் நிலையைப் பார்த்தால், உரிமை உள்ளவர்கள் போலத் தோன்றவே, அந்த நிலையில் உள்ள யாரிடமேனும் கேட்லாம் என்று வந்தேன்.

“உரிமையாளர் கார் என்று காவலாள் கூறவே பின் தொடர்ந்தேன். நடந்தது எல்லாமே இதுதான். இவ்வளவுதான். மமற்றபடி நீங் . .நீங்கள் நினைத்தது, பேசியது போல . . எளதுவும் இஇல்லை . . “ என்று இடை விடாமல் அவள் பேசி முடித்தபோது, அவளுக்கு மூச்சு வாங்கத்

தொடங்கியிருந்தது.

குரல் தழுதழுக்க உதடு துடிக்கத் தொடர்ந்து பேச முடியாமல் சலிப்பான ஒரு கையசைவுடன், சுகந்தினி பேச்சை நிறுத்தினாள்.

அவள் மூச்சு வாங்கிக்கொண்டு நின்ற சிறு அமைதியின் பின், சற்று அமைதியான குரலில், "உன் கூற்றை, நீ கூறியதில் பெரும்பாலானவற்றை, என்னால் சரி பார்க்க முடியும் தெரியுமா? " என்றான் அவன்.

வெறுப்புடன் அவனைப் பார்த்தாள் சுகந்தினி. "தாராளமாகச் செய்யுங்கள். நான் கூறியதில் ஒரு வார்த்தையேனும் பொய் இருந்தால்தானே, நீங்கள் விசாரித்து அறிவதை நான் தடுக்க எண்ணுவேன்? ஆனால் ஒன்று, செய்வது என்னவானாலும் சீக்கிரமாகச் செய்யுங்கள். இன்னும் பணத்துக்கு ஏற்பாடு பண்ணவில்லையா என்று வைத்தியர் எங்களை விரட்டுகிறார். காலம் தாழ்த்தத் தாழ்த்த, நாளுக்கு நாள் கூட ரொம்ப ஆபத்தாம். . . .உயிருக்குக்கூட என்றார் டாக்டர். " என்றாள் எங்கோ பார்த்தபடி.

ஐயோ! அப்படி ஆகிவிடக் கூடாதே என்று அவள் மனம் தவித்தது. கடவுளே, தயவுபண்ணி ஆன்ட்டியைக் காப்பாற்று என்று உள்ளூர வேண்டிக் கொண்டாள் அவள்.

சற்று நேரம் படத்தையே பார்த்தபடி, அவன் அசையாமல் நின்றான்.

பிறகு, "பதினெட்டு ஆண்டுகளாக, இவர்கள் உங்கள் வீட்டிலேதான் இருக்கிறார்களா?" என்று யோசனையோடு கேட்டான்.

கொட்டித் தீர்த்த படபடப்பு, அவளுக்கு இன்னமும் முழுதாக அடங்கவில்லை. இந்நிலையில் அவன் கேட்ட கேள்வி அவளுக்கு ஆத்திரமூட்டியது.

இவ்வளவு நேரம் அவள் கத்தியது ஒன்றுமா, அவன் மண்டைக்குள் புகவில்லை?

கோபத்தை அடக்கிக்கொண்டு அவனை வெறித்து நோக்கி,
" அப்படித்தான் சொன்னேன்." என்றாள் சுருக்கமாக.

ஆனால், "நிச்சயமாகவா?" என்று அவன் மீண்டும் கேட்கவும், அவளது பொறுமை பறந்தது.

"இப்போது உங்களுக்கு என்ன பிரச்சினை? உங்களுக்குக் காது சரியாகக் கேட்கும்தானே?" என்று குத்தலாகக் கேட்டாள்.

ஏன்? ஏளனம், எகத்தாளம் எல்லாம் இவனுக்கு மட்டும்தான் வருமா?

ஆனால் அவளது பதிலில் அவன் ஏனோ சீற்றம் கொள்ளவில்லை. தன் யோசனையிலேயே மூழ்கியவனாக, “இவர்கள் இந்தப் பிராந்தியத்திலேயே இல்லை என்று எண்ணிக் கொண்டிருந்தேன். . . “ என்று தன் கேள்வியின் காரணத்தைச் சொன்னான்.

ஆனால் சுகந்தினியின் ஆத்திரம் அடங்கவில்லை. “அது எனக்குத் தெரியாது! ஆனால், நான் சொன்னது உண்மை. தேவையென்றால் நீங்கள் விசாரித்து சரிபார்க்கக் கூடிய உண்மை!” என்று பழைய குரலிலேயே பதில் கூறினாள்.

“பதினெட்டு ஆண்டுகள்! எப்படி?!” என்றுரைத்து நம்ப முடியாதவன் போலத் தலையசைத்தான் அவன்.

இவன் மட்டும் அவள் சொன்னது பொய் என்று ஒரு வார்த்தை சொல்லட்டும்., வந்தது வரட்டும் என்று இவன் மேல் பாய்ந்து நகங்களால் முகமெங்கும் கீறிக் கிழித்துவிட வேண்டும் என்று தனக்குள்ளே சூளுரைத்தபடித் தயாராக நின்றாள் சுகந்தினி!

# அத்தியாயம் -3

உடலும் மனமும் இறுகப் பாய்ந்து தாக்கத் தயாராக சுகந்தினி நின்றதை அந்த அவன் கவனித்ததாகவே தெரியவில்லை.

படத்திலேயே கண்களை வைத்து, “அந்த . . இவர்களது அந்தப் பையில் வேறே என்னென்ன இருந்தது?” என்று விவரம் கேட்டான்.

வீராதி வீரம் சொத்தென்று போய்விட, “உருப்படியாக ஒன்றும் இல்லை. ரொம்பப் பழைய டிசைனில் குழந்தைச் சட்டை, கால்சட்டை இரண்டு செட் மட்டும் இருந்தது. பின் . .சின்ன பவுடர் டப்பா. . .குழந்தை பவுடர். ஒரு சின்ன டவல். அவ்வளவுதான். ஆனால், அவர்களை அடையாளம் காட்டும் எதுவும் இல்லை. கொஞ்சம் புரிந்தது, உங்கள் தொழிற்சாலைப் பின்னணிதான். அதனால்தான் அங்கே வந்து உங்கள் காரைத் தொடர்ந்தேன்.” என்று சின்னக் குரலில் சொன்னாள் அவள்.

“ஏன்? வேவு பார்ப்பது போலக் காரை ஏன் தொடர வேண்டும்? நேராக உள்ளே வந்து விவரம் கேட்டிருக்கலாமே!” என்று கேட்டான் அவன்.

எப்படியாவது அவளிடம் குற்றம் காண முயற்சிக்கிறான் என்று அவளுக்குத் தோன்றியது. அவளுக்கு மட்டும் திருப்பிக் கொடுக்கத் தெரியாதா?

“உள்ளே வருவதா? சார், உங்கள் செக்யூரிடி என்ன? பந்தா என்ன? அது தாண்டி உள்ளே வருவதானாலும், உங்கள் நிறுவனம் எப்படிப் பட்டதோ, என்னவோ? தொழிற்சாலையின் உள்ளே, நீங்கள், உங்கள் ஆட்கள் எல்லோரும் எப்படியோ? என்ன தொழிலோ? ஏதாவது சட்ட விரோதமானதாக இருந்து, மோப்பம் பிடிக்க வந்ததாக எண்ணி என்னமாவது பண்ணிவிட்டால்? இப்போது கூட நடுத் தெருவிலேயே கழுத்தைப் பிடித்தீர்களே! அங்கே உள்ளே வந்தால் கொன்று புதைத்துவிட மாட்டீர்கள் என்று எனக்கு என்ன நிச்சயம்? ஒன்றும் தெரியாமல் எப்படி உள்ளே வருவது?” என்று தலை நிமிர்ந்து கேட்டாள் சுகந்தினி.

காரணமே இல்லாமல் என்னை என்னவெல்லாம் சொன்னாய்? இப்போது வாங்கிக் கட்டு என்று கறுவியது அவள் மனம்.

அத்தோடு படத்தில் இருக்கும் மரகதம் ஆன்ட்டியை இவனுக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் கை மீறிப் போய்விட மாட்டான் என்கிற தைரியமும் அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

ஏற்றாற்போல அவனும் ஒரு கணம் தயங்கிவிட்டு, “ஆனால் காரைப் பின்தொடர்ந்து வந்து என்ன செய்வதாக உத்தேசம்? என் வீடு மட்டும் சிலந்திக் கூடாக இராது என்று உனக்கு என்ன நிச்சயம்?” என்று கேட்டான்.

“அதெப்படி இருக்கும்?” என்று பதில் கேள்வி கேட்டாள் சுகந்தினி. “உங்கள் வீட்டில்  தாயார் தந்தை, மனைவி என்று உறவினர் இருப்பார்களே! அவர்கள் முன்னிலையில் நல்லவராகத்தானே காட்டிக் கொளவீர்கள்? அந்த நிச்சயம்தான்.”

“ஆனால் . . ..” என்று தொடங்கிவிட்டு நிறுத்திய அவன் வேறு பேசினான். “இதோ பார். நாம் இப்படியே முடிவற்று வாதாடிக்கொண்டே போகலாம். ஆனால் அதற்கு அவசியம் இல்லை. படத்தில் இருக்கும் இவர்களுக்கு வைத்தியம் நடக்கும் மருத்துவமனை, அங்கே இவர்களின் பொறுப்பேற்றிருக்கும் மருத்துவர், அடுத்து உன் செல்ஃபோன் எண், முகவரி எல்லாம் தந்துவிட்டுப் போ. நான் . . “

சட்டெனக் குறுக்கிட்டு, “ஏன் சார், எல்லாம் கிடைத்துவிட்டால் உங்களுக்கு உளவு பார்க்க எளிதாக இருக்குமாக்கும்?” என்றாள் அவள் ஏளனமாக.

“அப்படித்தான் என்று சொல்வதற்கு இல்லை. எப்படியும் கட்டாயமாக ஓரளவு ஆராய்வேன்தான். இந்தக் காலத்தில் கண்ணை மூடிக்கொண்டு யாரையும் நம்ப முடியாது. ஆனால், இவர்களது வைத்தியத்தில் தொய்வு விழாமல் பாதுகாப்பதற்காகவும் எனக்கு இதெல்லாம் அவசியம்.” என்றான் அவன். .

“ஆனால் நான் மட்டும் உங்களை எப்படி நம்புவது?” என்று திருப்பிக் கேட்டாள் சுகந்தினி. “இவர்கள் இவர்கள் என்கிறீர்களே தவிர, உங்களுக்கு மரகதம் ஆன்ட்டி யார், எப்படித் தெரியும் என்று எதையும் நீங்கள் தெரிவிக்கவே இல்லையே!”

சொல்வதா வேண்டாமா என்ற தயக்கத்திலோ, அல்லது சொல்லப் பிடிக்காமலோ அவன் உடனே பதில் கூறவில்லை.

அவனுக்கும் ஏதோ தேவை என்று தெரிந்தபின் முந்திக்கொண்டு காலில் விழ அவளுக்கும் விருப்பமில்லை. நாக் கூசாமல் என்னவெல்லாம் சொன்னான்? பேசிய அதிகப்படிக்கு, அவன் சற்றேனும் அனுபவித்தாக வேண்டாமா?

அவள் பேசாமலே நிற்க, சற்று யோசித்துவிட்டுத் தோளைக் குலுக்கி, “இவர்கள் என்னைப் பெற்றவர்கள்.” என்றான் அவன்

சுருக்கமாக.

உள்ளூர சுகந்தினி ரொம்பவே திகைத்துப் போனாள்.

திகைப்பு, பெற்றவள் என்றதில் அல்ல. உரிமை உள்ளவள் போல மரகதம் நின்ற தோற்றமே, இவனுக்கு ஒரு நெருங்கிய உறவு என்று சொல்லாமல் சொன்னதுதான்.

ஆனால், படத்தைப் பார்த்ததும் இதே பெற்றவளைப் பற்றி என்ன அசிங்கமாகப் பேசினான்! இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பிரிந்திருந்த மகன் மனதில் எப்படிப்பட்ட விஷம் வளர்ந்திருக்கிறது! யார் இதை வளர்த்தார்கள்! ஏன் வளர்த்தார்கள்?

இப்போது யாரிடம் பரிதாபம் கொள்வது? தாயிடமா? மகனிடமா?

மனம் இளகிவிட, லேசான தலையசைப்புடன் அவள் சொன்னாள். “சொல்கிறேன். உங்கள் மொபைலில் பதிவு பண்ணிக் கொள்கிறீர்களா?” என்று வினவினாள்.

ஆனால் அந்த இளக்கம் புரியாமலோ பிடிக்காமலோ, “சாரி. என் செல் எண் அன்னியருக்குத் தெரிவது எனக்குப் பிடிக்காது.” என்றான் அவன் கண்டிப்பான குரலில்.

சுகந்தினிக்கும் சுர்ரென்று ஏறிவிட்டது.

அவனைக் கோபமாக முறைத்து, “உங்கள் தாயார் என்கிறீர்கள். நெருங்கிய உறவு போல நாங்கள்தான் அவர்களைப் பதினெட்டு ஆண்டுகளாக பராமரித்திருக்கிறோம். ஆனால் எங்களுக்கு, உங்கள் மொபைல் எண் கூடத் தெரியக் கூடாது என்கிறீர்கள். அது தெரிந்து எனக்கும் ஒன்றும் ஆகப் போவது இல்லைதான். ஆனால், ஆன்ட்டியின் உறவு பற்றி நீங்கள் சொல்வது மெய்யா, பொய்யா என்று கூடத் தெரியாமல், நான் மட்டும் என்னைப் பற்றி எல்லாம் சொல்ல வேண்டுமா? உங்கள் எதிர்பார்ப்பு கொஞ்சம் அசட்டுத்தனமாக இல்லை?” என்று கேட்டாள் அவள்.

ஆனால் அவன் அசைவதாக இல்லை. “இதோ பார், நான் இதுவரை நிறையப் பார்த்துவிட்டேன். இப்போதும் தேவை என்று நீதான் என்னைத் தேடி வந்தாய். நீ சொல்வது உண்மை என்றால், இந்த விவரம் தருவதில் தயக்கம் எதற்கு? உன் விவரம் சரியென்று ஆகிவிட்டால், அதன் பிறகு என் செல்ஃபோனில் உன்னோடு பேசுவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் முதலில் எனக்கு எல்லாம் உறுதியாக வேண்டும்.” என்றான் அவன் தெளிவாக.

நிறைய அப்படி என்னத்தைப் பார்த்தானோ?

ஆனால் மரகதம் ஆன்ட்டிக்குச் சிகிச்சை நடக்க வேண்டுமானால், இவனிடம் விறைத்துக் கொண்டு போக முடியாது.

இவனுக்குத் தாயிடம் அக்கறையோ பாசமோ இல்லாவிட்டாலும், அவளுக்கு ஆன்ட்டியிடம் அன்பு நிறைய இருக்கிறது.

“ஸ்கூட்டி பையைத் திறந்து, அதில் எப்போதும் இருக்கும் சிறு குறிப்புப் புத்தகத்தை எடுத்து அவன் கேட்ட விவரங்களைக் குறித்து அவனிடம் நீட்டினாள்.

மேலெழுந்தவாரியாக அதைப் பார்த்துவிட்டு, “இதெல்லாம் உண்மை என்றால், இனி இவர்கள் என் பொறுப்பு நீ போகலாம்.” என்றான் அவன், ஏதோ அனுமதி கொடுப்பது போல.

“ரொம்ப அமர்த்தல்தான்” என்று உள்ளூர எரிச்சல்பட்டபடி, “எப்படிப் போவது? உங்கள் காரை எடுத்தால்தானே நான் நகரவே முடியும்? நீங்கள்தான் என் வண்டியை மடக்கி நிறுத்தி வைத்திருக்கிறீர்களே!” என்று, கார் வழி மறித்து நிற்பதை அழுத்தம் திருத்தமாகச் சுட்டிக் காட்டினாள் சுகந்தினி.

“ஓ!” என்றவன் சட்டெனக் காரில் ஏறிக் காரைக் கிளப்பி, ஒரு சிறு தலையசைப்புடன் வழி விலகியவன் திரும்பிப் பாராமல் நேராகப் போயே விட்டான். அவளது குத்தல் அவனுக்கு உறைத்த மாதிரியே இல்லையே!

ஒரு சாரி சொல்லும் பண்பு கூட இல்லை சே., என்று மறுபடியும் எரிச்சல் பட்டபடியே அவளும் ஸ்கூட்டியைக் கிளப்பிக்கொண்டு போனாள்.

சுகந்தினிக்குப் பெரிய நம்பிக்கை எதுவும் தோன்ற மறுத்தது. அதனாலேயே தாத்தா பாட்டியிடம் கூட நடந்தது எல்லாவற்றையும் அவள் சொல்லவில்லை.

“அங்கே ஒருவரிடம் ஆன்ட்டியின் புகைப்படத்தைக் காட்டி, அவர்கள் நிலைமை பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவரும் முடிந்த வரை முயற்சிப்பதாகச் சொல்லியிருக்கிறார்.” என்றதோடு நிறுத்திக் கொண்டாள்.

பெற்ற தாயை அவ்வளவு கேவலமாகப் பேசியவன், ஏதேனும் செய்வானோ என்னவோ? அதை விடவும், அவனை அப்படிப் பேச வைத்தவர்கள், எதையும் செய்ய விடுவார்களோ, என்னவோ? எதற்காக வீணாக இந்தப் பெரியவர்களுக்கு நம்பிக்கை கொடுப்பது?

ஆனால் மறுநாள் வேலைக்கச் செல்ல அவளுக்கு மனமில்லை.

எனவே, விடுப்பு எடுத்துக்கொண்டு மரகதத்தின் அருகிலேயே உட்கார்ந்திருந்தாள். ஆனால், மதிய வேளையில் அவளது வீட்டுக்கு முன், ஓர் ஆம்புலன்ஸ் வந்து நின்றது. "அம்மாவை அழைத்துப் போக வந்தோம்." என்றார்கள் அதில் வந்தவர்கள்.

அவசரமாக மரகதத்தின் சிகிச்சையைப் பார்த்துக் கொண்டிருக்கும் மருத்துவருடன் தொடர்பு கொண்டு, ஆம்புலன்ஸ் பற்றிச் சொன்னாள்.

அவர் உடனே நோயாளியை ஆம்புலன்சில் அனுப்பச் சொன்னார். ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்தது அவர்தானாம்.

"நான் இங்கே அறுவை சிகிச்சைக்கு வேண்டிய முன்னேற்பாடுகளை எல்லாம்  கவனித்துக் கொண்டிருக்கிறேன். நல்லவேளையாக காலம் கடக்குமுன், நீ பணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டாய, சுகந்தினி . சொல்ல மறந்துவிட்டேனே! மிஸ்டர் குணசீலனுக்குத் தாராள மனம், அம்மா! செலவைப் பற்றிக் கவலைப்படாமல், சிறந்த முறையில் மருத்துவம் செய்யச் சொன்னார். வைத்து விடுகிறேன். பார்க்க வேண்டிய வேலை நிறைய இருக்கிறது." என்று செல்லை அணைத்தார் மருத்துவர்

குணசீலன்! சீலன் இன்டஸ்ட்ரீஸ் ! குணசீலன் . . .அதாவது உரிமையாளன் போலும்.

"நிறையப் பார்த்துவிட்டேன்" என்றானே! என்னவென்று இப்போது ஒருவாறு ஊகிக்க முடிந்தது.

ஆனாலும், முன்பின் அறியாதவளிடம், அந்தக் குணசீலன் அப்படிப் பேசியிருக்கக் கூடாதுதான். அதுவும் குணசீலன் என்று பெயரை வைத்துக்கொண்டு, அப்படிச் சாக்கடை மழை பொழிந்திருக்கக் கூடவே கூடாது!

கெட்டவளோ, நல்லவளோ, பெற்றவளைப் பார்க்க வேண்டும் என்று ஒரு தரம் கூடவா தோன்றியிருக்காது? அதுவும் ஏழெட்டு ஆண்டுகளாகப் பெரியவர்கள் துணையின்றி அவனே தொழிலைக் கட்டிக் காத்து வளர்த்தான் என்று கேள்வியுற்றபோது, அவளுக்கு இன்னும் அதிக எரிச்சல்தான்.

மற்றவர்கள் அதிகாரத்தின் கீழ் இல்லாதபோதும் இவன் அன்னையைத் தேடவில்லையே!

வாத்து மடையன் போல மற்றவர்கள் சொன்னதையே பிடித்துக்கொண்டு அப்படியேதானே வாழ்ந்திருக்கிறான்!

உள்ளூர இந்த முரணான எண்ணங்கள் ஓடிக் கொண்டே

இருந்ததால், பெரியவர்கள், மருத்துவரோடு சேர்ந்து குணசீலனின் புகழ் பாட அவளால் முடியவில்லை.

மரகதத்துக்கு அறுவை சிகிச்சை செய்யுமுன், அதைத் தாங்கும் அளவு உடல் வலுப் பெறுவதற்கான மருத்துவ சிகிச்சை முதலில் தொடங்கியது. அதன் விளைவாக அவள் சற்றுத் தெளிவு பெற்று வருவதாகப் பெரியவர்கள் மருத்துவமனைக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்து பேத்தியிடம் சொன்னார்கள்.

“எட்டிப் பார்த்துவிட்டு வந்துவிட்டோம். அவளோடு கூட இருந்து செய்வதற்கு ஒன்றும் இல்லை. அதை விட மடத்துக்குப் போய் ஏதாவது சிரமதானம் செய்துவிட்டுக் கடவுளிடம் அவளுக்காக வேண்டிக் கொள்வது மேல் அல்லவா?” என்று சென்றார்கள்.

ஆனால் இரண்டு தினங்களில் குணசீலன் காரோடு அங்கே வந்து நின்றான்.

படபடவென்று அழைப்பு மணி அடித்து உள்ளே வந்தவன், உட்காரக் கூட இல்லாமல், “யார் அந்த அப்பு? ஒரே புலம்பலாக இருக்கிறது!” என்று சிடுசிடுத்தான்

அவனது சிடுசிடுப்புக்குக் காரணம் இருந்தது.

சும்மாவே மரகதத்துக்கு மனநிலை சரி கிடையாது என்று மருத்துவர் மயில்வாகனனும் அவனிடம் சொல்லியிருந்தார். அது, நோயாளியின் தலையில் முன்பு பட்ட காயத்தினாலோ, வேறு அதிர்ச்சியாலோ நேர்ந்திருக்கலாம் என்பது அவரது அபிப்பிராயம்.

உடலில் சற்று பலம் வந்ததும், “அப்பு, கண்ணப்பு” என்று மரகதம் புலம்பவும், அவளுக்குச் சுய நினைவு வந்து, மகனான தன்னைத்தான் அழைக்கிறாள் என்று குணசீலன் எண்ணிவிட்டான்.

உறவினர் குடும்பங்களில் குழந்தைகளை “அப்பு கண்ணு” என்று அழைத்துக் கேட்டும் இருக்கிறான்.

எனவே அருகில் சென்று “இதோ இருக்கிறேன். நான்தான் உங்கள் அப்பு.” என்று அவன் சொன்னால் மரகதம் கண்டுகொள்ளவே இல்லை.

பெற்ற பிள்ளையான அவனை விட்டு, அவனைப் பெற்றவளுக்கு வேறு யார் “கண்ணு”வும், “அப்பு”வும்?

அவனது ஆத்திரத்தை வியப்புடன் பார்த்து, “ஆன்ட்டி, ஆன்ட்டி என்று கண்ணன் சோர்ந்து கிடந்தான். பார்க்கில் போய் மற்ற பிள்ளைகளுடன் விளையாடிவிட்டு வா என்று நான்தான் அனுப்பி

வைத்தேன். சீக்கிரமே வந்துவிடுவான். ஏன்? அவனை எதற்குத் தேடுகிறீர்கள்?" என்று சுகந்தினி விசாரித்தாள்.

"அதுதான் சொன்னேனே, ஒரே புலம்பலாக இருக்கிறது என்று. அலட்டிக் கொள்கிறார்களாம். அந்த அப்புவைக் கூட்டிப் போய்க் காட்டினால் அமைதியாகக் கூடும் என்று டாக்டர் அபிப்பிராயப்படுகிறார்." என்று சலிப்பாகவே கூறியவன் தொடர்ந்து, "அது யார் அந்தப் பையன்? உன் தம்பியா?" என்று கண்ணனைப் பற்றி விசாரித்தான். .

"இல்லை. அவனும் கிட்டத்தட்ட ஆன்ட்டி மாதிரிதான். உட்காருங்கள், இதோ வந்து சொல்கிறேன்." என்றவள் உள்ளே சென்று ஒரு கண்ணாடி டம்ளரில் தண்ணீர் கொணர்ந்து அவன் முன்னே வைத்துவிட்டு, எதிரே தானும் அமர்ந்து, கண்ணனின் கதை பற்றிச் சொன்னாள்.

"ஐந்து ஆண்டுகளுக்கு முன் . .. " என்று தொடங்கி, உயிர்க் கொல்லி நோயால் பாதிக்கப் பட்டிருந்த தாய், சுகந்தினியின் தாத்தா பாட்டி மடத்தில் சேவை செய்வதைப் பார்த்ததும, எப்படி அவர்களை நம்பி மூன்று வயது மகனை அவர்களிடம் ஒப்படைத்து, படிக்க வைக்க மட்டும் கேட்டு, உயிரை விட்டாள் என்பதைச் சொன்னாள்.

"யாருமற்றவன் என்று நிச்சயமாகத் தெரிந்ததும் தாத்தா வீட்டுக்கு அழைத்து வந்தார். . . " குணசீலன் குறுக்கிட்டான்.

"உன் தாத்தா என்ன தர்மதாதாவா? யாருக்கானாலும் அடைக்கலம் கொடுக்கிறார்?" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

முகம் இறுக, "சும்மாவே தாத்தா பாட்டிக்கு இளகிய மனம்தான். அதுவும் என் அம்மா அப்பா இருவரும் விபத்தில் ஒன்றாகப் போன பிறகு, பணம், சொத்து சேர்க்க முயன்றதில்லை. இயன்றவரை மற்றவருக்கு உதவி செய்வார்கள். கண்ணன் வந்த பிறகு, இதற்கு மேல் இப்படி உதவ, நம் வருமானம் தாங்காது என்று பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன்." என்றாள் அவள்.

"ஓ, சாரி. எனக்குத் தெரியாது." என்றான் அவன் சற்று இறங்கிய குரலில்.

"எப்படித் தெரியும்?" என்று எடுப்பாகவே கேட்டாள் அவள். "நடந்தது பற்றி, நான் சொல்லாமல், உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லைதானே? ஆனால் . . "

"என்ன? ஆனால் என்ன?"

“யாரைப் பற்றியும் முழுதாகத் தெரியுமுன், கருத்துக் கூறாதீர்கள்!” என்றாள் அவள் கடுப்புடனேயே.

அவன் முகம் கன்ற “சாரி.” என்று வருத்தம் தெரிவிக்க, அங்கே சற்று நேரம் அமைதி நிலவியது.

சங்கடமான அமைதி.

நல்லவேளையாக அதற்குள் கண்ணன் வந்துவிட, புதியவன் வந்த விவரம் தெரிந்ததும் சிறுவன் குதித்தான். “அக்கா, நான் ஆன்ட்டியைப் பார்க்கப் போறேன்.” என்றான் சந்தோஷமாக.

“ஆன்ட்டியைப் பார்த்தபின் எப்போது திருப்பிக் கூட்டி வந்து விடுவீர்கள்?” என்று சுகந்தினி விசாரித்தாள்.

என்ன உளறுகிறாள் என்பது போலப் பார்த்தான் குணசீலன். “எதற்காகத் திரும்ப வருவது? இவன் அங்கேயே இருக்கட்டும். இவனைப் பார்த்துக்கொள்ள நான் ஏற்பாடு செய்கிறேன்.” என்று, குணசீலன எழுந்தான்.

ஆத்திரமாக உறுத்து விழித்து, “என்ன, விளையாடுகிறீர்களா?” என்று கேட்டாள் சுகந்தினி.

# அத்தியாயம் -4

மறுபடியும் இந்தப் பெண் என்ன உளறுகிறாள் என்பது போலவே குணசீலன் சுகந்தினியை லேசாகப் புருவம் சுளித்துப் பார்த்தான்.

அவளும் பார்வை தளராமல் நிற்கவும், "இதோ பார், அங்கே மருத்துவமனையில் அவர்கள் . . . அதாவது உன் ஆன்ட்டி இவனைத் தேடுகிறார்கள். அங்கே அவர்கள் பக்கத்திலேயே இருக்கட்டுமே! இதில் உனக்கு என்ன பிரச்சினை?" என்று வினவினான் அவன்.

பணக்காரப் புத்தி! என்னமோ, இவர்களது தேவைக்காகத்தான் உலகமே படைக்கப்பட்டிருப்பதாக எண்ணம்!

இவனைப் பெற்ற தாய்! ஆனால், இன்னமும் அம்மா என்று வாயாரச் சொல்ல மனம் வரவில்லை. ஆனால் அவர்களது சிகிச்சைப் பொறுப்பை ஏற்றிருப்பதால் அதற்கு வசதியாக மற்றவர்கள் ஆட வேண்டுமாம்!

அவரவருக்குத் தனியான வாழ்வு இருக்குமே என்ற எண்ணமே கிடையாது. ஏதோ பாட்டில் வருவது போல, உலகமே இவனுக்காகப் படைக்கப்பட்ட மாதிரி நினைப்பு!

என்ன . .பிரச்சினை . . என்று கேள்வி வேறு!

"பிரச்சினை எனக்கு இல்லை, சார். இவனுக்குத்தான். அவனைப் பெற்றவள் படிக்க வைக்கும்படி கேட்டிருக்கிறாள் என்றேனே!" என்றாள் அவள் நினைவூட்டுவது போல. இதேதடா தொல்லை என்பது போல அவன் புருவம் சுளிக்கவும், "ஏன் நீங்களே யோசிக்க வேண்டாமா? கண்ணன் எட்டு வயதுப் பையன் சும்மா வீட்டிலா இருப்பான்? அதெல்லாம் பற்றி யோசிக்கவே இல்லாமல், சும்மாக் கூட்டிப் போக வந்துவிட்டீர்களே! அவன் படிக்கிற பையன். அவன் நாளைக்குப் பள்ளிக்குச் செல்ல வேண்டும்." என்றாள் .

குணசீலன் சற்றுத் திகைத்தான். பிறகு, "ஆனால் அங்கே மருத்துவமனையில் இவன் தேவைப்படுகிறானே!" என்று அவனுக்குப் பெரிதாகத் தோன்றிய காரணத்தைச் சொன்னான்.

அதே சுயநலம் என்று அவளுக்கு மனம் கடுத்தது. ஆனால் அதை வெளிக்காட்டாமல் பேசினாள்.

"இருக்கலாம் மிஸ்டர் குணசீலன். ஆனால் அதற்காகக் கண்ணனின் படிப்பை அலட்சியம் செய்ய முடியாது. என்ன பெரிய பிஜீ வகுப்பிலா படிக்கிறான் என்று கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

ஏனெனில் இந்த அடிப்படையில் இருந்துதான் படிப்படியாகப் பிஜீ வகுப்புக்குச் செல்ல வேண்டும் என்று உங்களுக்கும் தெரிந்திருக்குமே!” என்றாள் அழுத்தத்துடன்.

ஒரு சிறு அமைதியின் பின், “ஆனால் மருத்துவமனையில் அவர்கள் இவனைத் தேடுகிறார்களே! அது முக்கியம் இல்லையா?” என்று கேட்டான்.

சிறுவனின் முகத்திலும் கெஞ்சலைக் கவனித்துவிட்டு, “நிச்சயமாக முக்கியம்தான். ஆனால் படிப்பை அலட்சியப்படுத்த முடியாது. அதனால் திரும்பக் கூட்டி வந்து விட்டுவிடுங்கள்.” என்றாள் அவள்.

“அவர்கள் எப்போதும் கூட வைத்திருக்க விரும்பினால்? அதாவது, ஓயாமல் “அப்பு, அப்பு” என்று புலம்புவதால் .சொல்கிறேன்.” என்றான் அவன்.

“ஆன்ட்டி அப்படிக் கேட்க மாட்டார்கள். தினமும் கண்ணனைப் பள்ளிக்கு அழைத்துப் போவதே அவர்கள்தான். நன்றாகப் படிக்க வேண்டும் என்று புத்தி கூடச் சொல்வார்கள். என்னடாக் கண்ணா?” என்று பையனை சாட்சிக்குக் கூப்பிட்டாள் சுகந்தினி.

“ஆமாம். ஆனால் ஆன்ட்டிக்கு இப்போ பேசவே முடியலியேக்கா?” என்று கவலைப்பட்டான் கண்ணன்.

“பேசுவார்கள். அப்படிப் பேசும்போது, அவர்களுக்காக நீ பள்ளிக்குப் போகவில்லை என்று தெரிந்தால் வருத்தப்பட மாட்டார்களா?” என்று அவனிடம் கூறியவள், குணசீலனிடம் திரும்பி, “எப்படியும் கண்ணன் பள்ளிக்குப் போயாக வேண்டும்.” என்றாள் உறுதியாக.

ஒரு வினாடி யோசித்துவிட்டு, “இவன் . . இந்தக் கண்ணனின் புத்தகம் மற்ற பொருட்களைக் கொடு. நான் அங்கிருந்து இவன் பள்ளி செல்ல ஏற்பாடு செய்கிறேன். மற்ற நேரம் அவர்களோடு இருக்கட்டும்.” என்றாள் குணசீலன்.

மறுப்பதற்கு ஒன்றுமில்லாமல், சுகந்தினியும் தலையாட்டினாள். மரகதத்தின் மன அமைதி அவளுக்கும் முக்கியம்தானே?

இலவசப் பணி முடிந்து திரும்பி வந்த தாத்தா, பாட்டியும், அவள் செய்தது சரியே என்றார்கள். சின்னவனின் படிப்பு கெடாமல் மரகதத்துக்கும் நல்லது நடக்குமானால், அதை விட வேறு என்ன வேண்டும்?

மேலும் இரண்டு நாட்கள், ஒரு மாதிரியான அமைதியில் கழிந்தன.

மரகதத்தைப் போய்ப் பார்க்க வேண்டும் என்ற என்ற ஆசை இருந்தபோதும், அவளுக்குச் சிகிச்சை நடக்கும் விதம் தெரிந்தபின் அதற்குள்ளே போய்த் தலையை நீட்ட அந்த வீட்டில் யாருக்குமே மனம் வரவில்லை. கண்ணனையுமே, ஒவ்வொரு வேளையும் குளிப்பாட்டிதான் மரகதத்தின் அருகே செல்ல விட்டார்கள்.

அறுவை சிகிச்சை நடக்குமுன், தலைவலி போல சிறு சுகவீனம் கூட அவளுக்கு வந்து விடக் கூடாது என்று ரொம்பக் கவனமாக இருக்க நேரும் என்று டாக்டர் மயில்வாகனம் ஏற்கனவே அவர்களிடம் சொல்லியிருந்தார்.

இந்த நிலையில், நம்மால் எந்தக் கெடுதலும் நேர்ந்து விடக் கூடாதே என்ற எண்ணம்!

கண்ணன் சென்று இரண்டு தினங்களில், குணசீலன் சுகந்தினியை செல்லில் அழைத்து, “ஏதாவது காஃபி ஷாப்புக்கு வர முடியுமா?” என்று கேட்டான். “சற்றுப் பேச வேண்டும்.” என்று காரணம் சொன்னான்.

என்ன பேசப் போகிறானோ என்று, சுகந்தினிக்கு மனதுள் துடிப்புதான். ஆனால், அன்றுதான் மயில்வாகனன் மரகதத்தின் சிகிச்சை சரியானபடி செல்வதாக அவளிடம் கூறியிருந்தார்.

கண்ணன் படிக்ககவில்லையோ, சரியாக உண்ணவில்லையோ என்றெல்லாம் தோன்றினாலும், அதற்காகக் குணசீலன் அவளைத் தனியே அழைத்துப் பேசக் கூடும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. அந்த அளவுக்குக் கண்ணனிடம் குணசீலனுக்கு அக்கறை இருப்பது, அதிசயம்! வாய்ப்புக் கிடையாது.

பின்னே?

எப்படியும் குணசீலன் வந்ததும், என்னவென்று தெரியப் போகிறது. அதற்குள் மனதைப் போட்டு உருட்டுவானேன்?

வந்ததுமே, சற்றுத் தாமதமாக வந்ததற்காகக் குணசீலன் “சாரி சொன்னது சுகந்தினிக்கு ஆச்சரியமாக இருந்தது.

“சற்றும் எதிர்பாராதபடி, வரும் வழியில் ஒரு போக்குவரத்து நெரிசல். தாண்டி வருமுன் தாமதம் ஆகிவிட்டது.” என்றபடியே தலையசைத்து, பேரரை அழைத்தான் அவன். “என்ன சாப்பிடுகிறாய்?”

“வெறும் காஃபி மட்டும்.” என்றாள் அவள்.

இரண்டு பேருக்குமாகக் காஃபி ஆர்டர் பண்ணிவிட்டு, குணசீலன் மௌனமானான்.

பேசவென்று வரச் சொல்லிவிட்டுப் பேசாமல் தரையைப் பார்த்தால் எப்படி? சில வினாடி பொறுத்துப் பார்த்துவிட்டு, சுகந்தினியே பேச்சைத் தொடங்கினாள். “அப்படி என்ன பிரச்சினை, குணசீலன் சார்? ஆன்ட்டிக்கு ஆபத்தில்லை என்று டாக்டர் சொன்னாரே. “ என்றாள்.

எங்கே பாயலாம் என்று இருந்திருப்பான் போல!

அவளது கேள்வியில் ஆத்திரமாக விழித்து, “என்னிடம் பொறுப்பைத் தந்துவிட்டு, சரியாகச் செய்கிறேனா என்று வேவு பார்க்கிறாயா?” என்று அவளிடம் கோபமாகக் கேட்டான்.

பெரிய விழிகளால் வியந்து நோக்கி, “ஏதோ தப்பு செய்து மாட்டிய மாதிரி, உங்களுக்கு இவ்வளவு கோபம் ஏன்? கடைக்குப் போனபோது, மருத்துவரைப் பார்த்தேன். சொன்னார். எங்கள் குடும்பம் பற்றித் தெரிந்தவர். இவ்வளவு நாள் ஆன்ட்டிக்கு அவரிடமே மருத்துவம் பார்க்கிறோம். இன்றைக்கு நீங்கள் பொறுப்பேற்றிருந்தாலும், இதுவரை ஆன்ட்டியை அவரிடம் கூட்டிப் போய் வைத்தியம் பார்த்தது நாங்கள்தானே?. எங்களைப் பார்த்தால், ஆன்ட்டி சுகம் பற்றிச் சொல்ல மாட்டாரா? மிகவும் சாதாரணமான விஷயம். இதைப் போய் என்னென்னவோ சொல்கிறீர்களே! “ என்று அவள் தெளிவாகப் பேசவும் அவன் முகத்தில் அசடு வழிந்தது.

“சாரி.” என்று மறுபடியும் எழும்பாத குரலில் முணுமுணுத்தான் அவன்.

சிறு கையசைவினால் அதை ஒதுக்கிவிட்டு, அவள் பழைய கேள்வியையே மீண்டும் கேட்டாள்!

பிரச்சினையைச் சொல்வதே அவனுக்குப் பிரச்சினையாக இருந்தது, அவன் முகத்தில் தெரிந்தது.

ஆனால் “சொல்லு சொல்லு” என்று எத்தனை முறை கேட்பது? சொல்ல வந்தவன் தானாகச் சொல்லட்டும் என்று பேசாமல் காஃபியை அருந்தினாள் அவள்.

முன்னிருந்த காஃபி கப்பையே பார்த்தபடி, குணசீலன் திடுமெனக் கேட்டான்.

“அந்தப் பையன்
அந்தக் கண்ணன், உங்களிடம் வநத பிறகு, அந்தம்மாவுக்குப் பிறந்தவனா?” என்று கேட்டான்.

“எஎன்னது?!” அவனைப் பிரமித்து நோக்கினாள் அவள். “அன்றே எல்லாம் சொன்னேனே! அப்போது நான் சொன்னதைக்

கவனிக்கவில்லையா? அல்லது . .அல்லது எதையும் நம்பவில்லையா? அவனைப் பெற்ற தாயார் கேட்டு, அதனால் கண்ணனைத் தாத்தா அழைத்து வந்த கதை முழுதும் சொன்னேனே! ஓ! அதை வெறும் கதை என்றே எண்ணிவிட்டீர்களா?

“மனதை வெறும் குப்பைத் தொட்டியாக வைத்திராதீர்கள், சார். உலகத்தில் நல்லதும் இருக்கும் என்று நம்புங்கள். அன்று நான் சொன்ன விவரம் முழுக்க முழுக்க மெய் ! மூன்று வயதுப் பையனாகத்தான் கண்ணனை, அதுவும் என் தாத்தாவும் பாட்டியும்தான் கூட்டி வந்தார்கள்.

“அவன் எங்கள் வீட்டுக்கு வந்த பிறகுதான், ஆன்ட்டி அவனைக் கண்ணால் பார்த்ததே! இதைப் போய் என்ன மாதிரிக் கேவலமாக . . சே! இப்படி அசிங்கமாக ஒருவருக்கு எப்படி எண்ணத் தோன்றும்? யாருமற்று அனாதையாக நின்ற சிறு பையனிடம் அன்பு காட்டினால், அந்தப் பையன் அவர்களுக்குத் தப்பான வழியில் பிறந்தவன் ஆகி விடுவானா? ஒரு பெண்ணின் ஒழுக்கத்தை எவ்வளவு அலட்சியமாக எண்ணி விட்டீர்கள்!

“ஆனால், எப்போதுமே நீங்கள் அப்படித்தான், இல்லையா? பெண்களைக் கேவலப் படுத்துவது என்றால் உங்களுக்கு அல்வா சாப்பிடுவது போல இனிக்கிறதாக்கும்! சே! கண்ணராவி. . . “

படபடவென்று இன்னும் எவ்வளவு கொட்டித் தீர்த்திருப்பாளோ?

குருதி குழம்பிய முகத்துடன் குறுக்கிட்டு, “ரொம்பப் பேச வேண்டாம். அவர்கள் என்னைப் பெற்ற தாய்! “ என்றான் குணசீலன் கோபமாக.

“அதற்காக வெட்கப்பட வேண்டியது அவர்கள்! “ என்றாள் அவள் சுள்ளென்று.

“ஏய்!” என்று எழத் தொடங்கியவன் அப்படியே அமர்ந்து, ஒரு கணம் பேசாதிருந்தான்.

பிறகு, “அதாவது அவர்கள் மேல் தப்பே கிடையாது என்கிறாய்.” என்றான் யோசனையோடு.

ஆத்திரமாக உறுத்து, “எப்படியோ, விஷயம் அந்த மர மண்டைக்குள் ஏறினால் சரி!” என்றாள் சுகந்தினி எகத்தாளமாக.

“ஏய், என்னையா மர . . “ என்று மறுபடியும் எழுந்தவன், ஒரு பெருமூச்சுடன் மீண்டும் அமர்ந்தான். “அப்படியானால், என் தாயார் தவறற்றவர்கள் என்பது உனக்கு நிச்சயம். அதுதான் உனக்கு இவ்வளவு கோபம் வருகிறது!” என்று தனக்கே சொல்பவன் போல உரக்க

முணுமுணுத்தான்.

"ஓடு ரொம்பத் தடிமனாகத் தெரிகிறது!"

"என்ன . .து? . . . " என்று தலையைத் தொட்டுப் பார்த்துக் கேட்டவன், கேட்டவன், சட்டென வாய்விட்டு நகைத்தான்.

இவன் புத்தி போகிற போக்கு பற்றித் தெரியாதவள் இந்தச் சிரிப்பில் காலடியில் சுருண்டு விடுவாள். என்று சுகந்தினிக்குத் தோன்றியது.

பிறகே, தன் பார்வை குணசீலன் மீதே நிலைத்திருப்பது புரிய சட்டென அவள் வேறு புறம் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

இவன் என்னதான் அழகாகச் சிரித்தாலும், பெருக்கிக் கூட்டிய குப்பையை அடியில் தள்ளி அழகான கார்ப்பெட்டால் மூடி வைப்பது போலத்தான். இவனது அடி மனதில் நிறைந்திருப்பது வெறும் அழுக்கு மட்டுமே. இதை அவள் ஒரு போதும் மறக்கலாகாது!

அடுத்த சில நாட்கள், அன்றாட விஷயங்கள் பற்றிக் கூட, எண்ணிப் பார்க்கவோ, பேசவோ, யாராலும் இயலவில்லை.

மரகதத்தின் அறுவை சிகிச்சைக்கு மருத்துவர்கள் நாள் குறித்துவிடவே, எல்லோரும் மருத்துவமனையையே சுற்றிச் சுற்றி வந்தனர்.

குணமாக்குவதற்குத்தான் அறுவை சிகிச்சை என்றாலும், "தலையில்" அதுவும் மூளைப் பகுதியில் என்பது எல்லோருக்கும் கவலையாக இருந்தது.

"தானாடாவிட்டாலும் சதையாடும் என்று சொல்வதற்கிணங்க, குணசீலனும் இறுகிய முகத்துடன்தான் நடமாடினான்.

முதலில் கேட்டதை அடியோடு மறந்து, உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே என்று அவள் முன்னிலையிலேயே மயில்வாகனத்திடம் அவன் மூன்றாவது தடவையாகக் கேட்கவும், சுகந்தினிக்கே அவன் மீது பரிதாபம் உண்டாயிற்று.

அவன் மோசமானவன், அவன் மனம் சாக்கடை என்றெல்லாம் எண்ணி அவனை மனதில் ஒதுக்கி வைத்திருந்ததை மறந்து, அவளே அவனிடம் சென்று ஆறுதல் சொன்னாள்.

"நீங்கள் அஞ்சுவது போல எதுவும் ஆகாது, குணசீலன். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், இந்த ஆப்பரேஷனே எதற்காகச் செய்கிறோம்? உயிருக்கு ஆபத்தாகிக் கொண்டிருந்த கட்டியை

அகற்றுவதற்காகத்தானே? ஆபத்தை அகற்றும் சிகிச்சையே ஆபத்து என்றால், அதைச் செய்வார்களா? எனவே, இந்த சிகிச்சையைப் பொறுத்த வரையில், ஆன்ட்டிக்கு ஆபத்தே கிடையாது." என்றாள் கனிவும் திடமுமான குரலில்.

நிமிர்ந்து, "நான் ஒன்றும் பயப்படவில் . . . " என்று ரொம்ப தைரியசாலி போலத் தொடங்கினாலும், வாக்கியத்தை முடிக்குமுன் அவனது குரல் தளர்ந்து தடுமாறத் தொடங்கிவிட்டது.

உதட்டைப் பற்களால் அழுத்தி சமாளித்தவன், மெல்ல இமை தூக்கி அவளைப் பார்த்து, "நிஜமாகத்தானே சொல்கிறாய்? அம்மாவுக்கு ஒன்றும் ஆகாதே?" என்று காற்றாகிவிட்ட குரலில் கேட்கவும் அவளுக்கு உருகிவிட்டது.

அடுத்த இருக்கையில் அமர்ந்திருந்தவனின் கையைப் பற்றி அழுத்தி, "சத்தியமாக, குணசீலன்! ஆன்ட்டியின் உயிருக்கு ஒரு பிரச்சினையும் கிடையாது." என்றாள்
அவள்

ஆதரவாகப் பற்றிய கையை ஆறுதல் தேடிப் பிடித்துக்கொண்டு சற்று நேரம் குணசீலன் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

ஏன்னவோ தடை அகன்றது போல, அதற்கு மேல் இருவரமே சகஜமாகப் பேசிப் பழகலாயினர்.

ஒரு சின்ன முனகல் சத்தத்தில் கூடக் கண்ணன் எழுந்து ஓடிப்போய் மரகதத்தின் அருகே சென்று நிற்பான். "ஆன்ட்டி ஊ . .ம் என்றாங்க. என்னன்னு வந்து பாருங்களேன்." என்று நர்சைக் கூட்டி வருவான். அரற்றினால் கையைப் பற்றித் தட்டிக் கொடுப்பான்.

மரகதம் மீண்டும் அமைதியாகும் வரை அங்கேயே நிற்பான்.

"பெற்ற பிள்ளை மாதிரி எப்படித் துடிக்கிறான்!" என்று ஒரு நாள் குணசீலன் வியந்து சொன்னான்.

"என்ன? மறுபடியும் சாக்கடை சந்தேகமா?" என்று சுகந்தினி ஒரு மாதிரிக் கேட்கவும், "ஐய்யோ, கிடையாது. கிடையாது!" என்றான் குணசீலன் வேகமாக.

"வியப்பினால் வந்த பாராட்டே தவிர, இதற்று உள்ளர்த்தமோ . . வேறு  எந்த மாதிரி விளக்கமும் கிடையாது. ப்ராமிஸ்" என்றான் அவன் அவசரமாக.

ஏதோ கேட்க வாயெடுத்துவிட்டு, சுகந்தினி அமைதியானாள்.

இப்போது எந்தக் கேள்வியும் நியாயமல்ல. அதற்கு அவகாசம் இருக்கிறது. இப்போதைக்கு அவர்கள் நல்லபடி குணமாவதுதான் முக்கியம்.

மறுநாள் வேலை முடிந்து சுகந்தினி மருத்துவமனைக்குச் சென்றபோது, மரகதத்தின் அறை வாயிலில் குணசீலன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்.

அவனது முகத்தைப் பார்த்துவிட்டு அவள் அவசரமாக அருகில் செல்ல, அவனும் அவளைக் கண்டதும், "வந்துவிட்டாயா?" என்று வேகமாக அவளை அணுகினான்.

அவளும் "என்ன ஆயிற்று, குணசீலன்? ஆன்ட்டிக்குப் பின்னடைவு எதுவும் இல்லையே!" என்ற கவலையுடன் கேட்டாள்.

"பின்னடைவா?" என்று சற்றுத் திகைத்துவிட்டு, "ஊகூம். அதெல்லாம் ஒன்று . . மில்லை. . . ஆனால், டாக்டரோடு பேசியபின் எனக்குத்தான் கொஞ்சம் குழப்பமாகி . . மனம் சற்றுக் கலங்கிவிட்டது." என்றான் அவன்.

"என்ன குழப்பம்? "

"முதலில் உட்கார்." என்றவன் விவரம் சொன்னான்.

தாயின் தலையில் இருந்த கட்டியினால்தான் மற்ற பிரச்சினைகளோடு அவளுக்கு மனநிலை சரியில்லை, கட்டியை அகற்றினால் அவள் எல்லோரையும்போல சாதாரணமாகிவிடுவாள் என்பது போல குணசீலன் நினைத்திருந்தான்.

ஆனால் அது பற்றி அவன் விசாரித்தபோது, வைத்தியர் வேறு சொன்னார்.

மரகதத்துக்கு மனநிலை சரியில்லாமல் போனதற்கு, வேறு காரணங்களும் இருக்கலாமாம். இப்போது மூளைப் பகுதியில் இருந்த கட்டியை அகற்றுவது, அவளது உயிரைக் காப்பதற்குத்தானே தவிர, மற்ற பாதிப்புகளைச் சீர் செய்வதற்காக அல்லவாம்.

" "அறுவை சிகிச்சை நல்லபடியாக நிறைவேறி, உங்கள் தாயார் நல்லபடியாகப் பிழைத்தெழுவதுதான் இப்போது முக்கியம், குணசீலன். இப்போதைக்கு, அதற்கு மட்டும் பிரார்த்தியுங்கள்." என்றார், சுகந்தினி. அப்படியானால், இந்த சிகிச்சையே . .. வந்து . .

ஆபத்தாகி விடக் கூடும் என்றுதானே பொருள்? நீயே சொல்லு. "

கையைப் பிடித்துக்கொண்டு குணசீலன் கேட்கும்போது அவனைத்

தேற்றுவதுதான் முக்கியமாக சுகந்தினிக்குத் தோன்றுயது.

சிகிச்சை முடிந்து மரகதம் முன் மாதிரி நடமாடினாலே போதும் என்கிற அளவுதான் சுகந்தினி ஆசைப்பட்டது. ஆனால் உறவை இன்னமும் முழுமையாக ஏற்றிராவிட்டாலும், பிள்ளை மனம் அதிகமாக எதிர்பார்த்திருக்கிறது. எதிர்பார்த்தது கிடைக்காது என்றதும் கலங்கிவிட்டது.

ஏனோ கண்ணனின் நினைவு வந்தது அவளுக்கு.

லேசாக முறுவல் செய்து, "என்ன குணா சார், புது மணமக்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள் என்றால் அவர்களுக்குக் கஷ்டம் வரப் போகிறது., அதிலிருந்து மீள வேண்டுங்கள் என்றா அர்த்தம்? நல்லபடி வாழட்டும் என்பதுதானே? நோயாளிக்காக வேண்டுவது என்றால், அவர்கள் விரைவில் ஆரோக்கியம் பெற வேண்டும் என்பதாக இராதா? எதிலும் கெடுதலையேதான் தேடுவீர்களா? எங்கள் தாத்தா ஒன்று சொல்லுவார். அழகான ஊரைப் பார் என்றால் குப்பை கூளமாக இருக்கிற சேரியைப் பார்த்து எல்லாமே மோசம் என்பது போல இராமல் நல்லதை அறிந்து கொள்ளத் தெரிய வேண்டும் என்பார். உங்களுக்கும் கொஞ்சம் அந்த புத்தி, அதாவது சேரியைப் பார்க்கிற புத்தி இருக்கிறது. மாற்றிக் கொள்ளுங்கள்." என்று இலகுக் குரலில் மொழிந்தாள்.

முகம் மலர, "அப்படியானால் பயப்பட ஒன்றுமில்லை என்கிறாய். அதுதானே? சரிசரி. இனி நானும் நம்பிக்கையோடு இருக்கிறேன். " என்றான் அவன்.

நூறு சதவீதம் வெற்றி கிடைக்கும் என்று மருத்துவர் சொல்லவில்லைதான். ஆனால் குணசீலனின் முக மலர்ச்சியைக் கெடுக்க மனம் இல்லாமல், சுகந்தினி தானும் புன்னகை செய்தாள்.

அன்றிரவு சிவகாமி தன் பேத்தியிடம் வந்து உட்கார்ந்தாள்.

மறுநாள் அலுவலகத்துக்கு அணிய வேண்டிய உடை மற்றும் கைப்பையில் இருக்க வேண்டிய பொருட்களைச் சரிபார்த்து எடுத்து வைத்துக் கொண்டிருந்த சுகந்தினி, அதை நிறுத்திவிட்டு "என்ன பாட்டி?" என்று பெரியவளின் அருகே அமர்ந்து கேட்டாள்.

"பெரிதாக ஒன்றுமில்லை . . . " என்று சிவகாமி இழுக்கவும், அவளது கையைப் பற்றிக்கொண்டு, "பெரிதாகத்தான் இருக்கும் போல இருக்கிறது! இவ்வளவு ஜவ்வு இழுக்கிறீர்களே! கமான் பாட்டி, போட்டு உடையுங்கள். இல்லையானால் மர்மம் தாங்காமல் டமால் என்று என்

மண்டை வெடித்துவிடும்!" என்றாள் வேடிக்கையாக.

சட்டென முகம் மாற, "விளையாட்டுக்குக் கூட .அப்படிச் சொல்லாதே, சுகந்திம்மா. சும்மா ஒரு வினாடி நினைத்துப் பார்க்கவும் என் மனம் தாங்காது. ஒருத்தி அங்கே கிடப்பதே போதும்." என்றாள் பெரியவள்.

ஒரு வினாடி அமைதியின் பின், "சாரி பாட்டி. சும்மா வேடிக்கையாகப் பேசினேன். இனிமேல் மாட்டேன். சொல்லுங்கள், என்ன சொல்ல வந்தீர்கள்?" என்று சுகந்தினி வினவினாள்.

"அது . . " என்று சுவகாமி மேலும் தயங்கவும், "இதுதான் பாட்டி! சொல்லத் தயங்குகிறீர்களே, வேடிக்கைப் பேச்சில் இலகுவாகி எளிதாகச் சொல்வீர்கள் என்று நினைத்தேன். இனி நீங்களேதான் இறுக்கம் தளர்ந்து சொல்ல வேண்டும்." என்றாள் சுகந்தினி.

ஒரு மூச்சை எடுத்துக்கொண்டு சிவகாமி சொல்லலானாள். "பாரம்மா, இன்று வரை இன்னாரிடம் இப்படி நடந்துகொள் என்று நான் சொல்ல வேண்டிய தேவை உனக்கு இருந்ததே கிடையாது. யாரையும் உரிய எல்லையில் நிறுத்துகிறவள் நீ. ஆனால் . . இப்போது . . மரகதத்துடைய மகன் என்று உன் மனம் . .வயது வேறு . . ." என்று அவள் தட்டித் தடுமாறி அவள் சொல்லி வருகையிலேயே, சுகந்தினி கலீரென்று சிரிக்க, பாட்டியின் பேச்சு நின்றது.

"ஐயோ பாட்டீ . .இதைப்பற்றி . . ஏன், எதைப் பற்றியுமே என்னிடம் பேச, நீங்கள் இவ்வளவு தயங்கலாமா?" என்று சிவகாமியைத் தோளோடு அணைத்தவள், கட்டிலில் இருந்து குதித்து, பாட்டிக்கு நேர் முன்னே போய் நின்றாள்.

நேராகப் பார்த்து, "பாருங்கள் பாட்டி, நான் குணசீலனோடு சகஜமாகப் பேசிப் பழக, இரண்டு காரணங்கள் இருக்கின்றன. இரண்டுமே, அவர் ஆன்ட்டியுடைய மகன் என்பதால்தான்.

"முதல் காரணம் என்னுள்ளே நீங்கள் வளர்த்த மனிதாபிமானம். அம்மாவுக்கு என்ன ஆகுமோ என்று அவர் தவிப்பு புரிந்ததால் சற்றுப் பரிவாகப் பழகுவது. அடுத்ததும் ஆன்ட்டி விஷயமாகத்தான். யோசித்துப் பாருங்கள் பாட்டி, குணா இவ்வளவு பெரிய பணக்காரராக இருக்கிறார். ஆனால், ஆன்ட்டி நம்மிடம் என்ன நிலையில் வந்தார்கள்? இன்றைக்கும், தனிப்பட அவர்கள் நிலைமை என்ன? சிகிச்சைக்குப் பணம் இல்லாமல் என்ன பாடு பட்டோம்? இத்தனைக்கும் அவர்கள் எப்படிப்பட்ட கோடீசுவரி? உரிய நிலையில் ஆன்ட்டியை வைக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் மகனோடு சாதாரணமாகப்

பழகுகிறேன். அவ்வளவே. தப்பா பாட்டி.?”

உட்கார்ந்திருந்த பாட்டியின் இரு புறமும் கைகளை ஊன்றி, புன்னகையோடு கேட்ட பேத்தியின் முகத்தை, சிவகாமி ஆசையாக வருடிக் கொடுத்தாள்.

“செய்மா செல்லம்!” என்று அன்போடு ஆசி வழங்கினாள்.

# அத்தியாயம் -5

மரகதத்தின் அறுவை சிகிச்சை ஒருவாறு நடந்து முடிந்தது.

நல்லபடியாகவே.

என்னதான் மருத்துவர் நம்பிக்கை தரும் விதமாகவே பேசியிருந்தபோதும், மயங்கிய நிலையில் மரகதம் ஆப்பரேஷன் அறைக்குள் சென்றதில் இருந்து, சிகிச்சை வெற்றி என்று மயில்வாகனன் வெளியே வந்து சொல்லும்வரை எல்லோருக்குமே நெஞ்சு படபடத்துக் கொண்டுதான் இருந்தது.

சுகந்தினியின் கையை குணசீலன் அழுந்தப் பற்றியிருந்த விதத்தில், அவளது கையில் ரத்தம் கட்டாதிருந்தது அதிசயம்.

வாகதீசனும் சிவகாமியும் கண்ணனை மடத்துக்கு அழைத்துப் போய்விட்டனர். மூவரும் திரும்பி வந்தபோது, சிகிச்சை முடிந்துவிட்டிருந்தது.

நினைவு திரும்பி, ஐசியுவில் இருந்து அறைக்குத் வந்ததும் மரகதம் தேடியது கண்ணனையே என்றாலும், எல்லோருக்குமே அவளிடம் ஒரு புன்னகை இருந்தது.

பலவீனமான அந்த மெல்லிய முறுவல் எல்லோர் மனதையும் உருகவும் வைத்தது.

குணசீலன் மட்டும் பொறுப்பேற்றுச் செய்யாவிட்டால்?

பெரிய வேலை முடிந்தது. ஒரு மகனாகத் தாய் உயிர் பிழைக்க அனைத்தும் செய்துவிட்டான்.

இதை அவன் எப்படி ஏற்றிருக்கிறான்?

பார்வையை மட்டும் திருப்பி சுகந்தினி அவன் முகத்தை ஆராய்ந்தாள். அங்கேயும் மகிழ்ச்சி இருக்கத்தான் செய்தது. ஆனால் கூடவே ஓர் இறுக்கமும் தெரிந்தது!

என்னவாக இருக்கும்?

அன்றிரவு அது பற்றி யோசித்த சுகந்தினிக்கு, இன்னமும் மரகதத்தைக் குணசீலன் “அம்மா” என்று அழைத்ததில்லை என்பது நினைவு வந்தது.

அத்தோடு முதல் தடவை மரகதத்தின் படத்தைப் பார்த்ததும் எவ்வளவு கோபமாக . .எவ்வளவு கேவலமாகப் பேசினான்!

அதனால், தாயைத் தன் வீட்டுக்கு எப்படிக் கூட்டிப் போவது என்று யோசிக்கிறானா?

அவனது வீட்டில் உள்ளவர்களும் அது போலவே கருத்துக் கொண்டிருந்தால், அது ரொம்பவே கடினம்தான். கஷ்டமாகத்தான் இருக்கும்.

முன்னிருந்தது போல மரகதத்தை இந்த வீட்டுக்கே அழைத்து வருவதில் அவளுடைய குடும்பத்தில் யாருக்கும் பிரச்சினையே கிடையாதுதான். சொல்லப் போனால், "அறுவை சிகிச்சைதானே, நம்மால் இயலாததாக இருந்தது. அதைக் குணசீலன் ஏற்றுக் கொண்டுவிட்டதால், இனி மரகதத்தைக் கண்ணனோடு நம் வீட்டிலேயே வைத்து முன் போலவே பார்த்துக் கொள்ளலாமே." என்றுதான் வாகதீசர் சொன்னார்.

ஆனால் சுகந்தினிக்குத்தான் அதில் அவ்வனவு விருப்பமில்லை.

முன்போலவே எல்லாம் நடக்கத் தொடங்கிவிட்டால், மரகதத்தின் உரிமைகளை அவளுக்குப் பெற்றுத் தருவது எப்படி?

அது கட்டாயம் செய்ய வேண்டியது ஆயிற்றே!

மரகதம் பற்றிக் குணசீலனிடம் பேச வேண்டிய தருணம் அருகே நெருங்குவது போல, சுகந்தினிக்குத் தோன்றியது.

ஆனால் இந்தப் பிரச்சினையை மருத்துவர் மயில்வாகனனே ஒரு வகையில் தீர்த்து வைத்தார்.

மரகதத்தின் குடும்ப விவகாரங்கள் ஓரளவேனும் மருத்துவருக்குத் தெரியாதிருக்க வாய்ப்பில்லை. ஆனால் அதைக் கண்டுகொள்ளாதவர் போன்று, மரகதத்தின் உடல்நிலை தேறுவதின் அடுத்த கட்டம் பற்றி குணசீலனிடம் அவரே பேசினார்.

"கொஞ்ச காலம், மரகதம்மா கூடலே ஒரு நர்ஸ் இருப்பது நல்லது. நோயாளிக்கு வேண்டிய மருந்து மாத்திரைகள், உணவுகளை நேரம் பார்த்துக் கொடுப்பதோடு, இந்தக் கால கட்டத்தில் சும்மா ஓய்ந்து கிடக்காமல் எளிய பயிற்சிகள் கொடுத்து, எல்லா வகையிலும் பார்த்துக் கொள்ளுவாள். நல்ல வேளையாக நீங்கள் பொறுப்பபேற்றுக் கொண்டதால், செலவைப் பற்றி ய கவலை இல்லாமல், நர்ஸ் பற்றி என்னால் சொல்ல முடிந்தது. உங்கள் வீட்டில் நல்ல காற்றோட்டம் உள்ள பெரிய அறைகள் உண்டுதானே, குணசீலன்? உங்கள் தாயாருக்கு அப்படி ஓர் அறையைத் தயார் பண்ணச் செல்லுங்கள்." என்றார்.

சுகந்தினிக்கு உள்ளூர ஒரே சந்தோஷம்.

உரிமைப் போராட்டத்தில் முதல் படி, மரகதம் அவளது சொந்த வீட்டில் வசிப்பது. டாக்டர் சொன்ன விதத்தில், குணசீலனால் அதிலிருந்து பின் வாங்கவே முடியாது.

மறுப்பாக என்ன சொன்னாலும், ரசக் குறைவாகத் தோன்றும் என்று எண்ணமிடும்போதே, டாக்டரிடம் குணசீலன் சற்றும் தயங்கவே இல்லை என்பது அவளுக்கு நினைவு வந்தது.

தயங்காதது மட்டுமின்றி, இரவுக்கும் பகலுக்கும் தனித்தனி நர்சுகளுக்கு ஏற்பாடு செய்யும்படி, மயில்வாகனனிடம் கேட்டான் அவன். “முழு நாளும் ஒருவரே செய்வதானால் பணியில் தொய்வு விழக் கூடும், டாக்டர் சார். நீங்களே சொன்னது போலச் செலவைப் பற்றிய கவலை வேண்டாம், சார்.” என்று மட்டுமே கூறினான்.

அதாவது, தாயை அழைத்துப் போவது பற்றி அவன் மனதில் கலக்கமே இருக்கவில்லை!

இதற்குப் போய், அவனிடம் என்னென்ன சொல்லி வாதாடுவது என்று, அவ்வளவு நினைத்து வைத்தாளே! “தாயில்லாமல் அவன் பிறந்திருக்க முடியுமா? அவள்தானே முதல் தெய்வம்! அவள் சொல்லித்தானே தந்தையையே அறிவது . . . “

இப்படி நிறைய வாதங்களை யோசித்து வைத்திருந்தாள்.

எல்லாமே பயனற்றுப் போனபோதும், சுகந்தினியின் மதிப்பில் குணசீலன் மிகவும் உயர்ந்து நின்றான்!

மரகதத்தை மட்டுமின்றிக் கண்ணனையும் உடன் கூட்டிச் செல்லப் போவதாக அவன் கூறவும் அவளுக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று.

வட்டமாகிவிட்ட விழிகளால் அவள் வெறித்து நோக்க, “உன் ஆன்ட்டியின் மனநிலை குன்றியது அப்படியேதானே இருக்கிறது? இல்லாவிட்டாலும், கண்ணனுக்கு அவர்கள் மனதில் முக்கிய இடம் இருக்கிறது. கட்டாயம் தேடுவார்கள். அந்தக் குறை அவர்களுக்கு எதற்கு? கண்ணனும் அவர்களிடம் அதிக அன்பு வைத்திருக்கிறான். சேர்ந்தே இருக்கட்டுமே. “ என்று இயல்பாக உரைத்தான் அவன்.

முதலில் இருந்தே, தான் கூறிய விவரங்களைச் சரிபார்த்து மரகதத்தின் மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்ததில் இருந்து, தாய்க்குச் செய்வது எதிலும் குணசீலன் எதிர்மறை உணர்வுகள் எதையும் காட்டியதில்லை.

எரிச்சல், வெறுப்பு, கோபம் . . .ஊகூம், எதுவுமில்லை.

ஆனால், அன்று அவன் முகத்தில் சுகந்தினி கண்ட இறுக்கம்?

அவனது குடும்பத்தில் யாருக்கேனும் . . யாரேனும் மரகதத்திற்கு அவன் செலவு செய்வதை எதிர்த்திருப்பார்களா? அவர்களது நினைவில்தான் முகம் இறுகினானா?

அப்படி எதிர்ப்பாளர்கள் இருந்தால், ஆன்ட்டி அவர்களை எப்படி சமாளிப்பாள்? சும்மாவே சற்று மந்தமான மனப் போக்கு! வெகுளி வேறு!

முடிந்தவரை விவரம் அறிந்துகொண்டால், அதற்கு ஏற்றபடி ஆன்ட்டியைக் கொஞ்சமேனும் தயார்ப்படுத்தி அனுப்பலாமே!

மரகதம் எதிர்கொள்ள நேரக் கூடிய சூழலைப்பற்றி அறிந்துகொள்ளும் ஆவலை அடக்கமுடியாமல், குணசீலனிடம் சுகந்தினி பேச்சுக் கொடுத்தாள்.

“ஆன்ட்டியை அழைத்துப் போவதால், உங்கள் வீட்டில் பல மாற்றங்கள் நேரக் கூடும். மற்றவர்களுக்குப் பிடிக்குமோ என்னவோ?” என்றாள் பொதுவாக.

யோசனையாகப் பார்த்து, “மற்றவர்களா? வேலையாட்களை நான் அபிப்பிராயம் கேட்பதில்லையே! கேளாமல் சொல்ல அனுமதிப்பதும் இல்லை. “ என்றான் அவன்.

“நான் ஒன்றும் பணியாட்களைச் சொல்லவில்லை!” என்றாள் அவள் வெடுக்கேன.

“பின்னே?”

இதென்ன கேள்வி என்று உள்ளூரக் கடுத்தபடி, “வீட்டினர்.” என்றாள் அவள்.

“வீட்டினர் என்றால் யார் யார்?”

மக்கு மாதிரி இதென்ன கேள்வி என்று எண்ணியபடி “உங்கள் மமனைவி, அப்பா, தாத்தா பாட்டி இன்னும் . . “ என்று வேகமாகப் பதில் கூறும்போதே, இவன் வேண்டுமென்று இப்படிக் கேட்கிறானோ என்ற சந்தேகம் சுகந்தினிக்கு வந்துவிட்டது.

எனவே சமாளித்துக்கொண்டு, “அதாவது நெநெருங்கிய உறவினர்களைச் சொன்னேன்.” என்றாள்.

“ம்ம்ம் . . எனக்குக் கூட அப்படிக் கேட்கிறாய் என்றுதான் சந்தேகம். அதனால், உனக்குத் திருப்தியாக மனைவி இருக்கிறாள் . . மற்றவர்களும் இருக்கிறார்கள் . . .” என்று நிறுத்தி அவள் முகத்தைப்

பார்த்தவன், தானே தொடர்ந்தான். “இவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள் என்று சொல்லத்தான் ஆசை! ஆனால், இப்போது என் வீட்டில் இந்த யாருமே இல்லையே!” என்று சோகம் ததும்பக் கூறினான் அவன்.

இது நடிப்போ என்ற சந்தேகம் ரொம்பவும் தோன்றிவிட, “ஏன், வெளியூருக்குப் போயிருக்கிறார்களாக்கும்?” என்று சற்று அக்கறை அற்ற குரலில்  கேட்டாள் அவள்.

உடனே, “அதெப்படிப் போக முடியும்?” என்று குணசீலன் புருவம் உயர்த்திக் கேட்கவும் சுகந்தினி திகைத்தாள்.

வீட்டிலும் இல்லை., வெளியூருக்கும் செல்ல இயலாது என்றால் . . . சட்டென விஷயம் புரிந்துவிட, அவள் முகம் இளகியது. “வீட்டில் யாருமேவா இல்லை?” என்றாள் தணிவாக.

அரை வினாடிக்கும் குறைவான நேரமே தயங்கினான் அவன். பிறகு, “அதனால் பிரச்சினை எதுவும் இல்லை, சுகந்தினி. சமையல்காரம்மா, தோட்டக்காரன், காரியஸ்தர், அடுத்த நிலை வேலையாட்கள்  . .வீட்டில் கும்பலுக்குக் குறைவில்லை. இருளடைந்த வீட்டில் தன்னந்தனியாகச் சுற்றிக் கொண்டிருப்தாக எண்ணிப் பரிதாபப்பட வேண்டாம்.

கை நீட்டிச் சம்பளம் பெறுகிறவர்கள் என்பதால், என் விருப்பங்கள் ஓர் எழுத்து விடாமல் அப்படியே நிறைவேறுகின்றன. தனிமை போரடிக்காமல் இருப்பதற்கு டீவியும், வேலையும் இருக்கின்றன. அதனால் வருத்தப்பட ஒன்றுமே இல்லை!” என்றான் அவன் இலகுவாக.

“இந்தப் பாலைக் குடித்துவிட்டுப் படுத்துக் கொள்ளடாச் செல்லம்” என்று கொஞ்சலும் கெஞ்சலுமாகச் சொல்கிற பாட்டியின் கனிவு சுகந்தினிக்கு நினைவு வந்தது.

சமையல்காரிக்கு அந்தப் பரிவு இருக்குமா?

மனம் பரிதாபப் படத்தான் செய்தது. ஆனால் அதை அவள் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

தனக்குப் பெற்றோர் இல்லாதது பற்றி யாரேனும் பரிதாபப் பட்டால், அவளுக்கே பிடிக்காதுதான். என்னவோ, சமநிலையில் இருந்து கீழிறங்கிவிட்டது போல, உணர்வாள்.  அதே தவறை, அவள் மற்றவருக்குச் செய்வாளா, என்ன?

அத்தோடு, அடுத்தவரின் இரக்கத்தில் சுகம் காணத் தொடங்கிவிட்டால் மனம் தன்னிரக்கம் கொள்ளத் தொடங்கிவிடும்.

அப்புறம் ஒருவரை அழிக்க, வேறு விரோதிகள் தேவையில்லை.

அவனுமே பரிவு பிடிக்காமல்தானே, வருத்தப்பட ஒன்றுமில்லை என்று கூறினான்!

எனவே ஒரு சிறு கையசைவுடன், "அப்படியானால், உங்கள் வீட்டிலும் ஆன்ட்டி இலகுவாகப் பொருந்தி விடுவார்கள் என்கிறீர்கள். ஆனால், இத்தனை ஆண்டுகள் கழித்து உரிய இடத்திற்கு வருகிறார்கள். தேர் நிலைக்கு வருவது போல!" என்றாள் சுகந்தினி.

"உம். சொல்லலாம். . . . " என்றான் அவன் ஏதோ யோசனையாக.

"ஆமாம்" என்று அழுத்தமாக குணசீலன் ஏன் சொல்லவில்லை?

"ஆனால், தேர் கிளம்பாமலே இருந்திருக்கலாம்!" என்று யோசனையைத் தொடர்ந்து குணசீலன் முணுமுணுத்தான்.

"என்னது?"

"நீ சொன்னது சரிதான் என்றேன்." என்றான் அவன்.

சொன்னாலும் சொல்லாவிட்டாலும், ஆன்ட்டி அந்த வீட்டு எஜமானிதான். அதை யாரும் மறுக்க முடியாது. குணசீலன் உட்பட!

மேலும் இரு தினங்களில், மரகதம் சொந்த வீட்டுக்குக் கிளம்பிவிட்டாள். பெரியவர்கள் மரகதத்தோடு சென்று குணசீலனின் வீட்டில் அவளை விட்டுவிட்டு. வந்தனர்.

மற்றவர்களோடு சேர்ந்து வீட்டினுள் இயல்பாகச் சென்றபோதும், அதன்பின் சுற்றிலும் புரியாமல் பார்த்து, "நம்ம வீடு எங்கே?" என்று மரகதம் கேட்டாள்.

சிவகாமி அவள் கையைப் பற்றி, "இதுவும் உன் வீடுதான் மரகதம். உனக்கு இன்னும் கொஞ்சம் குணமாக வேண்டியிருக்கிறது. இவர்கள் நம் டாக்டர் அனுப்பி இருக்கிற நர்ஸ். அவர்கள் சொல்படி, மருந்து மாத்திரை சாப்பிட்டு, உடல் பயிற்சி எல்லாம் செய்ய வேண்டும். அப்புறம் ஜம்மென்று ஆகிவிடுவாய். இனியேனும் உன் பிள்ளையோடு சந்தோஷமாக இரு." என்றாள்.

தெளிவற்ற பார்வையோடு தலையாட்டியய மரகதம், கண்ணணைப் பார்த்துச் சிரித்தாளாம்.

"நிஜமான பிள்ளைக்கு எப்படி இருக்குமோ என்று எனக்குக் கவலையாக இருந்ததும்மா. என்னதான் மனநிலை அவ்வளவாகச் சரியில்லை என்று நம்ம டாக்டர் சொல்லியிருந்தாலும், அந்தப் பிள்ளைக்குக் கஷ்டமாகத்தானே இருக்கும். அதுவும் கணக்கே பாராமல்

இவ்வளவு செலவு செய்கிறவனுக்கு!” என்றாள் சிவகாமி பேத்தியிடம்.

அலுவல் நாள் என்பதால், அவளும் கூடச் செல்ல வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கவே இல்லை. ஆனால் பாட்டியின் பேச்சைக் கேட்டதும், சுகந்தினிக்கு உள்ளூர உறுத்தியது.

குணசீலன் மனம் நொந்திருப்பானோ?

ஆனால் தாத்தா வேறு சொன்னார். “இருபது இருபத்தைந்து வருஷங்களாக தாயும் பிள்ளையும் சந்தித்ததே கிடையாது. அம்மாக்காரி புத்தி தெளிவு இல்லாதவள் என்று மகனுக்குத் தெரியும்தானே? அப்புறம் எதற்காக வருத்தப்படுவது? பெரிய தொழிலைத் தனியாக , அதே சமயம் நல்லபடியாக நடத்துகிறவன். இப்படி உப்புப் பெறாத விஷயத்துக்கெல்லாம் வருத்தப் படவே மாட்டான். அதனால் பேசாமல் இரண்டு பேரும் அவரவர் வேலையைப் பாருங்கள். ம்ம்ம் , இன்று யார் சமையல். யாரானாலும், உப்பு  குறைவான விலைதானே என்று இரண்டு தரம் அள்ளிப் போட்டு விடாதீர்கள். உப்புப் பெறாத சின்ன சமாசாரம் என்று அதை நான் சும்மா விட்டுவிட மாட்டேன். ஜாக்கிரதை!” என்று போலியாக மிரட்டினார்.

நிலைமையை இலகுவாக்கும் அவரது முயற்சியை உணர்ந்து, மற்றவர்களும் ஒத்து ஊத, சீக்கிரமே வீடு கலகலப்பாயிற்று.

இரண்டே நாட்களில் சுகந்தினியை மீண்டும் குணசீலன் அழைத்தான்.

தனித்துப் பேச வசதியாகக் காஃபி ஷாப்புக்கே!

புதிதாக என்ன குழப்பம் நேர்ந்திருக்கக் கூடும்?

எதுவானாலும் உடனடி அபாயம் எதுவும் இல்லை என்பது தெளிவு. அப்படி ஏதாவது என்றால் தாத்தா, பாட்டிக்குத்தான் முதல் அழைப்பு சென்றிருக்கும்.

கண்ணன் பற்றிக் கேவலமாகக் கேட்டானே! அது போன்ற சந்தேகம் கேட்டால், போடா, போ என்று முகத்தில் அடித்தது போலச் சொல்லிவிட்டு, உடனே கிளம்பி விட வேண்டும்!

அவ்வப்போது குறுக்கிட்ட பல்வேறு எண்ணங்களைப் பிடிவாதமாக ஒதுக்கி, ஒருவாறு வேலையை முடித்துவிட்டு, காஃபி ஷாப்பை அடைந்த சுகந்தினிக்கு , அவனுடைய வீட்டுக்கு வரும்படியான அழைப்புடன் குணசீலன் காத்திருந்தான்.

அவள் வியப்புடன் நோக்கவும், “அடிக்கடி உன் பெயர் சொல்லித்

தேடுகிறார்கள். நீயே சொன்னது போலப் பதினெட்டு ஆண்டுப் பழக்கத்தின் விளைவு என்று தெரிகிறது. இந்த ஏக்கம் உடல்நிலையைப் பாதித்து விடக் கூடாதில்லையா? அதனால், நீ அங்கே வந்து ஒரு வாரம் அவர்களோடு தங்கிவிட்டுப் போகிறாயா? கண்ணன் பள்ளிக்குச் செல்வது போல, நீயும் அங்கிருந்தே அலுவலகத்துக்குப் போய் வரலாம். என்ன, செய்கிறாய்தானே?" என்றான் அவன் அவள் மறுக்கமாட்டாள் என்ற நம்பிக்கையோடு. .

சரியான விடை கண்டுவிட்ட திருப்தி அவன் முகத்தில் நன்றாகவே தெரிந்தது.

அவள் அலுவலகம் செல்வதற்கும் வசதியாக யோசித்து வழி கண்டிருக்கிறானாம்!

ஆனால், தனக்குத் தேவையானதை நடத்திக்கொள்ள மட்டும்தான் அவனது இந்த யோசனை எல்லாமே. .

மற்றபடி, அவள் வேறு வேலைகள் எதுவும் வைத்திருக்கிறாளா? அன்னியனான அவன் வீட்டில் தங்கியிருக்க அவளுக்குப் பிடிக்குமா? அது சரியென்று பெரியவர்கள் . . ஏன், அவளுமே ஒத்துக் கொள்வாளா? எதைப் பற்றியும் அக்கறையில்லாமல், அவனது காரியம் நடப்பதற்குத் தேவையானதை யோசித்து முடித்தாயிற்று.

இனி மகாராஜாவின் திட்டப்படி மற்றவர்கள் நடக்க வேண்டியதுதான் பாக்கி!

சுகந்தினி ஒரு மாதிரிப் பார்க்கவும், குணா சற்றுத் தயங்கினான்.

யோசனையோடு அவளை நோக்கி, "என்ன? மறுபடியும் எதையேனும் எண்ணிப் பாராமல் பேசி விட்டேனா? ஆனால், இதில் உனக்கு என்ன பிரச்சினை இருக்க முடியும்? வண்டி வைத்திருக்கிறாய். அதனால் வேலைக்குப் போய் வருவது பிரச்சினை ஆகாது. வேறே . . . ஓ! உன்னைப் பிரிந்து, உன் தாத்தா பாட்டி கஷ்டப்படுவார்களா? ஆனால் யோசி, நீ பணி புரியும் அலுவலகத்தில் உன்னை வெளியூருக்கு அனுப்பினால் சரியென்று இருக்க மாட்டார்களா? மற்றபடி என்ன பிரச்சினை ?" என்று, அவள் கேட்கக் கூடிய கேள்விகயை எல்லாம் அவனே யோசித்து, பதிலும் கூறி முடித்தான்.

ஆனால், "எப்படியும் உங்களுக்கு ஒழுங்கானபடி யோசிக்க வராதுதான் இல்லையா?" என்று அவள் சிறு கண்டனம் கலந்த குரலில் கேட்கவும் குணசீலன் திகைத்தான்.

"ஏஏ . .ன்? நான் கேட்டதில் என்ன தப்பு இருக்கிறது?"

“இதே ஊரில், எங்கள் வீட்டை விட்டு வேறு ஒரு வீட்டில் ஒரு வாரம்  நான் தங்கிவிட்டுத் திரும்பிப் போனால், அங்கே சுற்றுச் சூழலில் உள்ளவர்கள் என்னைப் பற்றி என்ன எண்ணுவார்கள்? இதைப் பற்றிச் சற்றேனும் யோசித்தீர்களா?” என்று சுகந்தினி கேட்கவும் குணசீலக் சற்று அதிர்ந்தான்.

இப்படி ஓர் எண்ணம் அவனுக்கு வரவே இல்லை என்பது தெளிவு!

ஆனாலும் உடனே சமாளித்து, “வீட்டில் பெரியவர்களாக என்னைப் பெற்றவர்கள்

கூடவே இருக்கும்போது, தப்பாக யார் எண்ண முடியும்? அவர்களைப் பற்றி, உன் அக்கம் பக்கத்தாருக்கும் தெரியும்தானே?” என்று திருப்பிக் கேட்டான் அவன்.

“ஆன்ட்டி இருக்கும் நிலையில் . . அதை விடுங்கள், இப்போது உங்கள் இருவர் உறவே வெளி உலகம் அறியாதது. இதனிடையே நான் வேறு வருவதா? உண்மையை யாருக்கெல்லாம் தமுக்குப் போட்டு அறிவிப்பீர்கள் . . “ என்று சீரியசாகச் சொல்லி வரும்போதே, சுகந்தினி சட்டெனச் சிரித்தாள்.

வியந்தபோதும ,விரைவாக அடக்கிக்கொண்டு, “என்ன சிரிப்பு?” என்று அதட்டிக் கேட்டான் அவன்.

“அதில்லை . . . நான் சொன்னதைப் போல நீங்கள் தண்டோராப் போட்டுச்  சொல்வது போ ஒரு கற்பனை தோன்றியதா . . “ என்றவளுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

உதட்டோரம் துடித்தபோதும் அடக்கிக்கொண்டு, “நல்ல கற்பனை!” என்று தோளைக் குலுக்கினான் அவன்.

“ஆனால் வேடிக்கைக் கற்பனைகளை விட முக்கியமான விஷயம், இப்போது வேறு இருக்கிறது. அவர்கள் . . .உன் ஆன்ட்டி . . உன் பேரைச் சொல்லிச் சொல்லிப் புலம்புகிறார்களே! பையன் கூட, அக்கா இருந்தால் நல்லாருக்கும் என்கிறான். அக்காவைப் பார்க்க வேணும் என்று என்னிடமே வந்து கெஞ்சுகிறானே! அவர்கள் இருவரின் தவிப்பைப் போக்குவதுதான் இப்போது முக்கியம். அதற்குத் தீர்வாக என் சிற்றறிவு கண்ட வழி இதுதான். இன்னமும் இது தப்பென்று எனக்குத் தோன்றவில்லை.” என்று முசுட்டுக் குரலில் கூறினான் குணசீலன்.

“எப்படித் தோன்றும்? உங்கள் பிரச்சினை தீரும் என்றால், அது மட்டும்தான் உங்களுக்கு முதலும் முடிவுமான முக்கியம் ஆனால்,

இதனால் மற்றவர்கள் எப்படி பாதிக்கப் படுவார்கள் என்கிற யோசனையே வரக் காணோமே! அப்பட்டமான சுயநலமில்லை?”

எரிச்சலை மறையாத முகச் சுளிப்புடன், “சரி , என் யோசனை சுயநலம் என்றே வைத்துக் கொள்.. ஆனால், வேறே என்னதான் தீர்வு? பிறர் நலம் மட்டுமே பேணும் நீயே சொல்லலாமில்லையா?” என்று கேட்டான் அவன்.

“தாராளமாக!” என்றாள் அவள் தயங்காமல். “ஆன்ட்டியை எங்கள் வீட்டுக்கு அனுப்பி வையுங்கள். இந்த வாரக் கடைசிக்கு அனுப்புங்கள். அல்லது, இப்போதே அனுப்பினாலும் சரி. முன் வழக்கம் போல எல்லாம் நடக்கும். உங்கள் நர்ஸ், எங்கள் வீட்டில் இருந்து ஆன்ட்டியைக் கவனிக்கட்டும்.” என்று அவள் எளிதாக விடை கண்டு கூறவும், அவன் முகத்தில் லேசாக அசடு வழிந்தது.

“என் பேத்தி மகா புத்திசாலி என்று உன் தாத்தா அடிக்கிற பெருமையில் கொஞ்சம் உண்மையும் இருக்கிறது போல! இது நல்ல யோசனைதான். கண்ணன் பள்ளியில் இருந்து வந்ததும், நானே கூட்டி வந்து விடுகிறேன்.” என்றான்

அவள் சொன்ன யோசனையைப் பிகு பந்தா எதுவும் இல்லாது, அவன் இயல்பாக ஏற்ற விதம் அவளது மனதைத் தொட்டது.

எனவே, அவள் வேறு பேசினாள். “நானும் ஆன்ட்டி, கண்ணனின் அறையைச் சுத்தப்படுத்தி, வைக்கிறேன், தாத்தா பாட்டியிடமும் சொல்லி வைக்கிறேன்.. அவர்களும் சேர்ந்து வரவேற்றால், ஆன்ட்டிக்கு சந்தோஷமாக இருக்கக் கூடும்.” என்று அவள் ஆர்வமும் மகிழ்ச்சியுமாகத் திட்டமிடுதை வியப்புடன் கவனித்தான் குணசீலன்.

மெய்யான பாசம் இல்லாமல் இது முடியாது, ஆனால் ரத்த உறவே இல்லாதபோது, இது எப்படி சாத்தியம்?

மதகதத்தின் சிகிச்சைக்காக, முழுக்க அன்னியனாக தன் பின்னே சுகந்தினி எப்படி அலைந்தாள் என்பது, குணசீலனுக்கு நினைவு வந்தது.

அதை விடவும் அவன் மனதில் ஆழமாகப் பதிந்தது, இன்னொன்று.

பொதுவாக இப்படி ஒரு செலவை, அது நல்லதோ கெட்டதோ, அல்லது இப்படி சிகிச்சையாகவே இருந்தாலும், ஏற்றுக் கொள்வதாகச் சொல்லிவிட்டால் போதும். எவ்வளவு முடியுமோ அவ்வளவு பணத்தைக் கறப்பதில்தான் எல்லோரும் குறியாக இருப்பார்கள். வழக்கமாக பஸ்சில் போகிறவர்கள் கூட ஆட்டோ செலவு என்று கணக்கெழுதிக் காசு கேட்பார்கள். .

முன்னொரு தரம் தொழிற்சாலையில் பணியாள் ஒருவனுக்குக் காலில் அடிபட்டு மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள். நம்மிடம் பணி செய்கிறவன் என்று செலவைக் குணசீலன் ஏற்றிருந்தான். மனிதாபிமான அடிப்படையில் குணசீலன் ஒரு நாள் அவனைப் பார்க்கச் சென்றால் சுமார் பதினைந்து பேருக்கு நோயாளியின் கணக்கில் விருந்து உபசாரம் நடந்து கொண்டிருந்தது. இனிப்பு காரம் காஃபி, கோக் . . . இன்னும் பலதும்! மறுநாள் கணக்கரை அனுப்பி, மருத்துவச் செலவு, அறை வாடகை மட்டும்தான் தரப்படும் என்று சொல்லி அனுப்பியபிறகு, செலவுக் கணக்கு பாதியாகக் குறைந்து போனது.

ஆனால், வாகதீசரிடமிருந்து, இப்படி ஒரு பைசாவுக்குக் கூடக் கணக்கு வந்ததில்லை. சொல்லப் போனால், அவர்களில் யாரேனும் மரகதத்தோடு இருக்கும்போது, ஏதாவது மருந்துச் செலவுக்குப் பணம் தேவைப்பட்டால், தாத்தாவும் பேத்தியும் அவரவர் கையில் இருந்து கொடுத்தார்களே தவிர, அந்தச் செலவு இவ்வளவு ஆயிற்று , தந்துவிடு என்று, அவனிடம் யாருமே வந்து நின்றதில்லை.

ஏதோ பெரிய தொகைக்குக் கணக்கு வரப் போகிறது என்று , அப்போது குணசீலன் நினைத்திருந்தான். ஆனால் இன்றளவும் அந்த மாதிரி ஒரு கணக்கும் அவனிடம் வரவே இல்லை. அதாவது, அந்த சிகிச்சையைச் செய்யத் தேவையான பெரிய அளவுப் பணம் அவர்களிடம் இல்லாததால் மட்டுமே, அவனிடம் கேட்டார்கள். மற்றபடி, அவனது காசு அவர்களுக்குத் தேவையே கிடையாது!

நடந்ததை நினைக்க நினைக்க, சுகந்தினியுடைய குடும்பத்தின் மீது குணசீலனுக்கு மரியாதை ஏறியது.

அன்று அலுவல் முடிந்ததும், அவனே இருவரையும் அழைத்துச் சென்றான். நர்சையும். மரகதத்துக்கும் கண்ணனுக்கும் வீட்டில் அன்பான வரவேற்பு காத்திருந்தது.

இருவரையும் தடவிக் கொடுத்த சிவகாமியையும் மரகதத்தின் தலையை வருடிவிட்டு, நாற்காலியை இழுத்துப் போட்டு "உட்காரம்மா." என்ற வாகதீசரையும் பார்க்கையில், "உன் தாத்தா என்ன தர்மதாதாவா" என்று சுகந்தினியிடம் தான் கேட்டது மகா அநியாயமாக குணசீலனுக்குத் தோன்றியது.

"அக்கா, அக்கா" என்று, சுகந்தினியின் கையைப் பற்றிக்கொண்டு கண்ணன் குதித்தான்.

இந்த அன்புக் கூட்டில் தானும் புகுந்து விட வேண்டும் போல ஓர் ஆவல் கடல் அலை போல உள்ளே எழுவதைக் குணசீலன்

உணர்ந்தான்.

வழக்கம் போலத் தலையை உலுக்கி விட்டுக் கொண்டதும், அந்த உணர்வு மறையவோ, குறைந்து விடவோ இல்லை.

சீக்கிரமாக இங்கிருந்து சென்றுவிடவேண்டும் என்று மூளை உத்திரவிடும்போதே, “நான் மட்டும் வீட்டில் தனியே இருக்க வேண்டும் . . .” என்றது அவனது வாய்.

வினாடி கூடத் தயங்காமல், “ஏனப்பா அப்படி? பேசாமல் இன்று முழுதும்  இங்கேயே இருந்து விடு “ என்றாள் சிவகாமி இயல்பாகக. கூற, குணசீலனும் பேருக்குக்கூட மறுக்காமல் உடயே தலையை ஆட்டிவிட்டான்.

எல்லோருடனும் குணசீலன் கலகலப்பாகப் பழகுவதைப் பார்த்த சுகந்தினிக்குத் தன் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு, அது உகந்த நேரமாகத் தோன்றியது.

# அத்தியாயம் -6

அந்த வீட்டில் வராண்டா மாதிரி இருந்த இடத்தை மழைச்சாரல் அடிக்காதபடி சாய்வு வைத்துக் கட்டி, பழைய முக்கியமாக பொருட்களை வைத்திருந்தார்கள்.

என்னென்ன பொருட்களை அங்கே வைக்கப் போகிறார்கள் என்று தெரிந்ததும், வாகதீசருடைய நண்பரான வீட்டு உரிமையாளரான அதைத் தேவைப்பட்டபடி வசதியாகக் கட்டிக் கொடுத்திருந்தார்.

பொக்கிஷம் மாதிரியான பழைய படங்களும், காந்திஜீயின் சத்தியசோதனை, விவேகானந்தரின் உரைகள், காஸ்பெல் ஆஃப் ராமகிருஷ்ணா, தாயுமானவர் பாடல்கள் . . .இப்படிப்பட்ட நூல்களும் அங்கே அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன.

அந்தப் படங்களைப் பற்றி சுகந்தினி பேச்சை எடுத்ததுமே, அவள் எதிர்பார்த்தது போலவே, “குணா சாரைக் கூட்டிப் போய், எல்லாம் காட்டம்மா. “ என்று  வாகதீசர் கூறினார்.

சட்டென எழுந்துவிட்டபோதும், “ஆனால் தாத்தா, அதெல்லாம் பார்க்க, குணசீலனுக்குப் பிடிக்குமோ என்னவோ? இன்றைக்கு நிலவரப்படியான, துப்பறியும் கதைகள், அரசியல்  கட்டுரைகள், அடிதடி சண்டைகள் பற்றியஎதுவும் கிடையாதே! போரடித்துப் போக மாட்டாரா?” என்று கேலியாக க் கூறினாள் சுகந்தினி.

சீண்டல்தான்.

புரிந்தும் அதைக் காட்டிக்கொள்ளாமல், “ஒருவேளை வித்தியாசமான அனுபவமாகி, அதனாலேயே ரசிக்கும் படியாகவும் இருக்கக் கூடும் அல்லவா? போய்ப் பார்க்கலாம். நீயே வந்து காட்டுவாயல்லவா?” என்று எழுந்தான் அவன்.

தன்னைப் புரிந்துகொண்டான் என்று அவளும் உணர்ந்துகொண்டாள்.

எனவே, அங்கே வைக்கப் பட்டிருந்த முக்கியமான படங்களையே அவளும் காட்டினாள். என்னவோ அதைக் காட்டுவதற்காகத்தான் மெய்யாகவே அவனை அழைத்து வந்தது போன்ற பாவனை.

அந்தக் காலத்துப் படங்கள். பார்க்கப் பார்க்கக் குணசீலனுமே ஈடுபாட்டுடன் ஆர்வமாகப் பார்வையிடலானான்.

“இந்தப் படம் பார்த்தீர்களா? காந்திஜீ சொன்ன படி,

தாத்தாவுடைய அப்பா உப்பு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டபோது எடுத்ததாம். என் . . எள்ளு . . இல்லை. கொள்ளுத் தாத்தா. சரியாகச் சொன்னேன்தானே?" என்று அவனிடம் சந்தேகம் கேட்டாள் அவள்.

மெச்சுதலாக நோக்கி, "நீ சொன்னால் தப்பாக இருக்குமா?" என்று புன்னகை செய்தான் குணசீலன்.

கவர்ச்சியான புன்னகை! ஆனால், அது மாறிவிடுமே என்று அவளுக்குத் தயக்கம் வந்தது. ஆனால் உடனேயே தன்னைத் தானே திடப்படுத்திக்கொண்டு, வேகமாகக் கூறினாள்.

"உங்களைப் பார்க்கும்போது சொல்லவேண்டும் என்று எண்ணியது. ஆனால் மறந்து மறந்து சொல்லாமலே போய்விடுகிறது. நல்லவேளையாக இப்போது நினைவு வந்தது. மீண்டும் மறக்குமுன் சொல்லி விடுகிறேன்." என்றாள் ஒரே மூச்சாக.

"தானாக மறந்து போயிற்றா? என்னுடன் பேசுகிற சுவாரசியத்தில் மறந்ததா?" என்று சிரித்தான் அவன். "எதுவானாலும், அது அதிசயமே! ஏனெனில், நீ ஒன்றைத் நினைத்தால் செய்து முடிக்காமல் இடையில் விட மாட்டாய் என்பது என் தாழ்மையான கருத்து." என்றான் சிரிப்பு வாடாமலே.

நல்லவேளை! நல்ல மனநிலையில் இருக்கிறான். இந்தச் சிரிப்பில் மயங்கி நிற்காமல், சிரிப்போடு சிரிப்பாக வாழைப்பழத்தில் ஊசியேற்றி விட வேண்டும்.

"பெரிதாக ஒன்றுமில்லை. பெரிய பணச் செலவு, கூடவே பயங்கர அலைச்சல்! எதையும் பொருட்படுத்தாமல், ஆன்ட்டியின் சிகிச்சைப் பொறுப்பை முழுதாக ஏற்றுச் செவ்வனே செய்து முடித்தீர்களே! பெரிய்ய விஷயமில்லையா? அதற்கு நன்றி சொல்ல நினைத்ததுதான் மறந்து, மறந்து போனேன்! நல்ல்ல வேளையாக, இப்போது நினைவு வந்து சொல்லியும் விட்டேன். அப்பாடா!" என்று பெரிய மூச்சை எடுத்து விட்டுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள் சுகந்தினி.

கண்கள் இடுங்க அவளைக் கூர்ந்து பார்த்தான் அவன். பிறகு, "அவ்வளவேதானா? ஆனால், அவர்கள் என் தாயார்! நினைவிருக்கிறதல்லவா?." என்று வினவினான் அவன்.

சரேலென, "நான் நினைப்பது இருக்கட்டும்! அந்த உறவு பற்றி நீங்கள் எண்ணியதாகவே தெரியவில்லையே!" என்றாள் அவள்.

"என்ன உளறல் இது? கடந்த மூன்று மாதங்களாக என்னதான்

செய்து கொண்டிருக்கிறேன் என்று நினைத்தாய்?” மூ . .ன் . .று மா . .தங்களாக! அதாவது, தொண்ணூறு நாட்களாக! இன்னும் மணிக் கணக்கு, வினாடிக் கணக்கெல்லாம் போட்டால், தலை சுற்றும் அளவுக்குப் பெரீ . . ய எண் ஆகிவிடும். கால்குலேட்டர் இல்லாமல் என்னால் போடக் கூட முடியாது! அடேயப்பா! எவ்வளவு நீண்ட காலம்! சுமந்து பெற்றவர்களுக்கு ரொம்ப அதிகமாகத்தான் செய்திருக்கிறீர்கள்! “ என்று சற்று அதிகப்படியாக வியந்தாள் சுகந்தினி.

எந்த உணர்ச்சியும் காட்டாமல் எங்கோ பார்த்தபடி பேசாமல் கேட்டுக்கொண்டு நின்றவன், அவள் பேச்சை நிறுத்தவும், “இப்படிச் சுற்றி வளைக்காமல், என்ன தேவையோ, அதை நேரடியாகச் சொல்லுகிறாயா?” என்று கேட்டான். .

அவள் சொல்லலானாள். “ஒன்று தெரிந்து கொள்ளுங்கள் குணசீலன்., ஆன்ட்டி எங்கள் வீட்டுக்கு வந்தே பதினெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அதற்கு முன் எவ்வளவு காலமோ? . . “ என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே குறுக்கிட்டு, “ஏழு ஆண்டுகள்.” என்று விவரம் மட்டும் கொடுத்தான் குணசீலன்.

ஒரு கோபப் பெருமூச்சுடன், “ஏழு ஆண்டுகளா? அப்படியானால் ஆன்ட்டியை நீங்கள் பிரிந்து மொத்தம் இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன! ஏ . .அப்பா! எவ்வளவு நீண்ட காலப் பிரிவு! ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நீங்களே சொன்ன மூ . .ன்று மாதங்களாக அவர்களைப் பராமரிப்பது மகாப் பெரிய காரியம்தான். நீங்கள் சொன்னால் ஒத்துக் கொள்ள வேண்டியதுதான்! “ என்றாள் அவள் எகத்தாளமாக.

தலை தானாகக் குனிந்தபோதும், “என்ன செய்வது? அவர்கள் இருக்கும் இடமே மூன்று மாதங்கள் முன்னதாகத்தானே தெரிந்தது?” என்று முணுமுணுப்பாகச் சொன்னான் அவன்.

“இது . . மறுக்க முடியாத காரணம்தான். ஆனால், இன்னும் எனக்கு ஒன்று புரியவே மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறது...சொல்லுங்கள் குணசீலன்., இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாகக் காணாமல் போன உங்கள் தாயாரை, நீங்கள் ஏன் தேடவே இல்லை?”

சிறு மௌனம் நிலவியது.

“இவள் யார் கேட்பதற்கு என்று தோன்றினால் வெளிப்படையாகச் சொல்லி விடுங்கள். உங்களுக்குத் தொல்லை தராமல், இப்போதே இங்கிருந்து விலகிப் போய்விடுவேன். “ என்றாள் அவள்.

“அனாவசியமாக மிரட்ட வேண்டாம். . .”

“இதில் மிரட்டுவதற்கு என்ன இருக்கிறது? உங்களுக்கும் எனக்குமே என்ன இருக்கிறது? எனக்குப் பிடித்தமானதைத்தான் செய்தாக வேண்டும் என்கிற கட்டாயம் உங்களுக்கோ, எனக்குப் பிடிக்காததை நீங்கள் செய்வதைப் பொறுத்துக்கொண்டு இங்கேயே இருந்தாக வேண்டிய கடமை எனக்கோ கிடையாது எனும்போது, நான் எப்படி உங்களை மிரட்ட முடியும்? நான் யாரோ, நீங்கள் யாரோ? எனக்கு எத்தனையோ வேலை இருக்கும். அதைச் செய்வதற்கு நான் விலகிப் போவது ஒருபோதும் மிரட்டல் ஆகாது! “ என்றாள் அவள்.

“சும்மாப் போவதற்கும், நீ விரும்பியது கிடைக்கவில்லை என்று ஆத்திரம் கொண்டு விலகுவதற்கும் வேறுபாடு இல்லையா? அத்தோடு, நீ யாரோ, நான் யாரோ என்று என்ன வசனம்? அது மிரட்டல் இல்லை என்றால் வேறு எது மிரட்டல்? “ என்று அவளை நேராகப் பார்த்துக் கேட்டான் குணா.

அவனுக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், “ ஆன்ட்டிக்கு உரிய மதிப்பு கிடைக்கும் என்று நினைத்தேன். இந்த விவரம் அறிய எனக்கு உரிமையில்லை என்றால், அதன் பிறகு நான் இங்கே எதற்காக நிற்பது?” என்றாள் அவள்.

கண்கள் பளிச்சிட, “நிற்பானேன்? உட்காருவதுதானே?” என்றவன் அவள் முகம் கடுக்கவும், “இதோ பார், நான் சொல்லத் தயங்கினேன் என்றால், கேட்கும் உரிமை உனக்கு இல்லை என்பதற்காக அல்ல. அவர்களிடம் உனக்கு மிகுந்த அன்பு இருக்கிறதே, விவரம் தெரிந்தால் வருத்தப்படுவாயே என்பதற்காகத்தான். “ என்றான் சற்றுத் தணிவாக.

“பரவாயில்லை, தைரியமாகச் சொல்லுங்கள். பிடிக்காத வார்த்தைகளைக் கேட்டதுமே வாடிச் சுருண்டு விட, என் மனம் ஒன்றும் அனிச்சம்பூ அல்ல, என் தாத்தா பாட்டி என்னை அப்படி வளர்க்கவும் இல்லை. மேலும் ஆன்ட்டி எப்படிப்பட்டவர்கள் என்று உங்களை விடவும் எனக்கு நன்றாகத் தெரியும். என்னவென்று சும்மாச் சொல்லுங்கள்.”என்று விரட்டினாள் அவள்.

தோளைக் குலுக்கிவிட்டு, “அவர்கள் மேல் பெரிய திருட்டுக் குற்றம் இருக்கிறது இன்னும் . . .” என்று அவன் மேலே சொல்லுமுன், “பொய்!” என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாக.

“அதற்காகத்தான் சொல்லத் தயங்கினேன். உன்னால் ஒத்துக்கொள்ள முடியாது. . திருட்டு தவிர, அவர்கள் மேல் இன்னும் . . இன்னும் சில பழிகளும் இருக்கின்றன. ஆனால், எதையும் நீ ஒப்புவது கடினம். மாட்டாய் என்றே சொல்லுவேன்.”

“பதினெட்டு ஆண்டுகளாக மரகதம் ஆன்ட்டியோடு ஒரே வீட்டில் வசிப்பவள் நான். அவர்களைப் பற்றி எனக்குத் தெரியாதா?”

“முதல் முறையாக அவர்களை நீ பார்த்தபோது, உனக்கு ஐந்தே வயது என்றாயே., நல்லவர்கள் கெட்டவர்கள் புரியாத வயது. முதல் அபிப்பிராயம் பிடித்துப் போய் விட்டதால் அதே போல நல்லபடியாகவே நினைக்கலாம் அல்லவா? ஒருவரைப் பிடித்துப் போய்விட்டால், அவர்களது தப்புகள் கருத்தில் படுவதில்லை. இது உலக நியதி. “

ஆத்திரத்துடன் அவனைப் பார்த்தவளுக்கு உள்ளூர திக்கென்றது. ஆன்ட்டியை இப்படியெல்லாம் பேசுகிறவனிடம் போடா என்று விலகிப் போய்விடாமல் நின்று பேசிக் கொண்டிருக்கிறாளே! இவனை அவ்வளவா பிடித்துப் போயிருக்கிறது?

எண்ணங்களை உதறுகிறவள் போலத் தலையை லேசாக உலுக்கிக் கொண்டவளுக்கு குணசீலனின் பேச்சில் இன்னொன்று மனதில் உறுத்தியது.

அவனை ஏறிட்டுப் பார்த்து, “எனக்கு நல்லது கெட்டது தெரியாத சிறு வயது என்றீர்களே, ஆன்ட்டியை நீங்கள் பிரிய நேர்ந்தபோது, உங்களுக்கு மட்டும் எல்லாம் பகுத்துணரும் வயதா? கிளிப்பிள்ளையாக மற்றவர்கள் ஏற்றியதைத்தானே சொல்ல முடியும்? ஆன்ட்டியைப் பற்றிய அந்தக் கருத்து ஏன் பிழையாக இருக்கக் கூடாது?” என்று கேட்டாள்.

ஒரு கணம் பேசாதிருந்துவிட்டு, அவன் சொன்னான்.

“அப்போது எனக்கு மூன்று வயதுதான். நீ சொல்வது போல, உன்னைப் போலவே எனக்கும் பகுத்துணரும் சக்தி இருந்திராதுதான். ஆனால் உனக்கில்லாத ரத்த உறவு எனக்கு இருக்கிறது. அவர்களைப் பற்றி அறிந்த நெருங்கிய உறவினர் இருந்தார்கள். என் பிடிவாதத்தைச் சமாளிக்க முடியாமல், வேறு வழியின்றி நடந்தது எல்லாம் எனக்குச் சொன்னவர்கள், என்னைப் பெற்ற தந்தையும் . . . இதோ பார், எல்லாம் முழுதாகச் சொன்னால்தான் உன்னால் இதை நன்கு புரிந்துகொள்ள முடியும். ஆனால், வெகு நேரம் இங்கே நாம் இருவரும் தனியே நின்று பேசிக் கொண்டிருப்பதை உன் வீட்டில் தப்பாக நினைக்கக் கூடும். அதனால் . .”

“அதனால் இப்போதைக்கு இந்தப் பேச்சை விட்டுவிடேன் என்று கேட்கிறீர்களா? அப்படி நழுவ முடியாது குணா சார்! ஆனால் ஒன்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் சொன்ன காரணத்துக்காக என்னை மட்டுமல்ல, எந்தப் பெண்ணையும் தவறாக எண்ணுமளவு, என் தாத்தா

பாட்டி இருவருமே குறுகிய மனம் உடையவர்கள் அல்ல! அத்தோடு, இங்கிருக்கும் படங்களைப் பற்றின முழு விவரம் சொல்வதானால் முழு நாளும் போதாது. அதனால், தேவையற்ற சாக் கு . . . .காரணங்களைத் தேடுவதை விட்டுவிட்டு, விஷயத்தைச் சொல்லுங்கள்." என்றாள் அவள் பிடிவாதமாக.

"உன்னிஷ்டம்" என்று மறுபடியும் தோளைக் குலுக்கியவன் அங்கே கிடந்த நாற்காலிகளில் ஒன்றில் அமர்ந்து அவளையும் உட்காருமாறு சைகை செய்தான். அவளும் அமர்ந்ததும் தன் விளக்கத்தைத் தொடங்கினான்.

"என் பெற்றோர் காதல் திருமணம் செய்தவர்கள். பாட்டி எவ்வளவோ தடுத்தபோது . . .ம் . .புரிகிறது, புரிகிறது! உன் மனம் எப்படிப் போகிறது என்று தெரிகிறது. பாட்டி ஏதோ சூழ்ச்சி செய்தவிட்டார்கள் என்று எண்ணுகிறாய் அல்லவா? அப்படி எதுவும் நடக்கவில்லை. அது நிச்சயம். "

"எப்படித் தெரியும்?"

"காணாமல் போன நகைகள் பற்றிப் போலீசில் புகார் கொடுக்க வேண்டும் என்று ரொம்பவும் வற்புறுத்தியது பாட்டிதான். இதில் அவர்கள் ஏதாவது சூழ்ச்சி செய்திருந்தால், போலீஸ் கண்டுபிடித்து விடக் கூடுமே என்று விஷயத்தை அப்படியே அமுக்க அல்லவா முயன்றிருப்பார்கள்?"

சுகந்தினியின் முகத்தில் சந்தேகம் குறையாததைக் கண்டதும், ""எல்லாமே வரிசையாகச் சொன்னால்தான் உனக்குப் புரியும். அவசரப்பட்டுக் குறுக்கிடாமல் பொறுமையாக இருந்து முழுதும் கேள்." என்று ஒரு சிறு குட்டு வைத்துவிட்டு அவன் தொடர்ந்தான்.

அவனது வழக்கம் போலவே லேசாகத் தோளை மட்டும் குலுக்கிவிட்டு அவள் மௌனம் காக்க, அவன் மீண்டும் தொடங்கினான்.

"முதலில் பாட்டிக்கு மருமகளைப் பிடிக்காதபோதும், ஒரே பிள்ளை பிடிவாதத்துக்குப் பணிந்து, என் பெற்றோரின் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். அது மட்டுமல்ல. மகனின் மகிழ்ச்சியை மனதில் கொண்டு, மருமகளையும் அன்பாகவே நடத்தினார்கள்.

"அவர்களது குடும்பம் அந்த நாளிலேயே, இரண்டாவது தலைமுறையாக வளம் பொருந்தியது. செட் செட்டாகக் கனமான நகைகள் உண்டு. பாட்டிக்கு அவர்களுடைய மாமியார் கொடுத்தவை.

பரம்பரை நகைகள்.

“நீ வைத்திருந்த படத்தில் உன் ஆன்ட்டி அணிந்திருந்தது, அது போன்ற ஒரு செட் நகைகளையே! அதே போல நாலு செட் நகைகள் உண்டாம். .

“அவைகளையெல்லாம் மருமகளுக்கு அணிவித்து அழகு பார்ப்பார்களாம். உறவில் ஏதாவது விசேஷம் என்றால் செட் செட்டாக அணிவித்து அழைத்துப் போவார்களாம். விழா முடிந்து வீடு திரும்பியதும் திரும்ப வாங்கி, பத்திரப் படுத்துவார்களாம்.

“நகைகளின் மதிப்புத் தெரியாமல் அலட்சியமாகப் போட்டுத் தொலைத்து விடக் கூடாதே என்ற நல்ல எண்ணத்தில் என் பாட்டி செய்தது. ஆனால், அதுதான் தப்பாகத் தோன்றி, தனக்கென்று ஒரு போதும் இந்த நகைகளை மாமியார் தரவே மாட்டார்கள் என்று மருமகள் நினைத்துவிட்டாள் என்பது பாட்டி யின் கருத்து.

“ஒரு தரம் அடுத்தடுத்து திருமண விழாக்கள் நாலைந்து வந்தனவாம். முதல் விழா முடிந்து வந்ததும் மருமகள் கழற்றித் தரவில்லை. பாட்டியும் கேட்கவில்லை,,  மாற்றி மாற்றி அணியும்படி இன்னும் ஒரு செட் நகைகளை வேறு கொடுத்தார்களாம். இரண்டாவது விழாவுக்குச் சென்றிருந்தபோது, மூன்று வயதுச் சிறுவனான என்னைப் பாட்டியிடம் கொடுத்துவிட்டு, அவர்கள், உன் ஆன்ட்டி காணாமல் போய்விட்டார்கள்! அணிந்திருந்த நகைகளோடு.

“வீட்டுக்கு வந்து பார்த்தால், முதல் செட்டையும் காணோம். கையில் ஒரு சிறு பை எப்போதும் வைத்திருப்பார்களாம். வெல்வெட் பெட்டிகளில் இருந்து நகைகளை எடுத்து, அந்தப் பைக்குள் கண்டபடி திணித்துக் கல்யாண வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இரண்டு செட் நகைகளோடு ஓட்டம் பிடித்து விட்டார்கள்!

“பாட்டி போலீசுக்குப் போக விரும்பினார்கள். ரொம்பவே.

“ஆனால் அப்பா பிடிவாதமாக மறுத்துவிட்டார். அவருக்கு மிகுந்த கோபம்! ஆத்திரம்! அனாதை ஆசிரத்தில் வளர்ந்து, படித்து வேலை பார்த்துக் கொண்டிருந்த பெண்ணை,  விரும்பி மணந்தவர் அவர். “நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும் . .” என்று ஒரு பழமொழி உண்டே அதுபோல, மனைவி நடந்துகொண்டு விட்டதாக அவருக்குப் பெரும் சீற்றம்! மனைவி  பெயரைக்கூட உச்சரிக்கக்கூடாது என்றுவிட்டார்.

“அத்தோடு, போலீசிடம் புகார் கொடுத்து அவர்கள் விசாரிக்க

விஷயம் ஊரெல்லாம் பரவி, அது வேறு கேவலம் என்று நினைத்தார்.

"அவரது ஆத்திரத்துக்குப் பாட்டியும் அடங்கித்தான் போக வேண்டியது ஆயிற்று.  ஆனால் பாட்டி எவ்வளவோ முயன்றும் மறுபடி மணக்க மறுத்துவிட்டார். . . "

"அந்த வகையில் உங்கள் தந்தையைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால், மனைவி விரும்பினால், இன்னும் எவ்வளவோ சொத்துக்கு அதிபதியாக மாறியிருக்கலாமே,. அவள் அறியவே நாலு பெரிய செட் நகைகள்! இன்னும் எத்தனையோ? இன்னும் கார், பங்களா என்று எவ்வளவோ வசதிகள். எல்லாம் ஒரு காலத்திர் அவர்களுக்குத்தானே வந்து தீரும்? அப்படியிருக்க, வெறும் சில . .. எவ்வளவு கனமானவை என்றாலும், இரண்டே செட் நகைகளோடு திருப்தியடைந்து, பெற்ற பிள்ளையைக் கூட விட்டுவிட்டுப் போய்விடுவாளா என்று யோசிக்க அவருக்குத் தோன்றவில்லையா?" என்று சுகந்தினி கேட்டாள்.

கண நேர அமைதிக்குப் பின், "யோசித்திருக்க வேண்டும்தானே?" என்று மீண்டும் வினவினாள்.

எரிச்சலுற்று "அப்போது அவர்கள் என்ன நினைத்தார்கள் என்று எனக்கு எப்படித் தெரியும்? அம்மா ஓடி . . . விலகிப் போனபோது எனக்கு மூன்று வயதுதானாம்." என்றான் அவன் .

"பரவாயில்லை. "ஓடி" என்ற வார்த்தையை விடுத்தீர்கள்." என்று மெச்சினாள் சுகந்தினி. "ஆனால் நான் சொன்னது போல, எவ்வளவோ சொத்து, நகைகள். மூன்று வயது சின்னக் குழந்தை! எல்லாம் விட்டுவிட்டு, வெறுமனே அணிந்திருந்த நகைகளோடு ஒருத்தி ஓடிப் போவாளா என்று யாருமே எண்ணிப் பார்க்கக் காணோமே! இந்த இழப்புகளுக்கு மேலான பெரியதாக ஒன்று கிடைத்தால்தானே, துணிந்து இந்தத் தப்பைச் செய்ய முடியும்? அ . .அல்லது, அந்த நகைகளுக்காக ஆன்ட்டியை யாரேனும் கடத்தினார்களோ என்னவோ? எல்லா வகையிலும் யோசிக்கவே இல்லாமல் குற்றவாளி என்று ஒதுக்கி விடுவதா? இத்தனைக்கும் காதலித்து மணந்தவர்! ரொம்பப் பொறுப்பான கணவர்தான் போல! இத்தனை ஆண்டுகளாக இதை எண்ணிப் பாராத நீங்களும் ஒன்றும் உயர்வாகத் தெரியக் காணோமே!" என்று உதட்டைப் பிதுக்கினாள்.

குணசீலனுக்கு உள்ளூர ஆத்திரம் பொங்கியது.

கடைசி நாட்களில் தந்தை சொன்னது, அன்று போல அவனுக்கு நினைவு வந்தது.                "ஒரு பெண்ணை நம்புகிற மடத்தனத்தை மட்டும் ஒரு போதும் செய்யாதே, சீலா." என்றாரே! இன்னும், "இல்லாத

ஒரு கழுதையைக் கௌரவமாக மணந்து கூட்டி வந்தால், இரண்டு செட் நகையை ஒரு சேரக் கண்டதும் அடித்துக்கொண்டு, சாக்கடையை நாடி ஓடிவிட்டது! அவள் சரியில்லை என்று உன் பாட்டி சொன்னதை ஏற்றுக் கொள்ளாமல் தாய் சொல்லை மீறி அவளை மணந்ததற்குக் கிடைத்த அடி1 அவளைத் தொட்ட பாவத்துக்கு, இந்த நகை இழப்பு சரியான தண்டனை!" என்றாரே!

இது மட்டுமின்றி இன்னும்கூடச் சிலது சொல்லியிருக்கிறார்.

இவள் சொல்லும் கடத்தலுக்கு இடமே இல்லாமல், அந்த அம்மாள் தன்னிச்சையாக மண மண்டபத்தை விட்டு வெளியே சென்றதற்கு சாட்சி இருந்தது. ஒரே ஒருவரல்ல. பலர்!

ஆனால், எல்லாம் சொல்லி, சுகந்தினியோடு சண்டையிட, அப்போது அவனுக்கு மனமில்லை. அவ்வப்போது மெல்லச் சொல்லியே தெளிவாக்கிக் கொள்ளலாம்.

"சுகந்தி, ப்ளீஸ். இப்போதைக்கு இந்தப் பேச்சை விட்டுவிடலாமே! "என்று சற்றுக் கெஞ்சலாகக் கேட்டான் .

தலை சரித்து அவனை நோக்கினாள் ,சுகந்தினி. "நமக்கு சரியென்று தோன்றுவதை எதற்காகவும் விட்டுவிடக் கூடாது என்று காந்திஜீ சொல்லியிருக்கிறார். தெரியுமா?" என்றாள்.

"விட வேண்டாம். ஆனால் சற்று தள்ளிப் போடலாமே! இந்தப் பேச்சை முழுதாகப் பேசி முடிக்கவே முடியாது போல இருக்கிறது. அதுதான் உன் ஆன்ட்டிக்காக இனி அடிக்கடி வருவோம் போல இருக்கிறதே! இன்னொரு நாள் வைத்துக் கொள்ளலாம்! "

" "இன்று போய் நாளை வா" என்கிறீர்களாக்கும்?" என்று கிண்டலாகக் கேட்ட போதும், அவளது குரலில், ஒப்புதல் தெரிந்தது. "ஆனால் நான் சொன்ன விதமாகவும் யோசிக்க வேண்டும். சரியா? புதிர்களுக்குக் "க்ளூ" கொடுப்பார்களே, அது போல ஒன்றே ஒன்று சொல்லி விடுகிறேன். மூன்று வயதில் வந்து சேர்ந்த கண்ணனிடம் ஆன்ட்டி உடனே ஒட்டிக்கொண்டு உயிராக இருப்பதைப் பார்க்கும்போது, அந்த வயது உங்களிடமும் மிகவும் பாசமாகவே இருந்திருப்பார்கள் என்பது என் அனுமானம். மேலே நீங்களே யோசித்துக் கொள்ளங்கள். அங்கே போவோமா?" என்று அவள் முன்னே செல்ல, அவன் மௌனமாகப் பின் தொடர்ந்தான்.

இருவருமாக ஹாலுக்குள் புகவும், "என்னம்மா, தம்பிக்கு எல்லாப் படங்களையும் காட்டி விட்டாயா? விவரம் எல்லாம்

சொன்னாயா?”என்று வாகதீசன் விசாரித்தார்.

“இம். சொன்னேன் தாத்தா. ஆனால், குணா சாரிடமும் நிறைய விவரங்கள் இருக்கின்றன, தாத்தா. அவரும் நிறையச் சொன்னார்.” என்றாள் அவள்.

“இருக்கும்தானே, சுகந்திம்மா. இரண்டு தலைமுறைகளின் வாழ்க்கை பற்றித் தெரிந்தாலே, சரித்திரம் எழுதலாம். அவர்கள் குடும்பம் நாலு தலைமுறையாகத் தொழில் நடத்துகிறவர்கள். எத்தனையோ இருக்குமே!” என்றார் வாகதீசன்.

மூவரும் கிளம்பிச் சென்றபின் சுகந்தினிக்கு ஒரே யோசனையாக இருந்தது.

குணசீலனுக்கு அன்றையப் பேச்சு பிடிக்கவில்லை என்பது, அவளுக்கு நன்றாகப் புரிந்தது. குடும்பத்தில் மற்ற பெரியவர்கள், அவனுடைய தந்தையும் பாட்டியுமாகச் சேர்ந்து, குற்றத்தை எல்லாம் மரகதத்தின் மேல் சுமத்தி, அவள் மோசம் என்று தீர்ப்புக் கூறி வழக்கை முடித்தே விட்டார்கள். மறுத்து வழக்காடத்தான் குற்றம் சுமத்தப்பட்டவள் அங்கே இல்லவே இல்லையே! எக்ஸ் பார்ட்டி தீர்ப்பு!

இதையே கேட்டு வளர்ந்தவன் குணா. தாயைப் பற்றித் தவறான கருத்துதான் அவன் மனதிலும் பதிந்திருக்கும். முதல்நாள் மரகதத்தின் படத்தைப் பார்த்ததும் சொன்ன வார்த்தைகள், அந்தக் கருத்தின் எதிரொலிதானே? இந்த நிலையில், தாயின் சிகிச்சைச் செலவை ஏற்று, தொடர்ந்து தன வீட்டுக்கும் அவளை அழைத்துச் சென்றதே பெரிய காரியமே.

கர்ப்பக் கடன் என்பார்கள். அது போல, அவள் வயிற்றில் பிறந்த கடனுக்காக சாப்பாடு துணிமணி கொடுத்து வீட்டில் தங்கவும் இடம் கொடுத்திருக்கிறான்.

தங்கள் சேவையிலேயே வயது முதிர்ந்தவர்களுக்கு ஓய்வூதியம் கொடுத்து வாழ வைப்பதில்லையா? அது போல இவளும் ஒருத்தியாக இருந்துவிட்டுப் போகட்டும் என்ற மனப்பான்மை!.

அத்தோடு கடமை தீர்ந்தது என்ற கருத்தும் இருந்திருக்கும்!

ஆனால் இதை ஒத்துக்கொள்ள சுகந்தினிக்கு மனமில்லை.

சூதுவாதற்றவள் மரகதம். அது மட்டுமல்ல. மனநிலை தெளிவாக இராத அந்த நிலையிலும், தவறான ஒரு பார்வை, தோற்றம் எதுவுமே அவளிடம் காண முடியாது.

அத்தோடு அவளது சரியில்லாமல் போன மனநிலை? அதன் காரணம் என்னவாக இருக்கக் கூடும் என்று பலமுறை சுகந்தினி யோசித்திருக்கிறாள்.

பிறப்பிலேயே இப்படியா? அல்லது ஏதோ காரணமாக ஏற்பட்டதா? பயங்கர அதிர்ச்சியா? தலையில் அடி பட்டிருக்குமா?

முதலில் அவள் தங்கியிருந்த “இல்லத்”திலேயே இதே போலவேதான் இருந்தாள் என்று அறிந்த பிறகு, மரகதம் நன்றாகக் கூடும் என்ற நம்பிக்கை கிட்டத்தட்ட சுகந்தினிக்குப் போய்விட்டது எனலாம்.

ஆனால், கண்ணனைப் பார்த்த பிறகு மரகதத்தின் கண்களில் இருந்த வெறுமை மாறி ஓரளவு உயிரோட்டம் தெரியவும், மீண்டும் அவளது நம்பிக்கை தலை தூக்கியது. ஆனால் மரகதத்திடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்ததில் ஒரு பயனும் இருக்கவில்லை.

ஹிப்னாட்டிஸம் போல ஏதாவது செய்து பார்க்கவும் சுகந்தினிக்குத் தயக்கமாக இருந்தது.

இப்போதைக்குக் கண்ணனைக் கவனித்துக்கொண்டு மரகதம் சந்தோஷமாக இருக்கிறாள். கிணறு வெட்டப் பூதம் போல, அந்த மாதிரி சிகிச்சையில் ஏதாவது சோகம் வெளிப்பட்டு, அவளைத் துன்பத்தில் ஆழ்த்தி விடக் கூடாதே!

ஒருவேளை அவளுடைய சொந்த மகன் இறந்திருப்பானோ என்ற பயம். அந்த அதிர்ச்சியே, அவளை இப்படி ஆக்கியிருக்கலாம் அல்லவா?

வாகதீசனும், “இருக்கிறபடி, இவள் சந்தோஷமாக இருக்கட்டுமேம்மா.” என்றார்.

சரிதான் என்று இருந்த நிலையில்தான் மரகதத்துக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டு, அவளது குடும்பம் பற்றிய விவரம் வெளிப்பட நேர்ந்தது.

உரிய இடத்தில் மதிப்பும் மரியாதையுமாக அவளை இருத்த வேண்டும் என்ற ஆவல் சுகந்தினிக்குள் மறுபடியும் எழுந்தது.

முக்கியமாக, அந்த அப்பாவித் தாய்க்கு, அவள் சுமந்து பெற்ற மகனின் அன்பும் மரியாதையும் கிட்ட வேண்டாமா?

ஒரு வாரம் பொறுத்து, அவன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் குணாவிடம் மீண்டும் இது பற்றிப் பேச வேண்டும் என்று அவள் நினைத்திருக்க, நாலே நாட்களில் குணசீலனே செல்லில்

அவளை அழைத்தான்.

பரவாயில்லையே என்று உள்ளூர மகிழ்ந்தபடி, “ஆயுசு நூறு!” என்றாள் அவன்.

ஒரு கணம் நிதானித்து, “என்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாய் என்பதில் சந்தோஷமே என்றாலும்,  தயவு செய்து இப்படி சாபமிடவேண்டாம்.” என்றான் அவன்.

அவனது குரலில் இருந்த கசப்பு மனதை உறுத்த, “என்ன ஆயிற்று குணா?” என்று பரிவுடன் விசாரித்தாள்

“அதை செல்ஃபோனில் சொல்ல முடியாது. காஃபி ஷாப்பும் சரியல்ல. நாம் அறியாத வேண்டாதவர் கேட்கக் கூடும். நீ இருக்குமிடம் சொல்லு. காரில் வந்து ஏற்றிக் கொள்கிறேன். பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள் என்று ஏதாவது சொல்ல வேண்டாம். பிறர் காதில் விழாது என்ற நிச்சயத்தோடு பேசக் கூடிய இடம் இது ஒன்றே! “ என்றான் அவன். பழைய குரலிலேயே.

வாதம் ஏதும் செய்யாமல், இருக்கும் இடத்தைச் சொல்லி, அவன் வந்ததும் காரில் ஏறிக் கொண்டாள் சுகந்தினி. ஏறியதுமே, “சொல்லுங்கள் என்ன விஷயம்?” என்று விசாரித்தாள்.

சற்று சிரமப்பட்டுப் பேசினான் குணசீலன். “அன்று நீ கூறியபடி, நிறைய யோசித்தேன், சுகந்தினி. அது தொடர்பாக நிறைய வேலைகளும் செய்தேன். பழைய பணியாளர்களிடம் விசாரித்தேன். கடைசியாக அப்பாவின் அறையில் போய்த் தேடினேன்.

“பொதுவாக அப்பா டைரி எழுதுவது இல்லை. ஆனால் மனதை மிகவும் பாதிக்கும்படி ஏதேனும் நிகழ்ந்தால், அதை எழுத்தில் வடித்து மனப் பாரத்தைக் கொஞ்சம் இறக்கிக் கொள்வது வழக்கம் என்று ஒரு தரம் என்னிடம் கூறியிருக்கிறார். பாட்டி இறந்தபோது அவர் அப்படி எழுதி நான் பார்த்தும் இருக்கிறேன்.  . . . “

“ஓ! பிரமாதம்! மனைவி வித்தியாசமான முறையில் பிரிந்ததை விட, மனதைப் பாதிக்க என்ன இருக்க முடியும்? எழுதியிருந்தாரா? என்ன எழுதி . . “ என்று ஆர்வத்துடன் கேட்டவளின் குரல் இடையிலேயே இறங்கிப் போயிற்று. மெல்லவே தொடர்ந்து, “உங்கள் குரலையும் முகத்தையும் பார்த்தால், நல்லவிதமாக இல்லை போலத் தோன்றுகிறதே! அப்படி என்ன எழுதியிருந்தார்?” என்று கேட்டு முடித்தாள் சுகந்தினி.

தன் சட்டைப் பையில் இருந்து மடித்த ஒரு காகிதத்தை எடுத்து

அவளிடம் கொடுத்தான் குணசீலன்.

“படித்துப் பார். நீயே அதிர்ந்து போவாய்! முதலில் ஒன்றைச் சொல்லி விடுகிறேன். உன் ஆன்ட்டியைத் திருமண மண்டபத்தில் இருந்து யாரும் கடத்தவில்லை. சுய விருப்பமாக அவர்கள் அங்கிருந்து வெளியே சென்றதைப் பார்த்த சாட்சிகள் பலர் இருந்திருக்கிறார்கள். அப்புறம், ஏதோ பெரியதாக ஒரு காரணம் என்றாயே! அந்தப் பெரிய காரணம் என்ன என்று இதில் இருக்கிறது. படித்துப் பார்! இந்த விவரம் அங்கே இருக்கவே கூடாது என்று அப்பா எழுதியதைக் கிழித்தே எடுத்து வந்துவிட்டேன். “ என்றுரைத்து, காரை ஓரமாக நிறுத்திக் கையைக் கட்டிக்கொண்டு வெளியே வெறித்தான்

ஏதோ பெரிய வெடி குண்டாகத்தான் இருக்க வேண்டும்! அணுகுண்டு? நைட்ரஜன் பாம்?

யோசனையோடு காகிதத்தைப் பிரித்துப் படித்தாள் சுகந்தினி.

# அத்தியாயம் -7

குணசீலன் கொடுத்த காகிதத்தை ஒரு தரம் சற்று வேகமாகப் படித்த சுகந்தினி, மீண்டும் ஒரு முறை முதலில் இருந்து அதைப் படித்து முடித்தாள்.

படித்த பின், நிதானமாகக் காகிதத்தைப் பழைய மாதிரியே மீண்டும் மடித்து அவன் அருகே வைத்தாள்.

குணசீலன் சிலைக்கு உயிர் வந்தது. “படித்தாயல்லவா? நீ சொன்ன “பெற்ற பிள்ளையை விடப் பெரிய காரணம்”, அவர்களது குறிக்கோள் என்ன என்று தெரிந்துவிட்டதா?” என்று வெறுத்த குரலில் கேட்டான்.

அவனது பக்கவாட்டு முகத்தை ஆழ்ந்து பார்த்துவிட்டு, ““இல்லை!” என்றாள் அவள் சாதாரணமாக.

சட்டெனத் திரும்பி, “இல்லையா? அப்பா தெளிவாக எழுதியிருக்கிறாரே! நீ சரியாகப் படித்தாயா, இல்லையா? “ என்று ஆத்திரமாகக் கேட்டான் அவன்.

அவனுக்கு நேர் விரோதமாக அமைதியான குரலில், “படித்தேனே. இரண்டு தரம் ஒரு வரி விடாமல் படித்தேனே.” என்றாள் அவள் ரொம்ப சாதாரணமாக.

“படித்தும் . .” என்று கோபமாக ஏதோ சொல்லத் தொடங்கியவனைப் “பொறுங்கள்.” என்று கைச் சைகையுடன் கூறி நிறுத்தினாள்.

“பொறுங்கள் குணா. அதில் உங்கள் அப்பா என்ன எழுதியிருக்கிறார்? ஆன்ட்டி  யாரோ ஓர் ஆணை அவ்வப்போது சந்தித்துப் பேசியதாக யாரோ சொன்னதாக, யாரோ ஆயா . . . “ என்றவளைக் குறுக்கிட்டு, “யாரோ அல்ல. என்னைப் பார்த்துக்கொள்ள நியமிக்கப் பட்டவள்.” என்று கடித்த பற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினான் குணசீலன்.

“இருக்கட்டுமே. கடிதப்படி, உங்கள் அப்பா எதையும் நேரிலே பார்த்தது இல்லை, அந்த ஆயாவும் பார்க்கவில்லை. அவளுக்குமே யாரோ ஒரு பெண் பார்த்ததாகச் சொன்னதுதான். அந்த “யாரோ”விடம் போய்க் கேட்டால், அவளிடமும் வேறு யாரோதான் பார்த்துச் சொல்லியிருப்பார்கள். இதெல்லாம் கீழே விழுந்துவிட்டவர்கள் மேல் கல்லெறிவது, குணா. திருப்பி அடிக்க முடியாத நிலை என்கிற தைரியத்தில் சொல்வது. உறுதியாக நம்பும்படி ஒரு வார்த்தை கூட,

இதில் இல்லை.” என்று தெளிவாகவும் நிதானமாகவும் கூறினாள் சுகந்தினி.

“ஆனால் . . . அஅவர்களைப் பற்றி . . அவர்களைத் தவறான ஆளோடு பார்த்தவளிடம் “அப்படி இருக்கவே இருக்காது” என்று ஆயா சண்டை போட்டதாக . . ஆயா சொன்னதாக அப்பா எழுதியிருக்கிறாரே?”

“அந்தச் சண்டையைக் கூடத்தான் உங்கள் தந்தை நேரிலே பார்க்கவில்லை. அந்த ஆயா சொன்னதாகத்தானே எழுதியிருக்கிறார்? யோசித்துப் பார்த்தால் . . . குணா, ஒருவர் பெயரைக் கெடுக்க விரும்பும் கெட்டிக்காரர்கள் நேரடியாக இவள் இப்படி என்று யாரிடமும் சொல்ல மாட்டார்களாம். வேறு யாரோ அவர்களிடம் அப்படிச் சொன்னதாகவும், அப்படி இராது என்று மறுத்துப் பேசிச் சண்டை போட்டதாகவும்தான் சொல்லுவார்களாம். பலபேர் பேசுகிறார்களே, நெருப்பில்லாமல் புகையுமா என்ற கருத்து தானாக உருவாகி உறுதிப்பட்டு விடும் என்று சைக்காலஜீ வகுப்பில் படித்திருக்கிறேன். ஏதோ ஒரு வகையில் உண்மை வெளிப் பட்டாலுமே, அப்போதே எதிர்த்து சண்டை போட்டேனே என்று சமாளித்து விடலாம்! யோசியுங்கள், அவள் பொய் சொல்லியிருந்தால்? அதென்ன “சொல்லியிருந்தால்”? அவள் பொய்தான் சொல்லியிருக்க வேண்டும். அது எனக்கு நிச்சயமாகத் தெரியும். “ என்று அடித்துப் பேசினாள் சுகந்தினி.

“அதெப்படி நிச்சயம்? அப்போது நீ பிறக்கவே இல்லை! நடந்தது என்ன என்று உனக்கும் ஊகம்தானே?”

“வெறும் ஊகம் மட்டுமல்ல. பதினெட்டு ஆண்டுகள்! ஒருநாள் இரண்டு நாட்கள் அல்ல! இந்தப் பதினெட்டு ஆண்டுகளில், விவரம் புரிந்தே எட்டு வருஷங்கள்., ஆன்ட்டியை நான் பார்த்து வந்திருக்கிறேன். ஒரு தரம்கூடத் தவறான பார்வையை அவர்களிடம் நான் கண்டதில்லை. ஆண்கள் பக்கம் அவர்கள் திரும்பிப் பார்த்ததே கிடையாது. அது மட்டுமல்ல. உடை நெகிழ்ந்தோ, விலகியோ கூட அவர்கள் இருந்ததில்லை. உண்மையிலேயே ஒழுக்கத்தில் மிகவும் பிடிப்பு உள்ளவர்களால் மட்டுமே அப்படி இருக்க முடியும். இது உறுதி!” என்றாள் அழுத்தமான குரலில் அவள்.

“எனவே, உங்கள் தாயாரைப் பற்றி எண்ணி நீங்கள் ஒரு போதும் தலை குனிய நேராது! எப்போதும் நேர்ந்தும் இராது! ப்ராமிஸ்!” என்றாள் தொடர்ந்து.

ஆறுதலான நீண்ட மூச்சு ஒன்றை குணசீலன் வெளிவிட்டான்.

பிறகு, “நிச்சயமாகத்தான் சொல்கிறாயா?” என்று கேட்டான்.

“சத்தியமாக!”

“ம்ம்ம். . .” என்று அவளது கண்களை நேராகப் பார்த்தான் குணசீலன். “ரைட்! நீ உண்மையிலேயே உணர்ந்து நம்பிச் சொல்வதானால், தலைமேல் அடித்து சத்தியம் செய்., நானும் நம்புகிறேன்!” என்றான் அவன்.

சற்றும் தயங்காமல் “இதோ!” என்று தன் தலை மேல் கையை வைக்கப் போனவளின் கையைப் பற்றித் தடுத்து, “உன் தலை மேல் அல்ல.” என்றான் குணசீலன்.

புரியாமல் அவனை நோக்கினாள் அவள். “பிபின்னே?”

“என் தலைமேல்” என்றான் அவன் அமர்ந்த குரலில்.

சுகந்தினி குழம்பினாள். ஒன்று தன் தலையில் அடித்து சத்தியம் செய்வார்கள் அல்லது, அவர்களுக்கு மிகவும் பிரியமானவர்கள் தலையில் அடிக்கச் சொல்வார்கள். இவன் . . . இவன் என்ன சொல்ல எண்ணுகிறான்? கையை வேறு பிடித்துக்கொண்டு!

திகைப்புடன் நோக்கி, “என்ன உளறல் இது, குணா?” என்று வினவினாள் அவள்.

“உளறவில்லை.” என்றான் அவன் பழைய குரலிலேயே.”என் மனதில் உண்மையாக உணர்வதையே நான் சொன்னேன். நீயும் அப்படி உணர்ந்தால், நான் கேட்டது போல சத்தியம் செய்!”

மூச்செடுக்க முடியாமல் திக்கு முக்காடுவதைப் போன்ற உணர்வில், சுகந்தினி திணறினாள். “ப்ளீஸ் குணா, நீங்கள் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? புபுரிந்துதான் பேசுகிறீர்களா?” என்றாள் தவிப்புடன்.

“எல்லாம் சரியாகத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்களை நீ உண்மையாகவே நம்பினால், தயங்குவானேன்? இப்போது உன்னால் என் தலை மீது கை வைத்து சத்தியம் செய்ய முடியுமா, முடியாதா? என் தலைக்கு அந்த அளவு முக்கியம்  இருக்கிறதுதானே?”

பிரமித்த பார்வை அவனது கண்களோடு கட்டுண்டு கிடக்க, அவனது பிடியில் இருந்த கை தானாக உயர்ந்து குணசீலனின் தலைமேல் படிய “சத்தியம்!” என்றாள் அவள்.

“இவ்வளவு உறுதியாக நீ கூறுவதால், என் தாயாரை, இப்போது

நானும் நம்புகிறேன்.” என்றான் குணசீலன்.

தாயாரை! அவர்கள் அல்லது உன் ஆன்ட்டி என்றே குறிப்பிட்டவன், தாயார் என்கிறான்!

அதிசயித்த பார்வையில் அவன் முறுவலித்தான்.

“நம்பிய பிறகு தாயார்தானே?” என்று அவன் கேட்ட விதத்தில் அவள் முகமும் மலர்ந்தது.

“நிச்சயமாய்!” என்றாள் புன்னகையோடு.

“ரைட். இனி . .” என்று பேசத் தொடங்கிய குணசீலன், சுகந்தினியும் ஏதோ சொல்லத் தொடங்கியதை நிறுத்தி வாயை மூடிக் கொள்ளவும், தன் பேச்சை இடையிலேயே விட்டு, சொல்லு என்பது போலக் கையைக் காட்டினான்.

“வந்து . . உங்கள் பணியாட்களில் பழைய ஆட்கள் இருந்தால் அவர்களிடம் ஆன்ட்டி பற்றி விசாரிக்கலாமே. ஆன்ட்டியின் மனநிலை கொஞ்சம் சரியில்லாமல் இருப்பதால், கேட்பதை யாரும் தவறாகவும் எண்ண மாட்டார்கள்.” என்றாள் அவள்.

“ஏற்கனவே விசாரித்துவிட்டேன். “ என்றான் குணா. “பழைய வேலையாட்களில் இருப்பவர்கள் யாருமே, அம்மாவைப் பற்றிக் குறையாக எதுவும் பேசவில்லை. அவர்க . . அதாவ்து அம்மாவுக்குச் சற்று பயந்த சுபாவம் என்றே கூறுகிறார்கள். “ என்றான்

“நீங்களே பாருங்கள், குணா. அப்படிப் பயப்படுகிற ஆன்ட்டி, எப்படித் திருடியிருக்க முடியும்? திட்டம் போட்டுத் திருடி, திருடியதைப் பத்திரப் படுத்தி . . . முடிகிற காரியமா?” என்று சுகந்தினி கேட்க, அதை ஒப்புவது போலத் தலையாட்டினான் குணசீலன்.

“இதைக் கூட, உங்கள் தந்தை யோசிக்க வில்லையே!”

“அப்பாவுக்கு வக்காலத்து வாங்குவதாக எண்ண வேண்டாம். பாட்டி ஒரு வலுவான பெண்மணி. மனவலிமை மிக அதிகம். அவர்களுக்குப் பிடிக்காத பெண்ணை அப்பா பிடிவாதமாகத் திருமணம் செய்ததே அதிசயம்தான். பிறகும், அடிக்கடி அம்மாவைப் பற்றிப் பாட்டி ஏதாவது குறை சொல்லிக்கொண்டே இருப்பார்களாம். பெரிய இடத்து மருமகளாக வாழத் தெரியவில்லை. கீழ் மட்ட புத்தி . . இப்படி! என்னிடமே சிலது சொல்லியிருக்கிறார்கள். அப்பா, அம்மாவைக் கடிந்த மாதிரித் தெரியவில்லை. கண்டுகொள்ளாத மாதிரி நடந்திருப்பார் என்று நினைக்கிறேன். ஆனால், காணாமல் போனதும், பெற்றவர் சொன்ன குறைகள் எல்லாம் உண்மையே என்று முடிவு செய்திருக்கலாம்.”

என்றான் அவன் யோசனையோடு.

மகன் முன்னிலையில் பேரனைப் பெற்றவளைப் பற்றி தங்கம்மா பேசியது கிடையாது . ஆனால் பாட்டியும் பேரனும் தனித்திருக்கும்போது, மருமகளைப் பற்றிய குறைகளைச் சொல்லி மனதை ஆற்றிக் கொள்வாள்.

அவளை மிகவும் பாதித்தது, மருமகளின் ஏழ்மை நிலைதான்.

முடிந்த அளவு மரகதத்தை மட்டம் தட்டிப் பேசுவாள். திட்டுவாள்.

ஆனால், நல்ல துணிமணி வாங்கிக் கொடுத்ததாகவும், நிறைய நகைகளை அணிவித்து விழாக்களுக்குக் கூட்டிப் போனதாகவும் இப்போது ஐம்பதுகளில் இருக்கும் பழைய பணியாட்கள் தெரிவித்தவை.

குணசீலன் தன் தாயாரைக் கூட்டி வந்து வீட்டில் இருத்திவிட்டு, அவளது மனநிலை பற்றிக் கூறி விசாரித்தபோது, கொஞ்சம் கொஞ்சமாகத் துணிந்து சொன்ன தகவல்கள்.

“அந்த நகைங்களைப் போட்டுக்கிட்டு பட்டுக் கட்டிக்கிட்டு சின்னம்மா எம்புட்டு அளகா இருப்பாங்க தெரியுமா? அப்போ அய்யா எடுத்த படம் கூட என்கிட்டே காட்டினாக் என்று எழுபது வயது தாண்டிய சமையல்காரம்மா சொன்னாள்.

தாயின் பைக்குள் இருந்த புகைப்படத்தைக் காட்டியதும் அதுதான் என்று அடையாளமும் காட்டினாள்.

ஒரு தரம் புருஷனும் பெண்டாட்டியும் மட்டும் ஒரு கல்யாணத்துக்குப் போய்விட்டு வந்தபோது எடுத்ததாம்.

“அய்யா பிரியமாத்தான் இருந்தாக. ஆனாப் பெரியம்மாவை எதுத்துப் பேச மாட்டாக. சின்னம்மாவும் அப்படித்தான். வேறே பிறந்த வீடுன்னும் ஒண்ணும் கிடையாதில்லையா?”

எந்த விசேஷத்துக்குப் போனாலும், விழா முடிந்து வந்ததும் வராததுமாகப் பாட்டி மருமகளிடமிருந்து நகைகளைக் கழற்றித் தரச்சொல்லி வாங்கி வைத்தக் கொள்வாளாம்.

“எதையும் நீ கொண்டு வரவில்லை. எல்லாம், என் பெற்றோர் எனக்குப் போட்டதும் இந்தக் குடும்பத்து பெரிய நகைகளும் , இன்னும் நான் வாங்கிச் சேர்த்தது  பத்திரமாக என்னிடம் திருப்பித் தந்து விட வேண்டும்.” என்றும் சொல்வாளாம்.

இதனாலேயே, என்றைக்கும் நம்முடையதாகக் கைக்கு வராது என்று நினைத்தே மருமகள் திருடியிருக்க வேண்டும் என்று குணசீலன்

முதலில் நினைத்தான்.

ஏற்கனவே, அவனிடமே பாட்டி நேரடியாகப் புலம்பியிருந்தது வேறு!

“இந்த நகைகளை எப்படி அணிவது, எப்படி பத்திரமாக வைப்பது என்று கூட, உன் அம்மாளுக்குத் தெரியாதுப்பா. எல்லாம் நானே திருப்பி வாங்கி, துடைத்து பத்திரப் படுத்தி வைத்துத்தான் அடுத்த முறை அணிவித்து விட வேண்டியிருந்தது. உன் அப்பனுக்கென்ன? கற்றுக் கொடுங்களேன்மா என்று சாதாரணமாகச் சொல்லி விடுவான். இதெல்லாம் சொன்னால் புரிகிற பெண்ணையா கட்டி வந்திருக்கிறாய் என்று ஒரு நாள் அவனை நன்றாகத் திட்டிவிட்டேனடா, தங்கம். பின்னே என்னப்பா, அன்றைக்கு ஒரு நாள், டைமண்டை த் துடைத்து வை என்றுவிட்டுப் போனால், திரும்பி வந்து பார்க்கும்போது சீட்டுக் கட்டில் டைமண்ட் சீட்டுகளை வரிசையாகத் துடைத்துக் கொண்டிருக்கிறாள். ஆமாம், சிரிடா. உன் அப்பனைப் போலவே நீயும் சிரி! ஆனால், மண்டை காய்ந்து போனது, எனக்கல்லவா? .அதனால், அவளிடம் விளக்குவதற்கு, நானே துடைத்து வைத்து விடுவேன். அதிகப்படி வேலைதான் என்றாலும், தொண்டைத் தண்ணீரேனும் வற்றாது.” என்று பலமுறை பாட்டி அவனிடம் சொன்னதுண்டு.

இதையே மகனிடமும் அந்தச் சமயத்தில் சொல்லியிருப்பாள் அல்லவா?

“அந்த மட்டும் எல்லாம் திருப்பித் தந்தாளே, அதே பெரிது என்று பாராட்டினால், “என்னம்மா சொல்கிறீர்கள்” என்று என் பிள்ளை என்மேலேயே பாய்கிறான்!

நான் சொன்னது புரியாமல் தப்பாக நினைத்துவிட்டான் போல! பிறகு விளக்கிச் சொன்னேன். மதிப்புத் தெரியாமல் அவள் அறிந்து பழகியது மாதிரியான போலி நகை என்று எங்காவது போட்டு விட்டாலும் ஆபத்து. இந்த விலை என்று சொல்லவும் பயமாக இருக்கிறது. மதிப்புத் தெரிந்து, நாமே வைத்துக் கொள்ளலாம் என்று அவள் மனதில் ஆசை வந்து விடுமோ என்றிருக்கிறது. என்று சொன்னால் அப்போதும் பாய்ந்தான்.

“மருமகளைப் பற்றிப் பேசுகிற பேச்சா என்று கத்தினான். நானும்விடவில்லை. தீ என்று சொன்னால் நாக்கு சுட்டுவிடாது தம்பி. இல்லாத வீட்டுப் பெண். மனம் எப்படியெப்படி மாறும் என்று சொல்ல முடியாது. என்று ஒரு போடு போட்டேன். ஆனால், பாவி நான் எந்த நேரத்தில் சொன்னேனோ? அதே போல அடித்துக் கொண்டு

போய்விட்டாளே! எத்தனை லட்சம் பெறுமானம் உள்ள நகை! பாவி! பாதகத்தி! “ என்று புலம்பலோடு முடிப்பாள் பாட்டி.

இதையெல்லாம் கேட்டு வளர்ந்தது, அப்படியேதான் குணாவும் நினைத்திருந்தான்.

ஆனால், பெற்றவளின் மனப் போக்கில் இருந்த முரண்பாடுகள் இப்போது பூதமாய் அவனை மருட்டின.

ஒவ்வொன்றாகக் குணசீலன் சொல்லச் சொல்ல, சுகந்தினியின் மனம் மரகதத்திற்காக ரொம்பவே உருகிப் போயிற்று.

“பாவம்! மனம் விட்டு ஒரு வார்த்தை சொல்லக் கூட யாருமற்று மனதிற்குள்ளேயே எப்படிக் குமைந்திருப்பார்கள்! அந்த மாதிரித் தவிக்க விடுவதற்கு, உங்கள் அப்பா ஆன்ட்டியின் வாழ்வில் குறுக்கிடாமலேயே இருந்திருக்கலாமே என்றிருக்கிறது! ஆனால், அப்புறம் நீங்களும் பிறந்திருக்க மாட்டீர்களே என்று அதற்காகத்தான், சரி போகட்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.” என்றாள் அவள்.

கனத்த சூழ்நிலை சற்று லேசாக, “ஆமாமாம். எவ்வளவு பெரிய உலக மகா நிகழ்வு! உலகத்துக்கு . .முக்கியமாக உனக்கு எவ்வளவு பெரிய நஷ்டமாகிப் போயிருக்கும்!” என்று அவளுக்காக அனுதாபப்பட்டான் குணா.

“ஐயோப்பா, எனக்கென்ன நஷ்டமாம்? உங்களைப் பற்றித் தெரியவே இல்லாமல் ஜாலியாக இருந்திருப்பேன்!” என்று பெருமை பேசினாள் அவள்.

“நிஜம்?” என்று அவளது முகத்தைத் தன் புறம் திருப்பி அவன் கேட்க, கன்னங்கள் ரோஜா நிறம் கொள்ள, “ஊகூம்!” என்று ஒப்பினாள் சுகந்தினி.

அவளது கன்னத்தை லேசாக வருடிவிட்டுக் காரை எடுத்தான் அவன். “ஒரு பெண்ணை நம்புகிற மடத்தனத்தைச் செய்யாதே என்று என் தந்தை ஒரு தரம் சொன்னார். ஆனால், எவ்வளவு பெரிய பாக்கியத்தை அவர் இழந்துவிட்டார் என்று இப்போது எனக்குப் புரிகிறது. ஏனெனில், உன்னை நம்பி என் உயிரையே நான் ஒப்படைப்பேன்.” என்றான்.

உதட்டைப் பிதுக்கி, “மகத்தான விஷயம்தான். ஆனால், உங்கள் உயிரை வைத்து நான் என்ன செய்யட்டும்? சொல்லுங்கள்!” என்று கேலியாகக் கேட்டாள் அவள்.

“பின்னே, வேறே என்ன வேண்டும், சொல்லு. செய்கிறேன்.”

என்றான் அவன்

முகம் மாற, “எனக்கு எதுவும் வேண்டாம், குணா. ஆனால் மரகதம் ஆன்ட்டி . . “ என்று தொடங்கியவளிடம், “அவர்கள் மேல் தப்பு இராது என்றுதான் நானும் ஒத்துக் கொள்கிறேனே!”

“அது போதாது, சீலன் சார்! இருபத்தைந்து ஆண்டுகள்! கணவர், குழந்தை என்று அவர்கள் சந்தோஷமாக இருந்திருக்க வேண்டிய பொற்காலம். உயிரான பிள்ளையைப் பிரிந்து, பசியும் பட்டினியுமாக, தன்னிலை அறியாத . . . கிட்டத்தட்ட அரைப் பைத்தியமாக அலைந்திருக்கிறார்களே! இது அநியாயமில்லை? “

“ஆனால், கடவுள் அப்படி அம்மாவை அடியோடு கைவிட்டு விடவில்லை சுகந்தினி. உங்கள் வீட்டுக்கு வந்தபின் பதினெட்டு ஆண்டுகள் நல்ல வாழ்வுதான் வாழ்ந்திருக்கிறார்கள்.” என்று அவளை மறுத்துக் கூறினான் குணசீலன்.

“நல்ல வாழ்வா? சாப்பாடு, துணிக்குத் தவிக்க நேரவில்லை., ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அவர்களது பாதிக்கப்பட்ட மனநிலை? அத்தோடு, மூன்று வயதுக் கண்ணனைப் பார்த்ததும், “கண்ணப்பு, கண்ணப்பு” என்று அவர்கள் தவித்ததை நீங்கள் பார்த்ததில்லை, குணா! உள்ளே மகனுக்காக எவ்வளவு பரிதவிப்பு இருந்திருந்தால், அது அப்படி வெளிப்பட்டிருக்கும்? இது எப்படி நேர்ந்தது? யார் செய்த கொடுமை? என்னதான் நடந்தது என்று நாம் கண்டறிய வேண்டாமா? அது தெரிந்தால் ஒரு வேளை ஆன்ட்டி உங்களைக் கூட உணர்ந்து கொள்ளலாம் . . .” என்றவளின் உதடுகளின் மேல் ஒரு விரலை வைத்து, அவளது பேச்சை நிறுத்தினான் அவன்.

சிறு மௌனத்தின் பின், “நீ வீட்டுக்கு எப்போது போக வேண்டும்? தாத்தா பாட்டி உன்னைத் தேடுவார்களா? இன்னும் வரவில்லையே என்று கவலைப்படுவார்களா? “ என்று கேட்டான் அவன்.

எப்படி மாறியிருக்கிறான்! தன் தேவை தவிர மற்றதை நினைத்துக் கூடப் பாராதவன்!

சிறு முறுவலுடன் தலையசைத்து, “தேட மாட்டார்கள். நீங்கள் என்னை வரச் சொன்னபோது உங்கள் குரல் ஒரு மாதிரி இருக்கவே, நான் வீடு வரத் தாமதம் ஆகும் என்று பாட்டியிடம் சொல்லி விட்டுத்தான் வந்தேன்.” என்றாள் அவள்.

“குரலிலேயே கண்டுபிடித்தாயா?” என்றவனின் முகத்தில் ஆறுதல் தெரிந்தது.

மறுபடியும் காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு அவள் புறம் திரும்பினான்.

பழைய பேச்சைத் தொடர்ந்து, "நீ சொன்னதோடு இன்னொரு காரணமும் இருக்கிறது, சுகந்தினி. அம்மா காணாமல் போனபோது, யார் யார் எப்படியெப்படிப் பேசினார்களோ? என்னிடமே ஏதேதோ சொன்ன பாட்டி இன்னும் மற்றவர்களிடம் இன்னும் என்ன கதை சொன்னார்களோ? இப்போது அம்மா திரும்பி வந்ததும் பல பேருக்கு அந்தக் கதைகள் நினைவு வரக் கூடும். நடந்ததைக் கண்டுபிடித்து விட்டால், நம்மால் பதில் சொல்ல முடியும்!" என்றான் குணசீலன்.

சிறு யோசனையின் பின், "எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால், அந்தப் பிள்ளை வார்க்கிற ஆயா மட்டும்தான் சுதி மாறிப் பேசியிருப்பதாகத் தோன்றுகிறது." என்றாள் சுகந்தினி.

ஆனால் குணசீலன் அதை ஒத்துக் கொள்ளவில்லை.

"அவளாக இருக்க வாய்ப்பில்லை, சுகந்தினி. அம்மாவைத் தேடி அழுது கரைந்த என்னை, அவள்தான் நன்கு கவனித்துக் காப்பாற்றியதாகச் சொல்லுகிறார்கள். " என்றான் அவன்.

"அவள் இப்போதும் இங்கே இருக்கிறாளா? அவளிடம் பேசினால் ஒருவேளை . . "

"பேசுவதற்கு வழியில்லை. வேலையை விட்டுப் போய்விட்டாள்."

கண்கள் பளிச்சிட "பார்த்தீ . . . " என்று சுகந்தினி தொடங்கும்போதே குறுக்கிட்டு, "ஊகூம். அவளைத் தப்பாக நினைக்கவும் வழியில்லை, சுகந்தினி. அம்மா காணாமல் போன உடனேயே அவள் போய்விடவில்லை. அப்போது எல்கேஜீ படித்துக் கொண்டிருந்த என்னை, யூகேஜீயில் சேர்க்கும் வரை, அவள்தான் என்னைப் பார்த்துப் பார்த்துப் பராமரித்தாளாம். பள்ளி வரை கூடவே வந்து, அங்கேயே காத்திருந்து கூட்டி வருவாளாம். அதன் பிறகு, "பிள்ளை . .அதாவது நான், பள்ளியில் சினேகிதப் பிள்ளைகளோடு விளையாடப் பழகி விட்டது , இனிமேலே அம்மாளைத் தேடாது., நான் போறேன்" என்று சொல்லிவிட்டுத்தான் சென்றாளாம். அம்மா விஷயத்தில் சூழ்ச்சி செய்திருந்தால், எனக்காக ஓர் ஆண்டு வீட்டிலேயே இருந்திருப்பாளா? அந்த நகைகளோடு உடனே பறந்திருக்க மாட்டாளா?" என்று குணசீலன் கேட்டான்.

பதில் சொல்ல மாட்டாமல் சற்றுத் தயங்கிவிட்டு, "ஒருவேளை இந்த மாதிரி ஒரு நம்பிக்கை வரும் என்பதற்காகவே, அங்கேயே

இருந்தாளோ என்னவோ? ஊகூம். மறுப்பாகத் தலையசைக்காதீர்கள். வருஷக்கணக்கில் கூடவே இருந்து நம்பிக்கையைப் பெற்றுவிட்டுக் கழுத்தை அறுத்துக் கொள்ளையடித்ததாகப் பத்திரிகைகளில் படித்ததில்லை?" என்று கேட்டாள் அவள்.

சின்னப்பிள்ளை மாதிரிப் பிடிவாதம் பிடிக்கிறாளே என்பது போல முகம் இளகிப் புன்னகை செய்தான் அவன்.

இல்லை. இதில் ஏதோ இருக்கிறது., கட்டாயம் இருக்கிறது. ஆனால், முதலில் இவனை அல்லவா நம்ப வைக்க வேண்டியிருக்கிறது . . . என்று வேகமாகச் சிந்தித்தவளுக்குச் சட்டென ஒன்று நினைவு வந்தது.

அவனை நேராகப் பார்த்து, "குணா, அவசரப்பட்டு என் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லத் தொடங்கி விடாதீர்கள். அவள் . . அந்த ஆயாவின் பெயர் . . ஊகூம்., நீங்கள் பதிலைச் சொல்லவேண்டாம் என்றேனே! அவள் பெயர் அன்னத்தாயா? அதுதானே அவளது பெயர்? இப்போது பதில் சொல்லுங்கள்!" என்று பரபரப்புடன் வினவினாள்.

# அத்தியாயம் -8

அதுவரை சுகந்தினியின் முகத்தில் தெரிந்த உணர்ச்சி மாறுதல்களை சற்றுப் பரிதாபத்தோடுதான் குணசீலன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இவள் பிறக்கும் முன்னரே நடந்து முடிந்துபோன விஷயம்.

அவனுடைய தாயின் மேல் எவ்வளவு பிரியம் வைத்திருந்தால், அவளுக்காக இவ்வளவு வேகமும் பரபரப்புமாக ஆராய்வாள்?

இவள் மருமகளாகக் கிடைப்பதற்குத் தான் எவ்வளவு கொடுத்து வைத்திருக்கிறோம் என்று என்றேனும் அவனுடைய அன்னைக்குப் புரியுமா?

எண்ணியதுமே அந்த வினாடியில் குணசீலனின் மனம் தவித்துப் போயிற்று.

எவ்வளவு பரிதாபகரமானது அவனுடைய தாயின் நிலை? அனுபவித்த வேதனை முழுதும் உணராமல், கிடைத்திருக்கும் சுகமும் புரியாமல், என்ன துன்பம் இது?!

இதை ஏற்படுத்தியது யாராக இருந்தாலும் கண்டுபிடித்து . . என்று எண்ணம் ஓடும்போதே, கண்டுபிடிக்க ஒரு வழியும் காணோமே என்று அவனது மனம் தவித்தது.

ஆனால் எல்லாம் வல்ல கடவுள், உரிய தண்டனையை அந்த ஆளுக்குக் கொடுத்தே ஆகவேண்டும்!

மனதுக்குள் குமுறிக் கொண்டிருக்கும்போதே சுகந்தினி, அன்னத்தாயின் பெயரைச் சொல்லவும் குணசீலன் ஒரேயடியாகத் திகைத்துப் போனான்.

பேசும் மொழியே அறியாதவன் போல சற்றுத் திணறிவிட்டு, “எளப்படி அது எப்படி உனக்குத் தெரியும்?” என்று பிரமிப்புடன் கேட்டான்.

கும்மிருட்டில் துழாவிக் கொண்டிருந்தவளுக்கு ஒளி விளக்கு கிடைத்த மாதிரி, அப்பாடி என்று பெருமூச்சு விட்டாள் சுகந்தினி.

“அவள் பெயர் அன்னத்தாயேதான்! சரிதானே? அவள் பெயர் எனக்குத் தெரியக் காரணம், ஆன்ட்டி சற்றுத் தெளிவாக அவ்வப்போது சொல்கிற பெயர் இது. முக்கியமாகக் கண்ணன் வந்த புதிதில். அவனிடம், “அன்னத்தாய் வந்ததும் எல்லாம் சரியாகிப் போகும்.

அப்புறமாய், நாம் நம் வீட்டுக்குப் போய்விடலாம்.” என்று ஒரு தரம் அவனிடம் ஆன்ட்டி சொல்ல, நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அந்த அன்னத்தாய் பற்றி விவரம் கேட்டால், அவர்களுக்குச் சொல்லத் தெரியவில்லை. இப்போது நீங்கள் சொல்லுங்கள், ஆன்ட்டியின் பிரச்சினையில் அந்த அன்னத்தாய்க்கு சம்பந்தம் இருக்கிறதுதானே?” என்று அழுத்தமான குரலில் தெளிவாகக் குணசீலனைக் கேட்டாள் அவள்!

ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு, குணசீலனும் ஒத்துக் கொண்டான்.

கட்டாயம் இருந்துதான் ஆக வேண்டும். மற்றபடி தாயார் இந்தப் பேச்சு சொல்லி இருக்க முடியாது. கூடவே, தாயைப் பற்றி, யாரோ ஏதோ சொல்லி, அப்படி இராது என்று சண்டை போட்டதாக ஒரு கதை வேறு, அன்னத்தாய் சொல்லியிருக்கிறாள்! .அதுவும் அவள் மட்டுமே சொன்னது! மற்ற யாரும் அது போல மூச்சுக் கூட விடவில்லை!

ஆனால் இப்படி என்று குறிப்பிட்டு குணசீலன் யாரையும் கேட்கவும் இல்லை.

பொதுவாகப் பிள்ளையை வைத்துக் கொஞ்சிக் கொண்டிருப்பாள் என்பதுதான் எல்லோரும் சொன்னது. அவளது முழு நேரப் பொழுதுபோக்கே அது மட்டுமே என்றுதான் தோன்றியது. வேறே எதற்கும் அவள் ஆசைப்பட்ட மாதிரியும் தெரிய வரவில்லை.

இவ்வளவு பாசம் மிகுந்த தாய், தன்னியல்பாக மகனைப் பிரிந்து சென்றிருக்க வாய்ப்பில்லை.

எனவே கட்டாயமாக ஏதோ சதி வேலை நடந்துதான் இருக்க வேண்டும். சதி செய்தவர்கள் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்.

தன்னைப் பிரிந்து தாய் அன்று என்ன பாடு பட்டாளோ என்ற பரிதவிப்பை அடக்கிக்கொண்டு, அடுத்து என்ன செய்வது என்று குணசீலன் யோசித்தான்.

“எப்படியும் ஒருவரை வேலைக்குச் சேர்க்கும்போது, அவர்களைப் பற்றி விசாரித்து, அதன் பிறகுதானே பணியில் அமர்த்தியிருப்பார்கள்? ஏதாவது பழைய ஃபைலில் அன்னத்தாய் பற்றிய விவரம் இருக்கக் கூடும். அதை வைத்து இலகுவாக அவளைக் கண்டுபிடித்து விடலாம். அப்புறம் . . .” என்று சுகந்தினி உற்சாகத்துடன் திட்டமிடலானாள்.

ஆனால், “ரொம்பக் கனவுகள் இப்போது காணவேண்டாம், சுகந்தினி.” என்று குணசீலன் மெதுவான குரலில் எச்சரித்தான்.

அவள் கேள்வியாக நோக்கவும், “கைக்கும் வாய்க்கும்

இடையிலேயே எத்தனையோ தடைகள் ஏற்படக் கூடும் என்கிறார்கள். இதுவோ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நடந்தது. நான் முதலில் அன்னத்தாய் பற்றிய விவரத்தைத் தேடிக் கண்டுபிடிக்கிறேன். அலுவலகப் பணியாளர்களைப் போல வீட்டு வேலை செய்கிறவர்களுக்கு ஃபைல் போடுவது கிடையாது. ஆனால், தேடினால் ஏதாவது கிடைக்கக் கூடும். அதைக் கொண்டு அடுத்த நடவடிக்கை பற்றி திட்டமிடலாம்." என்று மறுபடி காரை எடுத்தான் அவன்.

சுகந்தினியிடம் கனவு காண வேண்டாம் என்று சொன்னபோதும், அவன் மனதிலும் எதிர்காலம் பற்றி எத்தனையோ கற்பனைகள் எழத்தான் செய்தன.

ஆனால் குணசீலன் நடப்பு தெரிந்தவன். ஒரு பெரிய தொழிற்சாலையைத் திறம்பட நடத்துகிறவன். சுமார் கால் நூற்றாண்டு காலத்துக்கு முன் கண்ணுக்கு மறைந்துபோன ஒருத்தியைக் கண்டுபிடிப்பது எளிதல்ல என்கிற யதார்த்தம் அறிந்தவன்.

அதுவும் குற்றம் புரிந்துவிட்டுத் திட்டமிட்டு மறைந்தவளைத் தேடிப் பிடிப்பது எவ்வளவு கடினம் என்றும் அவனுக்கு நன்றாகத் தெரியும். தொழிற்சாலைப் பணியாளர்களாலேயே அது போன்ற அனுபவங்கள் நேர்ந்ததுண்டு.

ஆயினும் அவனுக்குச் சாதகமாக இருந்த ஒரே விஷயம், இத்தனை ஆண்டுகள் அவளை யாரும் தேடி வராததால், வென்றுவிட்டோம் என்கிற மமதை அன்னத்தாய்க்கு ஏற்பட்டிருக்கும் என்பதுதான். அதனால், தன்னை மறைத்துக் கொளவதில் அக்கறை குறைந்து போய், முதலில் இருந்த கவனம் மறைந்திருக்கலாம் என்ற நம்பினான்.

ஆனால் இது, அவள் இருக்குமிடம் தெரிந்து தேடிச் செல்லும்போது பயன்படக் கூடிய விஷயம்.

அதற்கு, முதலில் அவள் இருக்குமிடம் பற்றி அறிய வேண்டும்.

முதல் தடையாக, அவன் எண்ணியது போலவே வீட்டுப் பணியாளர்களுக்கு ஃபைல் போடுவது இல்லை என்று நிச்சயமாயிற்று.

ஆனாலும், சும்மாப் பார்த்த மாத்திரத்திலோ, வேலை என்று கேட்டு வந்ததுமோ யாரையும் பணியில் அமர்த்தி விடுவதில்லை. ஏற்கனவே தெரிந்தவர்களின் நல்ல வார்த்தைகளை நம்பித்தான் யாரானாலும் வேலை கொடுப்பது.

எனவே பணியாளர்களில் பலர் ஒரே ஊர்க்காரர்களாகவோ, அக்கம் பக்கத்து ஊர்களைச் சேர்ந்தவர்களாகவோதான் பெரும்பாலும்

இருப்பார்கள்.

அப்படித் தேடிப் பார்க்கையில் தொழிற்சாலைப் பணியில் இருந்து விலகிப் போன ஒருவனும் அன்னத்தாயும் ஒரே ஊர்க்காரர்கள் என்பது தெரிய வந்தது.

ஆனால் அவனையும் விசாரிக்க வழியின்றி, அன்னத்தாய் விலகுவதற்குச் சில மாதங்கள். . நாலு மாதங்கள் முன்னதாகவே அவனும் வேலையை விட்டுப் போயிருந்தான்.

இது சாதாரணமாக நடக்கக் கூடியதே என்றாலும், அதிலும் ஒரு விசித்திரமாக, அவனுக்கு ஊதிய உயர்வு கிடைத்த மறு மாதம் அவன் பணி விலகிப் போயிருந்தான்.

ஆண்டு முழுவதும் உழைத்ததன் பலனாகக் கிடைத்த அதிகப்படியான ஊதியத்தை அவன் இருந்து அனுபவிக்கவே இல்லை! ஏன்?

இதில் ஏதோ சூது இருப்பதாகக் குணசீலனுக்குத் தோன்றியது.

வழக்கம்போல இருவரும் சந்தித்து இது பற்றிப் பேசுகையில், குணசீலனின் இந்தக் கருத்தை சுகந்தினியும் ஆமோதித்தாள்.

“கட்டாயம் இருக்கும் குணா! கடவுள் நமக்குக் கொடுக்கிற க்ளூ தான் உள்ளுணர்வு என்று தாத்தா சொல்லுவார். அப்படிப் பார்த்தால் அன்னத்தாயிடம் ஏற்பட்ட சந்தேகம் முதல் குறிப்பு. இப்போது அவளோடு தொடர்பு உள்ள ஒருவன் பற்றியும் உறுத்தல் எழுந்திருக்கிறது. இதைக் கட்டாயமாய் ஆராய்ந்து பார்த்துவிட வேண்டியதுதான். ஆனால் எப்படி? யார் மூலமேனும் செய்வது என்றால், யாரை நம்பி விவரம் சொல்வது?” என்று சுகந்தினி உரக்க யோசித்தாள்.

“யாரையும் நம்ப முடியாது.” என்றான் குணசீலன். “தெரியாத்தனமாக அந்த அன்னத்தாய்க்கோ அவளது ஊர்க்காரன் முனியசாமிக்கோ நாம் தேடுவது தெரிந்தால், உள்ளதும் கெட்டுவிடக் கூடும். அதனால், யாரோ போல நானே போய்ப் பார்க்கலாம் என்று நினைத்தேன்.” என்றான் குணசீலன்.

சற்றுத் தயங்கி, “ஆபத்து ஒன்றுமிராதே? எதற்கும் நானும் வரட்டுமா?” என்று அவள் மெதுவாகக் கேட்டாள்.

“எதற்கு? எனக்குத் துணையாகவா?” என்று அவன் சிரித்தான். “அதுவும் சரிதான். அந்த அன்னத்தாயின் ரௌடி ராஜ்யத்தில், திடீரென்று பத்துப் பேரை அவள் என்மேல் ஏவி விட்டால், அவர்களை அடித்து விரட்ட ஆள் வேண்டாமா? ஆனால், பத்துக்கு மேலாகப்

பதினோரு பேர் வந்தால் என்ன செய்யப் போகிறோம், சுகந்தினி?” என்று கேட்டுவிட்டு, மேலும் சிரித்தான் அவன்.

அவன் சிரித்து முடிக்கும்வரை காத்திருந்து, இளநகையோடு அவள் கூறினாள். “கூட வருவது மற்றவரை அடித்து உதைப்பதற்காக மட்டும்தானா? ஒருவர் கண்ணுக்குத் தப்புவது, அடுத்தவர் கண்ணில் படலாம். உங்களோடு கூடப் பேசுகிறவரின் “பாடி லாங்வேஜை” கவனிக்கலாம். “ என்றாள்.

“முக்கியமானதை விட்டுவிட்டாயே! ஒரு மூளைக்கு இரண்டு மூளைகளாகச் சேர்ந்து பிரம்மாதமாய் யோசிக்கலாம்! ஐயோ சுகிச் செல்லம், இத்தனை காலம் உன் உதவி இல்லாமல் நான் எப்படித்தான் வளர்ந்து வாலிபனானேனோ தெரியவில்லையே!” என்று ஆச்சரியப்பட்டான் குணசீலன்.

“உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறதா, குணா? ஆனால் யோசியுங்கள், திருட்டு மூலம் அடைந்த அந்த நகைகளால் கிடைத்த பணத்தைக் கொண்டு, இத்தனை ஆண்டுகளில், அன்னத்தாய் எந்த அளவு வளர்ந்திருக்கிறாளோ? அப்போதே திருட அஞ்சாத அவள், மற்ற குற்றங்கள் செய்யப் பயப்படுவாளா? அதுதான் சற்றுக் கவலையாக இருக்கிறது.” என்றாள் அவள்.

குரல் கனிய, “பார் சுகந்தினி, என்னை அன்னத்தாய் பார்த்து சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் . .ரொம்ப சரியாகச் சொல்வதானால் இருபத்து நாலு ஆகின்றன. அவளுக்கு என்னை அடையாளம் புரிவது கடினம். மேலும், நானும் இன்னான் என்று என்னைக் காட்டிக்கொள்ளப் போவதில்லை. சும்மா ஊர் சுற்றப் போவது போலப் போய், வெறும் விட்டேற்றியாய் அக்கறை காட்டாத பேச்சிடையே அவளைப் பற்றி என்ன கிடைக்கிறது என்று பார்க்கப் போகிறேன்.அதனால், எனக்கு எந்த வித அபாயமும் நேரிடாது, கவலைப்படாதே. “ என்று விளக்கினான் அவன்.

“எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது தப்பில்லை.” என்றாள் அவள்.

“சரிங்க மேடம்!” என்று சிரித்தவாறே விடை பெற்றான் குணா.

பெரிதாக எதுவும் கிடைக்கும் என்று எதிர்பார்த்து குணசீலன் அந்தப் பயணம் செல்லவில்லை. ஒரு சின்ன நூல் கிடைத்தாலும் அதிலிருந்து தேடலாமே என்று எண்ணியே சென்றான்.

ஆனால் வியப்பளிக்கும் விதமாக, அங்கே அவனுக்கு நிறைய விஷயங்கள் . கிடைத்தன. .தேவையான பலதும்.

ஊரின் பெரிய கடை வீதியிலேயே “அன்னத்தாய் அங்காடி” என்று பெரிய பலசரக்குக் கடை ஒன்று இருந்தது. ஆனால், கடை பெரிதாக இருந்தாலும் சற்று அழுக்குப் படிந்த மாதிரி, ஒரு பழைய தோற்றம் தெரிந்தது. சுத்தம் பண்ணாதது போல.

பாராத பார்வையால் பார்த்தபடி மேலே நடந்தால், அடுத்தடுத்து சில கடைகளில் புதுப்பிக்கும் வேலை நடந்துகொண்டிருப்பது, தெரிந்தது.

ஒரு கடையில், உப்புத்தாள் வைத்துத் தேய்த்துப் பழைய பெயின்டைச் சுரண்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள். கூர்ந்து பார்த்ததில், பழைய பெயர் “அன்னத்தாய் மருந்துக் கடை”யாக இருந்தது. அதே போன்ற இன்னொன்றின் பழைய பெயர் “அன்னத்தாய் சாப்பாட்டுக்கடை”!

எல்லாம் பெயர் மாறிக் கொண்டிருந்தன.

இதன் பொருள் என்ன?

பலசரக்குக் கடையில் இருந்து, சுட்ட கத்தரிக்காய் போலச் சுளித்த முகத்தோடு வெளியே வந்த ஒருவரிடம் “ஏன் சார், இங்கே, இந்தக் கடையில் “கார்ன் ஃப்ளேக்ஸ்” கிடைக்குமா?” என்று குணசீலன் விசாரித்தான்.

சற்றுப் படித்த முகம்தான். குணசீலனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, “கார்ன் ஃப்ளேக்சா? ஒரு காலத்தில் இங்கே எல்லாமே கிடைத்ததுதான். ஆனால் இப்போது சாதாரண அவல் கூட இங்கே கிடைக்காது.” என்று கடுப்புடன் கூறினார் அவர்.

புரியாதவன் போலக் கூடவே நடந்தபடி, “ஏன் சார், இந்த ஊரில் யாருக்கும் அவல் பிடிக்காதா? கடை பெரிதாகத்தானே இருக்கிறது? “ என்று அப்பாவியாகக் கேட்டான் குணசீலன்.

“கடை பெரிதாக இருந்து என்ன செய்வது? நடத்துகிற மனிதர்கள் எல்லோரும் சின்னவர்களாகிப் போனார்களே! விற்கவிற்க எடுத்து ஊதிக் கொண்டிருந்தால் என்ன ஆகும்? அந்தம்மா, தாய்க்காரி, முதலில் சாதாரண நிலைமைதான். வயிற்றுப்பாட்டுக்காக வேலை பார்க்க வெளியூருக்குப் போனாள். அவள் அதிர்ஷ்டம் ஏதோ லாட்டரியிலே பெரிய பணம் கிடைத்துத் திரும்பி வந்தாள். லாட்டரியிலே விழுந்ததுதானே என்று வீணாக்காமல், இந்தத் தெருவையே விலைக்கு வாங்கின மாதிரி.

கடை கடையாகத் திறந்தாள். பத்துப் பதினைந்து வருஷம்

நன்றாய்த்தான் நடத்தினாள். நல்ல லாபம். பெரிதாக வீடெல்லாம் கட்டினாள். இப்போ மூன்று நாலு வருஷமாகப் பிள்ளைகள் வளர்ந்து பார்க்கத் தொடங்கியதில் இருந்து, ஒன்றும் சரியில்லை! முன்பு ஒரே திறப்பு விழாவாக இருந்தது. இப்போது, நேர் எதிராகப் போய்க் கொண்டிருக்கிறது. இந்த முதல் கடை கூட எவ்வளவு நாள் தாங்குமோ என்னவோ? “ என்றார் அந்த மனிதர்.

அவர்களுடனே நடந்துவந்த இன்னொருவர் இப்போது பேசினார். “முதுகு ஒடிய உண்மையாக உழைத்தாலும், கையில் ஒன்றும் மிஞ்சக் காணோம்., உழைப்பே இல்லாமல் லாட்டரியில் கிடைத்த பணம் எப்படிக் குட்டி போடுகிறது என்று நான் உள்ளூரக் குமைந்திருக்கிறேன், சித்தப்பா. மெய்யான உழைப்புக்கு ஈடு ஒன்றுமே கிடையாது என்று இப்போது தோன்றுகிறது. மேலே இருக்கிறவன் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறான்!” என்று வேதாந்தம் பேசினார்.

இது போன்ற இன்னும் சில விவரங்களையும் பொதுக் கருத்துகளையும் திரட்டிக்கொண்டு குணசீலன் திரும்பி வந்தான்.

“அன்னத்தாய் கெட்டிக்காரிதான், சுகி. ஆயா வேலைக்குப் போனவளுக்கு இவ்வளவு பணம் ஏது என்று மற்றவர்கள் யோசிப்பர்கள் அல்லவா? இப்போது பார்! லாட்டரிச் சீட்டு விழுந்ததாகப் பரப்பி சமாளித்துவிட்டாள்! ஜேஜே என்று பணக்கார வாழ்க்கையாம்! ஐந்தாறு கடைகள் திறந்து வருமானத்தையும் பெருக்கியிருக்கிறாள்.. ஆனால், இப்போது ஏதோ சரியில்லை. ஒரே இறக்கமாகத் தெரிகிறது. மோசமான பிள்ளைகள் என்கிறார்கள் சிலர். மக்களை அடக்க முடியவில்லையாம்! அவளுக்குமே திமிர் வந்துவிட்டதாகவும் பேச்சு. அந்த முனியசாமி . . .அவனை ஒரு மாதிரி உறவில கூட வைத்திருந்தாள் போல. பிள்ளைகளுக்கும் அவனுக்கும் ஒத்துப் போகாமல் அவனை விரட்டிவிட்டாள் என்கிறார்கள்.” என்று தான் சேகரித்து வந்த விவரங்களை சுகந்தினியிடம் சொன்னான்.

“பாட்டி ஒரு பழமொழி சொல்லுவார்கள். “ஊரை அடித்து உலையில் போட்டவனுக்கு உள் வீட்டுக்குள்ளேயேதான் விரோதி வருவான்” என்பார்கள்! சரியாகத்தான் தோன்றுகிறது. இங்கே திருடிக்கொண்டு போய், அதை வைத்துப் பெரிய ஆளாகியிருக்கிறாள். கடைசியில் அவளுடைய பிள்ளைகளே அவளைக் கீழே இறக்குகிறார்கள் போல. கூட்டுக் கள்ளனுக்கும் கல்தா கிடைத்திருக்கிறது. “ என்றாள் சுகந்தினி.

பேசிக்கொண்டே வெளியே பார்த்த சுகந்தினி திடுக்குற்று, “கார்

எங்கே போகிறது, குணா? நான் வீட்டுக்குப் போக வேண்டாமா? தாத்தா பாட்டியிடம் ஒன்றும் சொல்லவில்லை, தேடுவார்கள். காரைத் திருப்புங்கள்." என்றாள் அவசரமாக.

"நான்தான் சொல்லிவிட்டேனே." என்றான் அவன் பெருமையாக.

அவனது குரலில் குறுகுறுத்து, "என்னவென்று?" என்று விவரம் கேட்டாள் அவள்.

"உண்மையை!" என்றான் அவன் பழைய குரலிலேயே.

"குணா! ப்ளீஸ்! தாத்தா பாட்டியிடம் என்ன சொன்னீர்கள்?" என்று கெஞ்சலாகக் கேட்டாள் சுகந்தினி.

"ப்ளீஸ் போட்டுவிட்டாய்! சொல்லித்தான் ஆக வேண்டும். சொல்லட்டுமா?"

பொறுமையிழந்து, "ஐயோ! சொல்லுங்கப்பா. அதைத்தானே இத்தனை தடவையாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்?" என்றாள் அவள்.

ஆனால் அப்போதும், "எத்தனை தடவை கேட்டாய்? " என்று குணசீலன் தொடங்கவும், தலையைத் திருப்பி, "வேண்டாம் சாமி. நீங்கள் என்னிடம் எதுவும் சொல்ல வேண்டாம். நான் தாத்தாவிடமே கேட்டுக் கொள்கிறேன். நான் கேட்டால் அவர் உடனே சொல்லி விடுவார்." என்றாள் அவள் மிடுக்காக.

"போச்சுடா! ஊதிய பலூனில் பொட்டென்று ஓட்டை போட்டுவிட்டாயே! பரவாயில்லை நானே சொல்லி விடுகிறேன். இரண்டு நாள் பிரிவுக்குப் பிறகு, இனிமேல்தான் வீட்டுக்குப் போய் அம்மாவைப் பார்க்கப் போகிறேன். அவர்களது குணம் அறிந்த நீ கூட இருந்தால் இலகுவாக இருக்கும் போலத் தோன்றியது. அதனால்தான் உன்னைக் கூட்டிப் போவதாகத் தாத்தாவிடம் கேட்டேன் உடனே சரியென்றுவிட்டார். " என்றான் குணசீலன்.

சுகந்தினிக்குப் பாவமாக இருந்தது. பல முறை, மகன் அங்கே பக்கத்திலேயே இருந்தாலும், மரகதம் அவனைப் பெரிதாகக் கண்டுகொண்டதில்லை. தையலோ, கை வேலையோ . . என்ன செய்து கொண்டிருந்தாலும், அதிலேயே கவனமாக இருந்துவிடுவாள். இரண்டு நாள் பிரிந்து சென்று திரும்பி வந்து தாயைக் காண ஆவலாக இருக்கும் மகனுக்கு அது வலிக்கும்.

ஆனால் பல ஆண்டுகள் கூடவே இருந்து, அவளது தன்மை அறிந்த சுகந்தினி, இதையெல்லாம் பொருட்படுத்தாமல், தானே மரகதத்தை

இழுத்து வைத்துப் பேசுவது வழக்கம். அதிலே தானும் சேர்ந்து கொள்ள நினைக்கிறான்!

புரிந்தும் புரியாதவள் போன்று, “யாரோ ஒருத்தர், துணையே தேவையில்லை என்று வீரப் பிரதாபங்கள் பேசினார்! இப்போதானால் துணைக்காக மேலிடத்து சிபாரிசு பிடித்தாகிறது! புதிர் இதுதான் யார் அவர்? சொல்லுங்கள் பார்ப்போம்!” என்றாள் அவள்.

விளையாட்டுப் பேச்சில் இணைந்து, “மா கனம் பொருந்திய உயர்திரு குணசீலன் அவர்கள்!” என்று அறிவித்தான் அவன்.

“மா கனமா? என்ன வெயிட் இருப்பீர்கள்? இருநூறு கிலோவா?”

“எவ்வளவானால் என்ன? அந்த சிவபெருமானே, சக்தி இல்லாத சிவம் சவம் என்று இருந்து விடவில்லை? இங்கேயும் அம்மையார்தான் சக்தி!”.

சிரிப்பும் கேலியுமாகவே குணசீலனின் வீடடை அடைந்தனர்.

நேரே மரகதத்தைத்தான் பார்க்கச் சென்றார்கள்.

சுகந்தினியைப் பார்த்ததுமே முறுவலால் வரவேற்ற மரகதம், குணசீலனைப் பார்த்து, “இரண்டு நாட்களாக ஆளையே காணோமே! ஊரில் இல்லையா?” என்று ஆவலாகக் கேட்டு, வரவேற்பாகக் கையை நீட்டினாள்.

குணசீலனின் முகத்தைப் பார்த்த சுகந்தினிக்கு விழிகளில் நீர் அரும்பியது!

# அத்தியாயம் -9

தினம் பார்த்துப் பழகி விட்டதாலா? அல்லது, டிஎன்ஏயின் உந்துதலா?

எதுவானாலும் தாயின் நீட்டிய கையைப் பற்றிய மகனின் கண்கள் கலங்கிவிட்டன.

அதையும் மரகதம் கவனித்து, “ஏன்யா ,விழுந்து விட்டியா? வலிகுதா? கண்ணப்பு கூட இப்படித்தான் அழுவான். காட்டு, தடவி விடுகிறேன்.” என்றாள் கனிவாக.

தாயின் “கண்ணப்பு” தானில்லை!

இந்த உண்மை அன்னையின் பழுது பட்ட மனநிலையை உணர்த்த, குணசீலனின் மனம் திடப்பட்டது. இந்த நிலையிலும் அவனது வலியையும் உணர்கிறாளே!

லேசாக முறுவலித்து, “அப்போது வலித்தது. இப்போது சரியாகிப் போயிற்று. இப்போ வலியே இல்லை! போயே போச்!” என்று கூற, அவனைத் தொடர்ந்து “போயிந்தே! இட்ஸ் கான்! “ என்று சுகந்தினி ராகத்தோடு சொல்லி முடிக்க, மரகதமும் அவர்களோடு சேர்ந்து சிரித்தாள்.

சுகந்தினியைத் திருப்பிக் கொண்டு விடச் செல்லும்போது, “பேசாமல் இவர்களை அம்மா என்றே அழைக்கும்படிக் கண்ணனைப் பழக்கி இருக்கலாமே!” என்றான் குணசீலன்.

“தாத்தாவுக்குப் பிடிக்கவில்லை. கண்ணனுக்கு அப்போது மூன்று வயது. பெற்ற தாயை நன்கு அறிந்திருந்தான். இன்னோர் அம்மாவை அவன் ஏற்பது கடினம் என்று தாத்தா அபிப்பிராயப்பட்டார். ஆன்ட்டியும் அதை வேண்டவில்லை. “கண்ணப்பு, கண்ணப்பு” என்று அவனை அழைப்பதிலேயே திருப்தியாகி விட்டார்கள். எதையும் மாற்றி, மறுத்து இருவரையும் குழப்ப வேண்டாம் என்று, நாங்களும் விட்டுவிட்டோம்.” என்றா சுகந்தினி.

“ஏதோ, வாழ்க்கைக்குப் பிடிப்பாக அம்மாவுக்கு அவன் கிடைத்ததே பெரிது.” என்றான் குணசீலன்.

தன்னால் பயனில்லை என்றாலும், தாய்க்கு ஒரு பற்றுக் கோடு கிடைத்தது அவனுக்கு ஆறுதல்தான்.

ஆனால் ஏதோ முழுமை பெறாத நிலை இருவரையுமே குடைந்தது.

வேறு எதுவுமல்ல. அந்த அன்னத்தாய் விவகாரம்தான். எளிதாக ஒரு குடும்பத்தைக் கலைத்து, பெற்ற தாயையும் பிள்ளையையும் பிரித்து, ஒரு குடும்பப் பெண்ணின் வாழ்வை அழித்துவிட்டு, சுக போகமாக வாழ்ந்திருக்கிறாளே!

இன்றைக்கு அவளுக்குச் சில நஷ்டங்கள், தொல்லைகள் நேர்ந்திருக்கலாம். ஆனால் குணசீலன் அறிய, ஒரு பெரிதான கடை, வீடு எல்லாம் அவளுக்குச் சொந்தமாக உள்ளனவே. விற்றுத் தின்றால் கூட, வாழ்நாள் முழுதும் சுகமாகவே கழிக்கலாம்.

என்னவோ எல்லாம் பெரிய தப்பு மாதிரி, மனதால் இணைந்த இருவருக்குமே தோன்றியது.

“அன்றைக்கே பாட்டி பேச்சைக் கேட்டு, நகைகள் தொலைந்தது பற்றி அப்பா போலீசில் புகார் கொடுத்திருந்தால் ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு
முயன்றிருக்கலாம்.
இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நடந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சியைப் பற்றி இப்படிச் செய்திருந்தால், அப்படிச் சொல்லியிருந்தால் என்று யோசிப்பது போல மடத்தனம் கிடையாது. நடந்து முடிந்ததில் ஒரு வினாடி நேர நிகழ்வைக் கூட நம்மால் மாற்ற முடியாது எனும்பேது, அதை நினைப்பது கூட வீண் நேர விரயம்! எனவே அது போல யோசிப்பதை அடியோடு விட்டு விடுவோம். இப்போது மேலே என்ன செய்யலாம்? அதை யோசி, சுகி. நீதான் யோசிக்க வேண்டும். ஏனெனில் உருப்படியாக ஒன்றும் தோன்றாமல் என் மூளை மக்கர் பண்ணுகிறது. என் மகாசக்தி, அம்பிகை நீ சொல்லு. என்ன செய்யலாம்? ஆனால், செய்வதற்கு ஏதாவது இருக்கிறதா, சுகந்தினி?” என்று ஒரு சலிப்புடன் வினவினான் குணசீலன்.

அலைச்சலும், அங்கே அறிந்தவைகளும், தாயின் நிலையுமாகக் குணசீலன் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறான் என்று சுகந்தினிக்குத் தோன்றியது. எல்லாவற்றையும் விட, நேர்ந்த எதையும் சீர்ப்படுத்த முடியாத கையாலாகாத்தனம்!

உற்சாகத்தை வரவழைத்துக்கொண்டு, “ஏதாவதா? எத்தனையோ இருக்கின்றன.” என்றாள் அவள்.

அவன் சந்தேகமாகவே நோக்கினான்.

“ஆமாம் குணா! இதுவரை குற்றவாளி யார் என்ற நிச்சயம் நமக்கு இல்லாமல் இருந்தது. இப்போது அது தெரிந்துவிட்டதால், பல விதமாக முயற்சி எடுக்கலாம்.”

“உதாரணத்துக்கு ஒன்று சொல்லேன்!” என்று மடக்கினான் அவன்.

என்ன செய்ய முடியும்? திருட்டு பற்றிப் புகார் கொடுப்பதற்குக் காலம் மிக அதிகமாகக் கடந்துவிட்டது. உருக்கி விற்று, அந்த நகைகள் இப்போது எந்த வடிவத்தில் இருக்கின்றனவோ? யாராவது ஆள் வைத்து மிரட்டலாம் என்றால், முதலைக்குத் தண்ணீரில் பலம் என்பது போல, அன்னத்தாய் அங்கே பலம் உள்ளவளாக இருந்தாள்.

“ஏஏன், ஆன்ட்டியையும் அவளையும் சந்திக்க வைக்கலாமில்லையா?

அவளை நேரில் பார்த்தால், ஆன்ட்டிக்குப் பழைய நினைவு வரலாமல்லவா?”

“ஏ ஏ . .சுகி, சுகி! அது அவ்வளவு நிச்சயமல்ல, வாய்ப்பு மிகவும் குறைவு என்று டாக்டர் மயில்வாகனன் சொன்னாரே. இந்த நிலை வந்து நிறைய ஆண்டுகள் கடந்துவிட்டன என்பதோடு, நடந்தது என்ன என்ற விவரமும் நம்மிடம் இல்லை , அதனால் ரொம்ப மாற்றம் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை என்றாரே, மறந்துவிட்டாயா?” என்று நினைவுபடுத்தினான் குணா.

“இருக்கலாம். ஆனால், அவரே என்ன சொன்னார்? மெல்ல மாற்றங்களும் நேரலாம் , பார்க்கப் பார்க்க ஆன்ட்டிக்கு உங்களிடம் பாசம் பெருகக் கூடும் என்றாரே! எப்படியும் ஆன்ட்டி மெல்லத் தெளிவு பெறுவது நிஜம்தானே? உங்களிடம் பற்றும் பெருகத்தான் செய்கிறது?

“இன்னும் அப்போது நடந்தது என்ன என்று தெளிவாகத் தெரிந்தால் . . அந்த அன்னத்தாயைப் பார்த்தாலே ஏதாவது நிகழலாம். கண்ணனைப் பார்த்தபோது சொன்னதை எண்ணிப் பார்க்கும்போது, சம்பவம் நடந்து இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் அவள் பெயர்தானே ஆன்ட்டிக்கு மறக்காமல் இருந்திருக்கிறது?

“குணா, நாம் செய்து பார்ப்போம். டாக்டரிடமும் கேட்டுக் கொள்வோம்.

“ஆன்ட்டியை நேரில் பார்த்தால் அந்த வில்லிக்கும் ஒரு பயம் வரக் கூடும்.

“இப்போது அந்த அன்னத்தாய் விஷயத்தில் சும்மா இருக்கவும் நம் மனம் பொறுக்கவில்லைதானே? நகை பணத்தைத் திரும்ப பெற முடியாது போனாலும், குறைந்த பட்சமாக, ஆன்ட்டிக்கு இப்படி ஆனதன் காரணத்தையாவது தெரிந்து கொள்ள முயற்சிப்போமே. “

என்று, இடை விடாமல் தொடர்ந்து பேசி முடித்தாள் அவள்

குடும்பத்தைப் பற்றி நன்கு அறிந்த மருத்துவர் மயில்வாகனம், அவர்களைத் தடுக்க முயற்சிக்கவில்லை.

“மரகதத்தைப் பொறுத்த வரையில் உடல் பலகீனம் கிடையாது. மனதைப் பற்றிச் சொல்வதானலும், ஒரு சின்ன வட்டத்துக்குள் தன்னைச் சுருக்கிக் கொண்டு இருந்தே அவர்கள் பழகிவிட்டார்கள் என்பதுதான் பிரச்சினை. அதிலிருந்து வெளியே வரும் ஆவல் மரகதத்துக்குக் கொஞ்சமும் இல்லை. ஆனாலும் உங்கள் முயற்சியைச் செய்து பாருங்கள்.

“ஒன்று மட்டும் நினைவில் இருக்கட்டும். வெறும் மன அதிர்ச்சியால் மட்டுமாக மரகதம் இப்படி ஆகவில்லை. என்றைக்கோ தலையில் பட்ட அடியின் பாதிப்பும் இருக்கிறது! அதனால் அதிக எதிர்பார்ப்பின்றி, முயற்சி செய்யுங்கள். . . ஏதோ சொல்வார்களே, நூலைக் கட்டி மலையை இழுக்க முயற்சிப்பது என்று? மலை வரா விட்டால் நூல்தானே நஷ்டம்? அது போன்ற மன நிலையோடு இந்த முயற்சியைச் செய்யுங்கள். மனித மூளை பற்றி விஞ்ஞானம் அறியாதது நிறைய இருக்கிறது. நன்மை விளையுமானால் எல்லோருக்கும் மகிழ்ச்சிதானே? ஆனால், யாராவது அவர்கள் கூடவே இருங்கள்.” என்று, சில எச்சரிக்கைகளோடு அனுமதி கொடுத்தார் அவர்.

கண்ணனை மறுபடியும் வாகதீசரிடம் விட்டுவிட்டு, தாயும் பிள்ளையும் சுகந்தினியுமாக மூவரும் கிளம்பிப் போனார்கள்.

“கண்ணன் வரவில்லையே?” என்று கேட்ட மரகதத்திடம், “அவனுக்கு ப் பரிசுகள் வாங்கத்தான் போகிறோம்.” என்று சுகந்தினி சொல்லவும் அதற்கு மேல் பெரியவள் அமைதியாகிவிட்டாள்.

மருத்துவர் சொன்ன சின்ன வட்டம் சுகந்தினிக்கு இப்போது நன்கு புரிந்தது.

இதனுள் குணசீலனை புகச் செய்ய வேண்டுமே! முடியுமா?

அன்னத்தாயைச் சந்தித்தது ஒன்றும் அதிசயச் சம்பவம் அல்ல. சந்திப்பது ரொம்பக் கடினமாகவும் இருக்கவில்லை.

“கடைவீதியில் ஒரு கடை வாங்குவது தொடர்பாகப் பேச வந்ததாகவும் அங்குள்ள பெரிய ஹோட்டலான “சுப”த்தில் தங்கியிருப்பதாகவும், அன்னத்தாய் பலசரக்குக் கடையின் கணக்குப்பிள்ளையிடம் சொல்லிவிட்டு, ஹோட்டலுக்குத் திரும்பினர்.

இவர்கள் ஹோட்டலுக்குப் போய்ச் சேருமுன்னரே, மறு நாளே

சந்திப்பு பற்றிப் பேச

ஆள் வந்திருந்தான்.

கச்சலான உடலமைப்பு. சிகரட்டால் கறுத்த உதடுகள். கண்களில் லேசாக போதை மயக்கம்!

அன்னத்தாயுடைய மகன் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட அவன் காசுக் கணக்கு மட்டுமே பேசினான். "நல்லாக் கேட்டுக்க. கமிஷனா எனக்குத் தனியாப் பத்தாயிரம் தந்துடணும் மார்க்கெட் ரேட்டுக்குக் கம்மியாகவே முடித்துத் தருவேன். எவ்வளவு கம்மியாக முடிகிறதோ, அதிலேயும் பாதி, அப்பதுக்கு அம்பது எனக்குக் கொடுத்து விடணும்..அப்புறமா, முக்கியமா ஒரே தடவையாகப் பணத்தை செட்டில் பண்ணி விட வேணும்! முன் பணம் கொடுத்துட்டு மாசக் கணக்கா இழுத்தடிக்கிற வேலை நம்ம கிட்டே நடக்காது." என்றான் கறாராக.

சுகந்தினி சொன்ன உள் வீட்டு விரோதி!

தாயின் சொத்தை விற்கத் தனக்குத் தனியாகத் தரகு பேசுகிறான்! பெற்றவளுக்கு வர வேண்டிய தொகை எவ்வளவு குறைந்தாலும், அது பற்றி அவனுக்கு அக்கறையில்லை!

தாயையும் மகனையும் பிரித்தவளுக்கு எப்படிப்பட்ட அற்புதமான பிள்ளையைக் கடவுள் உருவாக்கி இருக்கிறார்!

பிள்ளைகள் என்றது நினைவு வர, "நீங்கள் மட்டும் எப்படி முடிவு பண்ணமுடியும்? மற்ற பிள்ளைகள் சம்மதிக்க வேண்டாமா? உன் தாய் ஒப்புவாளா? சட்டப் பிரச்சினை எதுவும் வரக் கூடாதே!" என்று குணசீலன் கேட்டான்.

"அத்தப் பத்தி நீ ஏன் கவலப் படுகிறே? என் தம்பி, அந்தப் பயலுக்கு ஒரு பாட்டிலை வாங்கிக் கையிலே கொடுத்திட்டா, எத்தன கையெழுத்து வேணுமானாலும், எங்க வேணுமானாலும் போடுவான்.! என் அக்கா, அந்த பஜாரி, என்னத்தையாவது வாங்கி வாயிலே திணிச்சா, பையோட புடுங்கிட்டுப் போய் உக்காந்து, உக்காந்து தின்னுவா. இல்லாட்டிக் கையை ஒசர ஓங்கினாலே போதும். அத்தப் பத்தி ஒனக்கு என்ன கவலை?"

"ஆனால் உன் தாயார்? எல்லாச் சொத்துமே அந்தம்மாவுடையதாமே! இப்போதும் அவள் பேரிலேதான் இருக்கிறதாம். அப்படி இருக்கும்போது, அவளது கையெழுத்தல்லவா ரொம்பவும்
முக்கியம்?"

வந்தவனின் முகம் கடுத்தது. “படுபாவி . பெத்தவளா, அவ? பணப் பேயி! பேராசை பிடிச்ச பிசாசு! அல்லாத்தையும் தன் பேரிலேயே வாங்கி வச்சிருக்கிறா! தலைப் பிள்ளை, நாளைக்குக் கொள்ளி போடப் போறவன் அவந்தானே, அவன் பேரிலே வாங்கிப் போடுவோமின்னு நெனச்சாளா? நம்ம புள்ளை என்கிற நம்பிக்கையே இல்லாம, அல்ல்லாத்தையும் தன் பேரிலேயே வாங்கிப் பூதம் மாதிரி காத்துக்கினு கெடக்குது. சரி. ஆனா, அது உனக்கு என்னாத்துக்கு? கையெளுத்துப் போட, அம்மாளை நான் கூட்டியாரேன். ஒனக்கு அவ்வளோதானே வேணும்?” என்றான் எரிச்சலோடு.

“ஊகூம். அதெப்படிப் போதும்? முதலில் ரேட் பேசி முடித்து, அதை அந்தம்மா ஒத்துக் கொண்ட பிறகுதான் கையெழுத்துப் போடுவது, பணம் கொடுப்பது எல்லாம். அதில்லாமல் எதுவும் நடக்காது. நீ சொல்கிற மற்ற எல்லாவற்றுக்கும், உனக்குத் தனியாகப் பணம் தருவது உட்பட நான் தயார். ஆனால், உன் தாயாரை நேரில் பார்த்து, அவள் வாயால் என்னிடம் சரி என்று ஒத்துக் கொண்டால்தான் மேற்கொண்டு எதுவுமே. அப்படி இல்லாமல், நான் ஒரு பைசா நகட்ட மாட்டேன். அதற்கு மேல் உன் இஷ்டம்!” என்றான் குணசீலன் மிகவும் கண்டிப்பான குரலில்.

தாயாரை அழைத்து வராதிருக்க அந்த வைரவன், அன்னத்தாயுடைய மூத்த மகன் கொஞ்சம் வாதாடிப் பார்த்தான். ஆனால் குணசீலன் இதில் பிடிவாதமாக இருக்கவே, மறுநாள் தாயைக் கூட்டி வருவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

நடுத்தரமான ஊர் அது. மேலே மாடியில் தங்கும் அறைகளும், கீழ்த் தளத்தில் உணவருந்தும் வசதியும் உள்ளது. ஓரமாக இருந்த ஒரு மேஜையில் அமர்ந்துதான் வைரவனோடு குணசீலன் பேச்சுவார்த்தை நடத்தியது.

வைரவன் கிளம்பியதும், குணசீலன் எழுந்து நின்று சுற்றிலும் பார்த்தான்.

ஆங்காங்கே உட்கார்ந்து எதையோ உண்டு அருந்தி முடிருந்த ஓரிவரும் எழுந்து வேளியே செல்லலாயினர்.

அன்னத்தாயால் ஒரு தரம் தாய்க்கு நேர்ந்த ஆபத்தை எண்ணி, குணசீலன் மிகுந்த எச்சரிக்கையுடனேயே இருந்தான்.

இதற்கு மேல் தாயாருக்கு எந்தத் துன்பமும் நேர விடக் கூடாது என்பதிலும் அவன் உறுதியாக இருந்தான்.

இந்த முயற்சியை விட்டுவிடலாமோ என்று கூட அவன் எண்ணியதுண்டு.

ஆனால் தாய்க்கு நேர்ந்த துன்பம் தீர்ந்து அவளுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்ற வேகம். கூடவே, ஒரு வேளை பெற்றவள் நன்றாகி விட்டால் . . மகனாகத் தன்னை ஏற்பாளோ என்ற நப்பாசையுமாகவே, குணா இந்த முயற்சியில் ஈடுபட்டதே.

மற்றபடி, இந்த அளவிலேனும் அவள் உடல் ஆரோக்கியத்தோடு இருந்தால் அதுவே போதும் என்ற மனநிலைக்கு அவன் எப்போதோ வந்திருந்தான்.

மரகதத்துக்குத் துணையாக அவளோடு அறையிலேயே தங்கிவிட்ட சுகந்தினியிடம் கீ ழே நடந்த அனைத்தையும் குணசீலன் தெரிவித்தான். எல்லாம் சொல்லிவிட்டு, “ஊரை அடித்து உலையில் போடுகிறவர்கள் பற்றி, நீ ஒன்று சொன்னாயே சுகி, நூற்றுக்கு நூறு சத்தியம்! அந்த வைரவன், பெற்றவளை மனிதப் பிறவியாகவே மதிக்கக் காணோம். நாளைக்கு அன்னத்தாயைக் கூட்டி வருவதாக வைரவன் சொல்லிவிட்டுப் போனான். வரும்போது நீயே பார், புரியும். முற்றிலும் அன்னியனான என்னிடம், அவனைப் பெற்ற தாயைப் பற்றிப் பேய், பிசாசு என்று என்னென்னவோ பேசிவிட்டானே!”

மறுநாள் பொது உணவுச்சாலைக்கு மரகதத்தைக் கூட்டிச் செல்லக் குணசீலனுக்கு விருப்பமில்லை.

அன்னத்தாயை மரகதம் சந்திக்கும்போது என்ன நடக்கும் என்று, யாருக்கும் தெரியாது. எதுவுமே நேராமலும் போகலாம்.

ஆனால் ஒருவேளை அவள் பரபரப்புற்றால், அதிர்ச்சி அடைந்து ஏதேனும் செய்தால், மற்றவர்களுக்குக் காட்சிப் பொருளாக அன்னை இருக்கக் கூடாது என்பதில் அவன் உறுதியாக இருந்தான்.

எனவே, தனி பார்லர் ஒன்றைப் பணம் கொடுத்து ஏற்பாடு செய்திருந்தான்.

உயர்ந்த ரக நொறுக்குத் தீனி, குளிர் பானங்கள் போன்றவையும் அறையில் வைக்கப்பட்டன.

இலவசமாக இவைகளை ருசிக்கும்போது, மனம் கொஞ்சம் பெருமிதம் கொள்வதும், சிறிது கட்டுப்பாட்டைத் தளர்த்தி இலகுவாவதும் இயல்பு. அதையே இவர்களிடமும் குணசீலன் எதிர்பார்த்தான்.

ஏதோ பெரிய ஆளாகிவிட்டதைப் போலப் பொய்யான பிரமை

உண்டாகும். அது போன்ற பிரமையில் முந்திரி, பாதாம், அக்ரூட் முதலியவற்றை மிஷின் மாதிரி அரைத்து முழுங்குகிறவர்களைக் குணசீலன் பார்த்ததுண்டு.

அதே மனநிலை, வைரவனுக்கும் அவனுடைய தாயாருக்கும் ஏற்பட வேண்டும் என்று அவன் விரும்பினான்.

அதற்காகவே, அன்னத்தாயும் அவள் மகனும் வந்ததும் ,உண்ணும்படி அருகில் வைக்க ஏற்பாடு செய்துவிட்டுச் சற்றுத் தாமதமாகவே அறைக்குள் சென்றான்.

அவன் எதிர்பார்த்தது போலவே எல்லா உணவு அயிட்டங்களும் கிட்டத்தட்டத் தீர்ந்து போயிருந்தன.

“அடடா! கொஞ்சமாக வைத்துவிட்டார்கள் போல இருக்கிறதே!” என்று வருத்தப்பட்டவன், பணியாள் ஒருவனை அழைத்து, எல்லாவற்றிலும் இன்னும்  ஒரு தட்டு கொண்டு வரச் சொன்னான்.

“ஹிஹிஹி பரவாயில்லை.” என்று சொன்னாலும், அம்மா பிள்ளை இருவருமே தட்டுகளை வேகமாகக் காலி செய்வதைப் பார்த்துவிட்டு,இன்னும் ஒரு செட்டுக்கும் ஆர்டர் கொடுத்தான் குணசீலன்.

அவர்கள் உண்ண உண்ணப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, உள்ளூர ஏமாற்றமாக இருந்தது.

முதலாவதாக, என்ன யோசித்தும், அவனுக்கு அன்னத்தாய் பற்றிச் சிறிதும் ஞாபகம் வர முறுத்தது.

அவ்போது அவனுக்கு மிகச் சிறிய வயது, நினைவு இருப்பது கடினமே என்றாலும், ஓர் ஆண்டு காலம், தாதி வேலை செய்து கூடவே இருந்த ஒருத்தியை இனம் காண முடியாமல் போனதை, அவனால் வேசில் ஏற்க முடியவில்லை.

ஆனால் அதன் காரணம், அவனது சிறு வயதால் வந்த மறதி பட்டுமல்ல. அன்னத்தாயும், அவ்வளவு தூரம் வீங்கிப் போயிருந்தாள்.

மீண்டும் வந்ததிலும் பாதி காலி செய்த பிறகுதான், அன்னத்தாய்க்கும் அவள் பிள்ளைக்கும் வந்த விஷயம் பற்றிய நினைவு வந்தது.

தாய் அறியாமல் குணசீலனிடம் கண்ணைக் காட்டிவிட்டு, வைரவன் பேசத் தொடங்கினான்.

“நேத்தே நான் என்னா சொன்னேன்ப்பா? சொன்னபடி எங்க அம்மாளைக் கூட்டியாந்திட்டேன். அப்பாலே நாம்ப பேசி

முடிச்சோமானாக்க, அம்மா கையெழுத்துப் போட வந்திடும். அப்ப நாங்க கௌம்பவா? அம்மா, கௌம்பு போவலாம்.” என்று தாயைக் கூட்டிச் செல்ல, வைரவன் அவசரப்பட்டான்.

“பொறுப்பா.. எப்படி உன் அம்மா கடையை விற்கிறாளோ, அதே போல, நானும் என் தாயாருக்காகத்தான் எல்லாம் செய்வது. அவர்களும் வந்துவிடட்டும். அப்புறமாகப் போகலாம்.” என்று கூறி அவர்களை நிறுத்திவிட்டு, சுகந்தினிக்கு ஒரு மிஸ்டு கால் கொடுத்தான்.

முன்பே பேசி வைத்திருந்தபடி மரகதத்தை அழைத்துக்கொண்டு, சுகந்தினி அங்கே வந்து சேர்ந்தாள்.

பார்வையில் கூர்மையுடன், இரு சாராருக்கும் இடையே குணசீலன் அறிமுகம் செய்து வைத்தான்.

ஆனால், அவனது பெருத்த ஏமாறாமாக, மரகதம், அன்னத்தாயை கொஞ்சமும் அடையாளம் கண்டு கொள்ளவே இல்லை.

எப்போதோ பார்த்த முகமோ என்கிற சிறு யோசனை கூட இல்லாமல், முதல் முதலாகப் பார்க்கம் ஒருவரை அறிமுகம் செய்த மாதிரி, “வணக்கம்.” மட்டும் சொல்லிவிட்டு, மரகதம் உட்கார்ந்தாள்.

# அத்தியாயம் - 10

பொதுவாக மரகதத்தின் பார்வையில் ஓரளவு வெறுமை இருக்கும். நன்கு அறிந்தவர்களான வாகதீசர் தம்பதி, சுகந்தினி, டாக்டர் மயில்வாகனன் என்று சிலரிடம்தான் அறிந்து பேசும் பாவனை தெரியும். இப்போது குணசீலனும் இவர்களுள் ஒருவனானான். எப்போதுமே, கண்ணன் ரொம்பவும் ஸ்பெஷல்!

மற்றபடி தினம் பார்க்கிற கடைக்காரர், காய் வண்டிக்காரர், நர்ஸ், மற்ற பணியாளர்கள் எல்லோரிடமுமே பொதுவான ஒரு முறுவலோடு பேசுவாளே தவிர, இந்த முகம் அவளுக்குப் பழக்கமானது என்பது போல இராது.

சுற்று வட்டாரத்தில் ஓரளவு அவளது நிலை தெரிந்திருந்ததால், யாரும் அதைத் தவறாக எடுத்துக் கொள்வதும் கிடையாது.

மரகதத்தின் முகம் யாரும் வெறுக்கக் கூடியதும் கிடையாது. அவளால் யாருக்கும் பிரச்சினைகள் வந்ததில்லை. எனவே, எல்லோருமே அவளை இருக்கிறபடி ஏற்றுக்கொள்வதே  வழக்கம்.

குணசீலன் ஏற்பாடு செய்திருந்த தனி பார்லருக்குள் வந்த மரகதத்தின் முகத்தில் அன்னத்தாயைப் பார்த்தபோது எந்த பிரதிபலிப்பும் இல்லாது போனது குணசீலனுக்கு ஏமாற்றமளித்தது.

ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல், “உட்காருங்கம்மா. குளிர்பானம் குடிக்கிறீர்களா?” என்று பெற்றவளை வசதியாக உட்கார வைத்து உபசாரம் செய்வதில் தன் ஏமாற்றத்தைப் பிறர் அறியாமல் மறைத்துக் கொண்டான்.

இந்த முயற்சியில் , அவன் மற்றதை எதையும் நன்கு கவனிக்க இயலாது போயிற்று. ஆனால், இது போன்ற நிலையையும் எதிர்பார்த்தே வந்த சுகந்தினியின் கவனம் முழுமையாக அன்னத்தாயின் மேல் இருந்தது.

மரகதத்தைப் பார்த்ததும் பேயைக் கண்டது போல விழிகள் பிதுங்க  அவள் பயந்து விழித்ததும், உடலின் சக்தி வடிந்துநிட்டதைப் போல, அவள் மறுபடியும் சோஃபாவில் விழுந்ததும், கண்களை ஒரு தரம் இறுக மூடி ஒரு பெரிய மூச்சை எடுத்த பின்னரே . . அப்போதும் எச்சரிக்கையோடு திறந்ததும், எதுவுமே அவளது கண்களைத் தப்பவில்லை.

ஆக, அவர்களது ஊகம் முழுதும், நூறு சதவீதமாகச் சரியே! சதியைத் திட்டமிட்டுச் செய்து முடித்தவள் இதே அன்னத்தாயேதான். மற்றபடி, இந்தப் பயமும் சோர்வும் கவனமும் திடுமென வரத் தேவையில்லை.

ஆனால்  அவள் என்ன செய்து எப்படி மரகதத்தை அவளது சதிக்குள் விழச் செய்தாள் என்பதை எப்படி, யார் மூலம் அறிவது? மரகதம் பிள்ளையை விட்டுவிட்டுத் தானாகவே வெளியே போயிருக்கிறாளே!

விவரத்தை இந்த அன்னத்தாயே மனம் இரங்கிச் சோன்னால் தான் உண்டு! ஆனால் குற்றவாளியான அவள், அவ்வளவு எளிதாக வாயைத் திறப்பாளா? அவ்வளவு கொடூரமாகத் திட்டமிட்டுத் தாயையும் பிஞ்சு மகனையும் பிரித்த மகாபாவி!

அவர்கள் போட்ட சோற்றையே சாப்பிட்டுக்கொண்டு, அந்தக் குடும்பத்தையே சின்னாபின்னமாக்கிய வல்லரக்கி!

மிகவும் சிரமப்பட்டுக் கோபத்தை அடக்கிக்கொண்டு, சுகந்தினி சாதாரணக் குரலில் போசினாள்.

குணசீலனை அவசரமாக ஒரு தரம் பார்த்துவிட்டு, "எங்கள் ஆன்ட்டிக்கு ஒரு விபத்தில், கொஞ்சம் மனநிலை கெட்டுவிட்டது. சிகிச்சை நடக்கிறது. மருத்துவர் சொன்னபடிதான் வெளியூருக்குக் கூட்டிவந்தோம். சீக்கரமே நல்ல நினைவு திரும்பிவிடும் என்று என்றார் டாக்டர்." என்று சற்றுப் பெருமையாகக் கூறினாள்

அதற்கு மேல் குணசீலன் தொடர்ந்தான். "அம்மாவுக்கு நல்ல நினைவு திரும்பியதும், என் அம்மாவுக்கு எதிராகச் சதி செய்தவர்கள் அத்தனை பேரையும், என்ன மாதிரிப் பழி வாங்கப் போகிறேன், தெரியுமா? அம்மா மட்டும் நன்றாக ஆகி, அந்த ஆட்களை அடையாளம் காட்டட்டும்! ஏண்டா. பிறந்தோம் என்று, அவர்களைத் தவியாய்த் தவிக்க வைத்து விடுகிறேன். " என்று ஆவேசம் காட்டினான்..

யாரைப் பற்றியோ பேச்சு நடப்பது போல மரகதம் அமர்ந்திருக்க, அன்னத்தாயும் அதற்குள் சமாளித்துக் கொண்டாள் போலத் தோன்றியது.

ஏனெனில் விற்கும் விலை பற்றிப் பேச வந்தவள், அதையுமே மகன் முதலில் வாயைத் திறக்கட்டும் என்று பேசாதிருந்தவள், இப்போது கடை விற்பனையை அடியோடு ஒதுக்கி, "சசரி தம்பி. நீங்க அம்மாளுக்கு வேண்டியது பார்த்து செய்யுங்க. இப்ப நாங்க கெளம்புகிறோம்." என்று

எழுந்தாள்.

எழும் போதுமே, மரகதத்துக்கு அவளது முகத்தைச் சரியாகப் பார்க்க இயலாதபடி முடிந்தவரை முகத்தைத் திருப்பிக்கொண்டு எழுந்தாள்.

ஆனால் தாயின் முன் கதை அறியாத மகனோ, “இன்னாம்மா கௌம்புறே? உட்காரு. சாருக்கு உன் வாயாலே ரேட் சொல்ல வேணுமாமே. உன்கிட்டே சொல்லித்தானே கூட்டியாந்தேன்? இப்படி இடை வழியிலே கிளம்பினா எப்படி?” என்று, அன்னத்தாயின் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைக்க முயன்றான்.

வரும்போது நடக்க இயலாதவள் போல மெதுவாக அன்ன நடை நடந்து வந்த அன்னத்தாய், இப்போது வியக்கத்தக்க வலுவுடன், மகனின் கையை உதறினாள்.

மரகதத்துக்கு நேர் முதுகு காட்டி நின்று, குணசீலனுடன் பேசினாள். “பாருங்க தம்பி, என் பய என்ன ரேட் சொன்னாலும் எனக்குச் சரிதான். மெய்யாலும் நீங்க வாங்குகிறதானா, அதே பெரகாரம் பத்திரம் போட்டுரலாம். இப்ப . .இப்ப நான் மாத்திரை போடணும். அதுக்கு நேரமாச்சுது. போறேன்.” என்றவள், அதற்கு மேல் மகனையோ மற்றவர்களையோ ஏறிட்டும் பாராமல், முகத்தைத் திருப்பிக்கொண்டு வேகமாக அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட்டாள்.

குணசீலனுக்கும் சுகந்தினிக்கும் கொஞ்ச நஞ்ச சந்தேகம் ஏதேனும் இருந்திருந்தால், அது இப்போது அடியோடு தீர்ந்தது. முழுக் குற்றவாளி அன்னத்தாயே! ஆனால் மரகதத்தைப் பொறுத்தவரையில், மகன் கொண்டிருந்த நப்பாசை பயனற்றுப் போயிற்று.

இந்த விவகாரம் பற்றி எதுவும் அறியாத வைரவனுக்கு ஒரு புறம் திகைப்பாக இருந்தாலும், தனக்கு வரக் கூடிய ஆதாயத்திலேயே குறியாக, “பார்த்தீங்களா, சார்? நான் சொன்னாப்புலதானே, எங்க அம்மாளும் சொன்னா? என் பேச்சுக்கு அட்டியே கெடையாதுன்னுட்டா. இனிமே என்ன சாரு? நாளைக்கே கூடப் பத்திரத்தைப் பதிவு செஞ்சிரலாம். என்னா சொல்ற?” என்று உற்சாகத்துடன் கேட்டான்.

சுகந்தினியை ஒரு தரம் பார்த்துவிட்டு, “நாளைக்கு . . கொஞ்சம் கஷ்டம். பதிவு பண்ணுகிற வாசகத்தை எங்கள் வக்கீல் படித்து ஒப்புதல் கொடுக்க வேண்டும். . . . என்ற குணசீலனின் பேச்சில் வைரவன் குறுக்கிட்டான்.

“இன்னா சாரு, பேச்சு மாறுகிறே? எங்கம்மாளு சொன்னா, மறா

நாளே பத்திரம் போட்டுரலாம்னு சொல்லிட்டு, இப்ப ஜகா வாங்கறியே! இனமே, உன் வைக்கோலு என்னிக்கு வந்து, என்னிக்குப் பத்திரம் பதிவு பண்ணி, நீ எப்ப பணம் தருவே?” என்று கோபமாகக் கேட்டான்.

வக்கீலுக்கு செல் மூலமாகவே விவரம் அனுப்பிக் கேட்டுவிடலாம்., அடுத்த நாளே பதிவு பண்ணி விடலாம் என்று அவனுக்கு உறுதி சொல்லும் விதமாக, அன்றும் மறுநாளும், அங்கேயே தங்கப் போவதையும் வைரவனிடம் தெரிவித்தான் குணா.

“பார், ஒரு நாளைக்கு எவ்வளவு செலவு? என் தாயாருக்காக இன்னும் ஓர் அறை! அம்மாவுக்குத் துணை வந்தவளுக்காகவும் ஒரு ரூம்! செலவை நினைத்துப் பார். எல்லாம் வேலை முடிவதற்காகத்தானே?” என்று அவனைக் குணா தாஜாப் பண்ணி முடிக்கும் வேளையில், இன்னொன்று நிகழ்ந்தது.

அறைக்கு வெளியே ஒரு சிறு களேபரம் நடப்பது கேட்டது.

“இல்லை., நான் உள்ளே போவேன் .” என்று யாரையோ பிடித்துத் தள்ளிவிட்டு, ஆத்திரத்துடன் உள்ளே புகுந்து ஒருத்தி கத்தினாள். “

“என்னா? மிந்திரி பாதாம் அல்லாம் கொடுத்தாங்களாமே! என்னை விட்டுட்டு, நீயும் அம்மாளும் மட்டும் எப்படித் தின்னலாம்? ஏண்டா, நீயெல்லாம் ஒரு தம்பியாடா? தூத்தேறி! தின்னிப் பசங்க!”

பெரிய தொண்டையில் ஓங்கிக் கத்திய, சுமார் முப்பதுகளில் இருந்த அந்தப் பெண்ணின் முகம் எங்கோ பார்த்த மாதிரி குணசீலனுக்குத் தோன்றியது.

யாராக இருக்கும் என்று அவன் யோசித்தது ஒஒரு சில வினாடிகளே இருக்கும்.

அதற்குள் பாய்ந்து வந்து, அந்தப் பெண்ணின் கையைப் பற்றி, “ அன்னத்தாய்! அன்னத்தாயீ வந்துவிட்டாயா? நகையெல்லாம் கிடைத்து விட்டதா? அந்தத் திருடன் தந்துவிட்டான் தானே? சீக்கிரமாகக் கொடு. அத்தைக்குத் தொலைந்தது தெரியுமுன், உள்ளே வைத்து விடலாம். அன்னத்தாயி, ப்ளீஸ், நகைகளைச் சீக்கிரம் கொடும்மா!” என்று மரகதம் பதறித் தவித்தாள்.

அந்தப் பெண்ணின் முகம் பரிச்சயமாக இருந்தது ஏன் என்று குணசீலனுக்கு அந்த வினாடி புரிந்தது.

இவள் அன்னத்தாயுடைய மகள். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தாயிருந்த அதே தோற்றம் இப்போது மகளுக்கு வந்திருந்தது.

சற்று முன் வந்திருந்த வீங்கி வெடிக்கப் போவது போல இருந்த அன்னத்தாயின் இன்றையத் தோற்றம், அவனைப் போலவே, மரகதத்துக்கும் புரியாது போனதில் வியப்பதற்கு எதுவும் இல்லை.

அவனுக்கு மிகச் சிறிய வயது என்றால், அன்னைக்கு மந்தமாகிப் போன மூளை ! இந்த மூக்கு, வாய் அவளதாக இருக்குமோ என்று யோசித்து முடிவு பண்ணத் தெரியாத நிலை! கிட்டத்தட்ட மரகதத்தின் மனதில் இருந்த அன்னத்தாயின் அந்த வயதுத் தோற்றத்துடன் மகள் வந்து நின்றதும்  தாய்தான் என்று எண்ணிவிட்டாள்.

ஆனால் யோசித்துக் கொண்டிருக்க அவகாசம் இல்லாமல், "அய்யய்யோ பைத்தியம். என்ன விடு. என் கிட்ட நகையுமில்ல, ஒண்ணுமில்ல. விடு . ." என்று மரகதத்தை உதறித் தள்ள முரட்டுத்தனமாக அந்தப் பெண் முயல, "ஏய் பொறு.  ஆன்ட்டியைக் கீழே தள்ளி விட்டுவிடாதே." என்று சுகந்தினி மரகதத்துக்கு உதவ முன்வர, குணசீலனும் அருகே சென்று, அதில் தலையிட்டான்.

தாயின் முகத்தைத் தன்புறம் திருப்பி, "அம்மா, அவளை விடுங்கள். இவள் அந்த அன்னத்தாய் இல்லை. அவள் மாதிரியே இருக்கும் இன்னொருத்தி. இப்போது இவளை விட்டுவிடுங்கள். அந்த அன்னத்தாயை எப்படியாவது கண்டுபிடித்துக் கூட்டி வந்து, நகைகளை உங்களிடம் தரச் சொல்லுகிறேன். முதலில் இவளை விட்டு விடுங்கள் " என்று அமர்ந்த  குரலில் தெளிவாகக் கூறினான்.

மகனின் குரலும் வார்த்தைகளும் மரகதத்தின் மனதை எட்டி, அன்னத்தாயுடைய மகளின் கைகளை அவள் விட்டுவிட, மற்றவள் வேகமாக விலகிப் போனாள்.

ஆனால் அவளோ, அந்த வைரவனோ ஒரேயடியாக அறையை விட்டுப் போவிடவில்லை.

குணசீலனின் பேச்சில் வந்த அன்னத்தாயும் நகைகளும் என்ற வார்த்தைகள் இருவர் கால்களையும் கட்டிப் போட, அறை வாயிலில் நின்று, "அது என்னா சார் நகைங்க? யாரோடது? அந்த நகைங்க எங்கே இருக்குது?" என்று ஆர்வமாகக் கேட்டனர்.

இருவரின் கண்களிலும் காணப்பட்ட ஒளி, ஒன்றையே கூறியது. இதில் தங்களுக்கு ஆதாயம் கிடைக்குமா என்ற ஆசையை!

அவர்களது முகங்களையும் பார்த்த குணசீலன் தோளைக் குலக்கினான். "அதை நீங்கள் உங்கள் தாயிடம் கேளுங்கள். இப்போது போகிறீர்களா? இந்தப் பார்லரைக் காலி பண்ண வேண்டிய நேரம்

ஆயிற்று.” என்றவன் அதற்குமேல்  அவர்களைத் திரும்பியும் பார்க்கவில்லை.

“அம்மாவை,. அவர்கள் அறைக்குக் கூட்டிப்போ, சுகிம்மா. நான் அறையைக் காலி செய்து சாவி கொடுத்துவிட்டு வருகிறேன்.” என்று அவன் உட்புறம் திரும்பிக் கொள்ள, ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட அண்ணனும் தங்கையும், அதற்கு மேல் நின்று பயனில்லை என்று உணர்ந்து, அங்கிருந்து கிளம்பிச் சென்றனர்.

அவர்கள் சென்றுவிட்டார்கள் என்று பின்னோடு சென்று பார்த்து நிச்சயமாகத் தெரிந்தபின், மரகதத்தை அறைக்குக் கூட்டிப்போனார்கள்.

நடந்த நிகழ்ச்சியினால் நேர்ந்த அதிர்ச்சியோ என்னவோ, சற்று சோர்ந்து தெரிந்த மரகதம் அப்படியே படுத்துத் தூங்கிவிட்டாள்.

அறை வாயில் ஓரமாக நாற்காலிகளை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்து,  குணசீலனும் சுகந்தினியும் தணிந்த குரலில் பேசிலாயினர்.

“ஆன்ட்டி அசந்து போனார்கள், குணா. இன்னும் அவர்கள் மனது கஷ்டப்படும்படி எதுவும் வேண்டாமோ என்றிருக்கிறது.” என்றாள் சுகந்தினி.

“இல்லை. எனக்குமே அப்படித்தான் தோன்றுகிறது. இனி அம்மா வரை அவர்கள் நெருங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். என்னமாகத் தவித்துப் போனார்கள்? அம்மா இப்படியே இருந்தாலே போதும்போல இருக்கிறது, சுகி.” என்று குரலில் வலியோடு கூறினான் அவன்.

“பின்னே என்ன ஐடியா, குணா? இன்னும் ஏன் இங்கே தங்குகிறோம்? “

“நடந்தது தெரிவதற்காக. அதற்காகவே குட்டையைக் கலக்கி விட்டிருக்கிறேன், சுகந்தி. அந்தக் குடும்பத்து புத்திக்கு ஏதாவது வெளியே வரும். வருவதை உரியவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறேன். உனக்கும் வேலை இருக்கிறது.” என்று அது பற்றி எடுத்துச் சொன்னான்.

“கவனம் சுகந்தினி. ஒரு வினாடி கூட அசட்டையாக இருந்து விடக் கூடாது. மற்றவர்களிடமும் சொல்லி விட்டேன். “  என்றான் குணசீலன்.

மௌனமாகத் தலையாட்டினாள் சுகந்தினி.

அன்றிரவில் முக்காடணிந்த ஓர் உருவம் வேகமாக நடந்து அநத ஹோட்டலின் பின்புறத்துப் படிகளின் வழியே வேகமாக ஏறியது.

அறைகளைச் சுத்தம் செய்யும் பணியாட்கள் சென்று வருவதற்கான படிகள் அவை. சற்றுப் பழைய காலத்தில் இருந்தே பெயர் பெற்ற ஹோட்டல். கீழே உணவறையின் வழியே குளியலறை சுத்தம் செய்யும் பொருட்களோடு அந்தப் பணியாளர்கள் செல்வதை விரும்பாமல், இப்படிப் படிக்கட்டுகள் அமைத்திருந்தார்கள். பணத்தைக் கொட்டிக் கொடுத்து அங்கே தங்குகிறவர்களுக்கு அப்படிப் படிகள் இருப்பதே தெரிந்திராது.

ஹோட்டலுக்கு மளிகை சாமான் சப்ளை செய்ததன் பலனாக, அவளுக்குத் தெரிய வந்த விஷயங்களில் இதுவும் ஒன்று. இந்த வழியே சில ரகசியப் பரிமாற்றங்களும் நடந்தது உண்டு. கணக்கின்றிக் கூடக் கொஞ்சம் காசு கிடைத்தால் யார் வேண்டாம் என்று மறுப்பார்கள்?

சத்தமின்றிப் படியேறிய உருவம் ஒவ்வோர் அறையாக எண்ணிக்கொண்டே சென்று , ஓர் அறையின் பின்புறத்து ஜன்னலின் மூலம் கையை உள்ளே நுழைத்து, பால்கனிக் கதவின் குமிழைத் திருப்பி மெல்லத் திறந்தது.

உள்ளே சென்று பார்த்தால், விடி விளக்கின் மெல்லிய ஒளியில் அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

மண்டையில் போட்ட அடியில் செத்துத் தொலைந்து போனாள் என்று நினைத்தாக்க, பாவி, மறுபடியும் முழுசா வந்து நிக்கிறாளே!

அதுவும், அதே வீட்டு எசமானியாய்! நல்லவேளையாக மண்டையில் போட்ட போடில், மூளையேனும் கலங்கிப் போனது! இல்லாவிட்டாக்க, அவளைப் பார்த்ததுமே கண்டுபிடிச்சு, அப்புறமா இந்த அன்னத்தாயின் நிலைமை என்ன ஆயிருக்கும்?!

ஆனாலும், இன்னும் ஆபத்து முழுசாத் தீரலை.

மகளைப் பாத்து அன்னத்தாயின்னு கூப்பிட்டிருக்கா. இன்னும் கொஞ்சம் தெளிஞ்சு, தாயையே அந்தப் பேர் சொல்லிக் கூப்பிட எம்புட்டு நாளாவும்?

இவ உசிரோட வாள்றதே ஆபத்து! படுக்கயிலேயே செத்துக் கெடந்தா யாருக்கு நட்டம்?

கடவுள் அறிய அவளுக்கு இல்லை!

அவளது ஜோக்கில் அவளுக்கே சிரிப்பு வந்தது. அடக்கிக்கொண்டு வந்த வேலையில் முனைந்தாள்.

மெல்லப் படுக்கையை அணுகி, பக்கத்தில் கிடந்த இன்னொரு

தலையணையை எடுத்து, உறங்கிக் கொண்டிருந்தவளின் முகத்தில் வைத்து அழுத்த முயன்ற அந்த வினாடியில் பளீரென்று ஓர் ஒளி தோன்றி தலையணையும் கையுமாகக் குனிந்து நின்றவளைத் திகைக்க வைத்தது.

"அசையாதே. சுட்டுவிடுவேன்" என்ற கட்டைக் குரலில் அவள் அதிர்ந்து பார்த்தால், நிஜமாகவே கையில் துப்பாக்கியுடன் ஒரு கட்டைத் தடியன் நின்றான்.

நீளத் திரையை விலக்கிக்கொண்டு இன்னும் இரண்டு பேர்.

அதிலே ஒருத்தன் ஃபோட்டோ வேறே பிடித்துக்கொண்டு . .. அய்யோ சாமி!

தீச் சுட்டாற்போலக் கையில் இருந்த தலையணையைக் கீழே போட்டால், "பரவாயில்லை . இனிமேல் தலையணையைப் போட்டுவிடு. ஏற்கனவே சரியான போசில் படம் எடுத்தாயிற்று!" என்று . . .அறையின் வாசல் பக்கம் இருந்து அந்த . . அந்தப் பயல் குணசீலன்!

தன் மேல் சந்தேகம் வரக் கூடாது என்பதற்காக, ஒரு முளு வருசம், பள்ளிக்கூடத்துக்கும் வீட்டுக்கும் அவள் தூக்கி அலைந்த பையன்.

அந்த நன்றியே இல்லாமல், இங்கே வரை நூல் பிடித்து வந்துவிட்டானே! கூட இளசா ஒரு பொட்டச்சி வேறே!

இவளைத் தூங்கப் போட்டிட்டு, அந்த ரெண்டும் ஒண்ணாக் கூத்தடிச்சிக்கிட்டுக் கிடக்கும். வந்த சுவடு தெரியாமச் சுளுவா வேலையை முடிச்சிட்டுப் போயிடலாம் என்று நினைச்சு வந்தாளே!

பாவிங்க. அவளுக்கு வலை விரிச்சிட்டில்ல காத்தில்ல கிடந்திருக்காங்க!

போலீஸ் அடி! செயில் களி! மாடி வீடும் கடைகளுமா மதிப்பா வாளுகிற இடத்திலே அவமானம்! அவ கிட்டயே கையேந்துற சொந்தக்காரக் களுதைக கைகொட்டிச் சிரிக்குமே!

ஒவ்வொன்றாக எண்ணி அன்னத்தாய் நடுங்கிக் கொண்டிருக்க, அடுத்த அறைக்கு அவளை இழுத்துக் கொண்டுபோய் ஒரு நாற்காலியோடு சேர்த்துக் கட்டிப் போட்டுவிட்டு மற்றவர்கள் விலகிப் போனார்கள்.

"அம்மா அறை மீது ஒரு கண் இருக்கட்டும்" என்று சொல்லி அவர்களைக் குணசீலன் அனுப்பி வைத்தான்.

கட்டு இறுக்கமாக இருக்கிறதா என்று பரிசோதித்தவாறு, "என்ன

கண்கட்டு வித்தை போல எல்லாம் எப்படி நடந்தது என்று ஆச்சரியமாக இருக்கிறதா?” என்று கேட்ட குணசீலன் இன்னோர் இருக்கையை இழுத்துப் போட்டுக்கொண்டு, அவள் எதிரே அமர்ந்தான்.

““நீயும் உட்கார் சுகந்தி. அதற்காகத்தான் உன் அறையில் இருந்து இன்னொரு நாற்காலியை இங்கே கொணண்டு வந்து போடச் சொன்னேன்.” என்று அவன் கூற, அவன் கூட வந்தவளும் வசதியாக அமர்வதை வெறித்துப் பார்த்தாள் அன்னத்தாய்.

“கஷ்டமாக இருக்கிறதா? என்ன செய்வது? தினை விதைத்தவன் தினையை அறுப்பான். வினையை விதைத்தவன் அதைத்தானே அறுத்தாக வேண்டும்? “ என்றான் குணசீலன் ஏளனமாக.

“இன்னமும் செப்பிடு வித்தை எப்படி நடந்தது என்று தெரியவில்லை அல்லவா? கேட்டுக்கொள்.!” என்று அந்த விவரம் சொல்லத் தொடங்கினான்.

“இங்கே நாலு பேர் இருந்தார்களே, அவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள்தாள். என்  தொழிற்சாலைப் பாதுகாப்பைக் கவனிக்கும் நிறுவனத்தைச் சார்ந்தவர்கள்.

“பத்து நாள் முன்னாலேயே ஒரு தரம் இங்கே வந்திருந்தேன். இது எனக்குப் பழக்கமற்ற ஊர். அதிலும் நீ இருபது ஆண்டுகளுக்கும் மேலாக வேரூன்றி இருக்குமிடம் என்பதாலேயே, யார் என்று காட்டாமல் வந்ததோடு, சில செக்யூரிடி ஆட்களையும் இங்கே வந்து தங்க வைத்திருந்தேன்.

“இந்த ஹோட்டலைத் தேர்ந்தெடுத்தது கூட, இங்கே நீ மளிகைச் சாமான் போடுவது தெரிந்துதான். உன்னைப் பற்றி, இன்னும் விவரம் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

“நான் அனுப்பிய ஆட்கள் எனக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லாதது போலவே நடந்து கொண்டாலும், என்னைச் சேர்ந்தவர்களை யார் நெருங்கினாலும், அவர்களைக் கவனத்துடன் கண்காணித்தார்கள்.

“முதலில் உன் மகனை. அப்புறம் இன்று உன்னை. உன் மகளை . . .

“இன்று, இப்போது இரவில் நீ கிளம்பியதுமே எனக்குத் தகவல் வந்துவிட்டது. அதனாலேயே, ரொம்பவும் தயாராக இருந்தோம்.” என்று முடித்தான்.

“உன் குற்றங்களுக்கு நேரடி சாட்சி என் அம்மாதான். இன்று அவர்களது மனநிலை சற்று சரியில்லாவிட்டாலும், அது

தெளிந்துவிட்டால், நீ அடியோடு தொலைந்து போவாய். எனவே அம்மாவை அழிக்க நீ கட்டாயம் முயற்சிப்பாய் என்று நான் ஊகித்தேன். ஒரு தரம் செய்து பழகிய குற்றம் என்பதால், சட்டென அதற்குத் துணிவாய் என்று எதிர்பார்த்தேன். நீயும் அதன்படியே வந்து மாட்டிக்கொண்டும் விட்டாய். இப்போது . . .” என்று நிறுத்தினான் குணசீலன்

தொடர்ந்த சில கணங்கள் அன்னத்தாயையே பார்த்தபடி, பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

திட்டமிட்டுப் பிடித்து விட்டானே என்ன செய்யப் போகிறானோ என்று கலங்கிய அன்னத்தாய்க்கு அவன் பேசாமலே இருக்கவும் ஏதேதோ பயங்கரங்களை எண்ணி உள்ளத்தோடு உடலும் நடுங்கலாயிற்று.

சற்று நேரத்துக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாமல், “தம்பீ . . இல்லை சிசின்ன எசமான், என்னை மன்னிச்சு விட்டுடுங்க. அந்த நகைங்க என்கிட்டே இல்லை. ஆனாலும் வீடு, கடை இன்னும் இருக்கிற எல்லாத்தையும் வித்து, அந்தக் காசை அப்படியே முழுசாக உங்க கிட்டே கொடுத்து விடுறேன். தயவு பண்ணுங்க எசமான் . . “ என்று குரல் நடுங்கக் கெஞ்சினாள்.

யோசனையாக அவளைப் பார்த்தான் குணசீலன்.

“அந்த நகைகள் இருந்தால் இன்றைக்குப் பல கோடி ரூபாய் மதிப்புள்ளவை. ஆனால், நீ தரக் கூடிய இந்தச் சின்னக் காசை வைத்து நான் என்ன செய்ய முடியும்? உன் சொத்துக்கள் நகைகளின் மதிப்பில் பத்தில் ஒரு பங்கு கூடப் பெறாது, தெரியுமா? ஆனாலும், உன் பணம் எதுவும் எனக்கு வேண்டாம். உன்னையும் மன்னிக்கிறேன். அதற்குப் பதிலாக . . .” என்று நிறுத்தினான்.

# அத்தியாயம் -11

அன்னத்தாயை மன்னிப்பதாகக் குணசீலன் சொன்னது, அங்கிருந்த இரண்டு பெண்களுக்குமே அதிர்ச்சிதான்.

அதிலும் சுகந்தினிக்குக் கொதிப்பும் கூட.  அதை அப்படியே கொட்டினாள். “குணா நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? இவள் உங்கள் தாயாருக்கு பயங்கரமான அநியாயம் செய்தவள். முன்பும் தலையில் அடித்துக் கொல்ல முயன்றவள். இப்போது இரண்டாம் முறையும் அதையே, ஆன்ட்டியைக் கொலை செய்யவே முயன்றிருக்கிறாள். குற்றத்தை நிரூபிக்க ஆதாரமும் நம்மிடம் இருக்கும்போது, இவளை எதற்காக மன்னிப்பது? வேண்டாம்! அது நியாயமே கிடையாது, குணா! முக்கியமாக உங்கள் அம்மாவுக்கு! “ என்று படபடத்தாள்.

எதையும் மறுத்துப் பேச மாட்டாமல் , தொலைந்தோம் போல இருக்குதே என்று அன்னத்தாய் நம்பிக்கை இழக்கையில் குணசீலன் பேசினான்.

“அம்மாவுக்காகத்தான் சுகி.” என்றான் அமர்ந்த குரலில்.

“குணா?”

“ஆமாம். இவள் செய்த சதியால் என் தாயின் பெயருக்கு ஒரு களங்கம் கற்பிக்கப் பட்டது. மிகச் சிறிய ஓர் அணுவளவு கூட உண்மை இல்லாத களங்கம். அதை இவள் வாயால்தான் தீர்க்க வேண்டும். “என்று சுகந்தினியிடம் கூறிய குணசீலன் மறுபடியும் அன்னத்தாயிடம் திரும்பினான்.

“இதோ பார். உன்னால், இருபத்தைந்து ஆண்டுகள் என் அம்மா கஷ்டப்பட்டு இருக்கிறார்கள். அப்போது என் அப்பா எழுதி வைத்த சில குறிப்புகள் இருக்கின்றன. அம்மா கிடைத்த பிறகு, அவர்கள் மூலமாய் . . . ஹிப்னாட்டிசம், மனோவசியம் என்று சினிமாக்களில் பார்த்திருப்பாயே, அப்படி அறிந்து கொண்ட உண்மைகள் இருக்கின்றன.

அதனால், நீ பொய் சொன்னால் உடனே தெரிந்துவிடும்.

“அப்படி இல்லாமல், உன் வாயால் நடந்த உண்மையைச் சொன்னாய் என்றால், அது என் நோக்கத்துக்குப் பயன்படும். ஆனால் நினைவிருக்கட்டும். என்னிடம் உள்ள குறிப்புகளுக்கு மாறான ஒரு பொய் உன் வாயில் இருந்து வந்தாலும், அப்புறம் உன் கதி அதோ

கதிதான். “ என்று, கடுமையான குரலில் அன்னத்தாயை எச்சரித்தான்.

வேறு வழியின்றித் தலையை உருட்டினாள் அன்னத்தாய்.

“உம் சொல்லு.” என்று செல்லை ஆன் செய்து அவளது பேச்சைப் பதிவு செய்யலானான் குணசீலன்.

பிள்ளை பார்ப்பதற்காக அன்னத்தாய் அந்தப் பெரிய வீட்டுக்கு வந்தபோது, குணசீலன் பிறந்து சில மாதங்கள் ஆகியிருந்தன.

குணசீலனுடைய தாயார் மரகதத்துக்குச் சற்று பலவீனமான மெலிந்த உடல் வாகு.

“அது . . “ என்று அன்னத்தாய் தயங்கவும், “எதுவானாலும் சொல்லு. ஆனால் நீ சொல்வது உண்மையாக இருக்க வேண்டும். நீ கேட்டது, உன் காதில் விழுந்ததைக் கூடச் சொல்லலாம். ஆனால் எதையேனும் இட்டுக்கட்டிச் சொல்வதானால் இரண்டு தரம் யோசித்துச் சொல்லு. பொய் என்று கண்டுபிடித்தேன் என்றால் தொலைந்தாய்.” என்று கடுமையான எச்சரிக்கையுடன் மேலே பேசச் சொன்னான் குணசீலன்.

இளக்கமற்ற அந்த முகத்தைப் பார்த்து கவனத்துடன் அவள் கூறலானாள்.

முதலாளி தனசீலனோடான மரகதத்தின் திருமணம், காதல் திருமணம். அதுவும் முழு அதிகாரத்தோடு குடும்பத்தை நடத்தி வந்த தாயாரின் எதிர்ப்பை மீறி நடந்தது. . மகனை விட முடியாமல் திருமணத்துக்கு ஒத்துக்கொண்ட போதும், பெரியம்மா ஒரு நாளும் மருமகளை மன்னித்தது இல்லை.

ஏதாவது ஒரு வகையில் மருமகளை நோகடித்து அதிலே மகிழ்வது பெரியவளின் பழக்கம். கருவைச் சுமந்திருந்த காலத்திலும் அதுவே தொடர, சரியான போஷாக்கு இல்லாமல் மருமகளின் உடல் நலிந்திருக்க வேண்டும் என்று செக்கப்புக்குப் போன இடத்தில் நர்சுகள் பேசி அன்னத்தாய் கேட்டதுண்டு.

அனாதையான தன்னை மணம் புரிந்து பெரிய இடத்தில் வைத்திருக்கும் கணவனிடமும் மரகதத்துக்கு மிகுந்த மரியாதையும் பயமுமே.

தனது எந்த வருத்தத்தையும் மரகதம் யாரிடமும் சொன்னது கிடையாது.

தனியாக இருக்கும்போது என்ன மட்டமாகப் பேசினாலும், மகன்,

மற்றவர் முன்னிலையில் மருமகளைக் கொண்டாடுவது போலப் பெரியம்மா காட்டிக் கொள்வாள்.

உறவினர் வீட்டு விழாக்களுக்குச் செல்லும்போது, பெரிய பட்டு உடுத்தச் செய்து, பெரிய நகைகளை அணியவைத்து, மருமகளை ஆசையாக நடத்துவது போல நடிப்பாள்.

அது போல மருமகளை அணியச் செய்வன எல்லாம் பெரிய பெரிய செட் நகைகள்! இரண்டு தலைமுறையாகக் குடும்பத்தில் இருப்பதாகப் பெரியம்மா பெருமையாகக் கூறுவதுண்டு. அவளே திருமணமாகி வரும்போது கொண்டு வந்தது எதெது என்று காட்டுவாள்.

“தனாதான் தரித்திரத்தைக் கூட்டி வந்துவிட்டான்” என்று அவள் கூறுவதையும் அன்னத்தாயே கேட்டிருக்கிறாள். அணிந்திருக்கும் நகைகளோடு உள்ளே போய்க் கண்ணைத் துடைத்துக்கொண்டு மரகதம் விழாவுக்குக் கிளம்புவதையும் பார்த்ததுண்டு.

வீட்டுக்குத் திரும்பி வந்ததுமே, மரகதம் நகைகளோடு பட்டுச் சேலையையும் அவிழ்த்து மடித்துக் கொடுத்து விட வேண்டும் என்பது நடைமுறையாக இருந்தது.

அப்போது அன்னத்தாய் வேலைக்கு வந்து சுமார் இரண்டரை ஆண்டுகள் ஆகியிருந்தன.

அதற்குள், மருமகள் நகைகளைச் சுருட்டிக்கொள்ள மாட்டாள் என்ற நம்பிக்கை ஓரளவு பெரியம்மாவுக்கு வந்திருக்க வேண்டும்.

அந்தச் சமயத்தில் சில உறவினர் வீட்டுத் திருமணங்கள். நாலு தொடர்ந்து வந்தன.

உடனுக்குடன் நகைகளை வாங்கிப பெரிய இரும்புத் தண்டவாளப் பெட்டிக்குள் வைத்து, மூடி, மறுபடியும் எடுத்துக் கொடுக்க மாய்ச்சல்பட்டு, நகைகளைத் திருப்பி வாங்காமல், இரண்டிரண்டு தரம் அணிந்துவிட்டுச் சேர்த்துக் கொடு என்று மாமியார் பணித்தாள்.

அதன்படியே . . .

சொல்லிக்கொண்டே வந்த அன்னத்தாய் சற்றே தயங்க, அவளது முகத்தின் எதிரே செல்லைத் தூக்கிக் காட்டி, மேலே பேசுமாறு குணசீலன் சைகை செய்தான்.

ஒரு பெருமூச்சுடன் , கூடவே அச்சத்துடன் அன்னத்தாய் தொடர்ந்தாள்.

நகைகளைப் பத்திரப்படுத்தி, மரகதத்துக்குப் பழக்கம் இல்லை. முதல் நாள் நகைகளைக் கழற்றி மேஜையின் மேலேயே வைத்திருந்தது, குழந்தை குணாவைத் தாயிடம் விட வந்த அன்னத்தாயின் கண்களில் பட்டது.

அப்போதைக்குப் போய்விட்டவள் ஆசை உந்தத் திரும்பி வந்து பார்க்கும்போதும், நகைகள் அங்கேயேதான் இருந்தன. சுற்றுமுற்றும் பார்த்தால் யாரும் இல்லை. ஆசையை அடக்க மாட்டாமல், சட்டென நகைகளை எடுத்துவிட்டாள். அவளது பொருட்கள் இருந்த சிறு பெட்டியில் மறைத்து வைத்தவளுக்கு உள்ளூரப் பயம் வந்தது. நகை காணாமல் போய்விட்டதாகப் போலீசில் புகார் செய்து, அவர்கள் வந்து வீட்டை சோதனை போட்டால்?

மாட்டிக் கொள்வோமே என்ற பயம் வந்தாலும், நகைகளைத் திருப்பிக் கொடுக்க அவளுக்கு மனம் வரவில்லை.

மாறாகச் சின்ன எஜமானி என்ன செய்கிறாள் என்று வேவு பார்த்தாள்.

மரகதம் சத்தமின்றித் தேடுவதையும் அஞ்சி விழிப்பதையும் பார்த்தாள். மாமியாரிடம் சொல்லப் பயம் என்று புரிந்தது.

அடுத்த விழாவுக்கு அணிந்து செல்ல, பீரோ திறந்து இன்னொரு செட் நகையை எடுத்து வைப்பதைக் கண்ட அன்னத்தாய்க்கு ஆசை பெருக, அவள் மனதில் திட்டம் ஒன்று உருவானது.

“ஏம்மா ஒரு மாதிரி பயந்த மாதிரி இருக்கிறீங்க?” என்று பரிவாகப் பேசி, நகை தொலைந்ததை மரகதத்தின் வாயாலேயே சொல்ல வைத்தாள். அவள் சொன்னதும், “அய்யோ, பெரியம்மா கொன்னே போடுவாகளே! .நகையோடே வான்னு வீட்டை விட்டே விரட்டிருவாகளே! நீநீங்க எங்க போவீக?” என்று பலவாறு பேசி, மரகதத்தின் மனதில் இன்னும் அதிகப் பீதியைக் கிளப்பிவிட்டாள்.

“மொதல்ல வீட்டுக்குள்ள நாமளே  தேடுவோம்.” என்று அங்குமிங்கும் அலைகககக்கழித்து மரகதத்தை இன்னமும் கலங்கடித்தாள்.

“இப்போதைக்கு ஒன்னும் நடக்காத மாதிரி அடுத்த செட்டை எடுத்துப் போட்டுக்குங்கம்மா.அப்புறம் திரும்பி வந்ததும், மறுபடியும் தேடுவோம்” என்று சொல்லிக் கிளம்பச் செய்தாள்.

சொந்த ஊர்க்காரனான முனியசாமியிடம் சொல்லி, ஒரு டாக்சி ஏற்பாடு செய்தாள்.

கல்யாண வீட்டில் மரகதத்தைத் தனியே அழைத்து, “சின்னம்மா,

அப்பு பாட்டி மடியிலே தானே இருக்கிறான்? நல்ல வேளை. அவங்க தேடுமுன்னே நாம் திரும்பி வந்திடலாம்.வாங்க." என்று அழைத்தாள்.

எங்கே என்று விசாரித்த சின்ன எஜமானியிடம், பெரிதாக ஒரு கதை சொன்னாள். "ஒரு பெரியம்மா என்னைக் கூட்டிப் போயி, உங்க நகையெல்லாம் ஒரு இடத்திலே இருக்குது. கையிலே இருக்கிற காசைக் கொடுத்தாத் திருப்பித் தருகிறதாக அந்த ஆள் சொல்லுறான் என்கிறா." என்றாள்.

"என்கிட்டே காசு இல்லையே!" என்றவளிடம், "என் கிட்டே இருக்குதும்மா. சம்பளக் காசை ஊருக்கு அனுப்ப எடுத்திட்டு வந்தேன். வாங்க போய், அதைக் கொடுத்து, நகையை வாங்கிட்டு வந்திருவோம். " என்றாள்.

கண் கலங்க றன்றி கூறியபோதும், சொல்லாமல் அங்கிருந்து செல்ல அஞ்சித் தயங்கியவளிடம், "வீட்டுக்குப் போய்ப் பெரியம்மா கிட்டே நகை தொலைஞ்சதைச் சொன்னா என்ன ஆகும்? அதை நெனச்சிப் பாருங்க் என்றுரைத்து அரள வைத்தாள்.

"பயப்படாதீங்கம்மா. நானும் கூடவே துணைக்கு இருக்கிறேனில்லை? சத்தமில்லாதே போய் நகையை வாங்கிட்டு வந்திடலாம். பெரியம்மா கிட்டே சொல்ல வேணாம். அவங்க தேடுமுன்னே திரும்பி வந்திடலாம்" என்று கிளம்பச் செய்தாள்.

அப்போதும், தான் மறைந்தும், மரகதம் ஓரிருவர் கண்ணில் படுமாறும் சென்று, டாக்சியில் ஏற ஏற்பாடு செய்தாள்.

இப்படி மரகதத்தை அழைத்துப் போய், அங்கே இல்லாத அந்த ஆளைத் தேடுவது போல அலைக்கழித்து, பின் புறமிருந்து தலையில் கட்டையால் ஓஓங்கி அடி.த்தாள். மயங்கிச் சரிந்து கிடந்தவளின் உடலில் இருந்து, அடுத்த செட் நகைகளைக் கழற்றி எடுத்துக் கொண்டாள்.

மரகதம் பிள்ளை துணிகளுக்காக எப்போதும் வைத்திருக்கும் பையில் ஏதேனும் இருக்கிறதா என்று தேட முயற்சிக்கும்போது, ஏதோ சத்தம் கேட்க அப்படியே விட்டுவிட்டு, கூட்டாளி முனியசாமியோடு டாக்சியில் கிளம்பி ஓடி விட்டாள்.

திருமண வீட்டுக்குப் போய் ஒன்றும் தெரியாதவள் போல, மற்றவர்களோடு சேர்ந்து மரகதத்தைத் தேடினாள்.

வீட்டுக்குப் போன பிறகும், உடனே போனால் தன் மீது சந்தேகம் வரக் கூடும் என்று ஓர் ஆண்டு பொறுமையாக அங்கேயே பணி

செய்துவிட்டு, நம்பும்விதமாக முதலாளியிடம் சொல்லிவிட்டே அங்கிருந்து கிளம்பினாள்.

நகைகளை விற்று, அந்தப் பணத்தை லாட்டரியில் கிடைத்ததாகச் சொல்லி, கடை வீடு என்று இங்கே நிலைமையை உயர்த்திக்கொண்டு வசித்தாள்.

“சின்ன முதலாளி, நீங்க கேட்டாப்புல, நடந்தது ஒண்ணு விடாம உங்க கிட்டே சொல்லிட்டேன். உங்க அம்மாளை அடிச்சதைக் கூட மறைக்கலை. ஆனா, அதுக்குப் பெறகு சின்னம்மா என்ன ஆனாங்கன்னு சத்தியமா எனக்குத் தெரியாதுய்யா. இங்க, இன்னைக்குப் பாத்ததுதான். நான் சொன்னது எல்லாம் சத்தியம் அய்யா! எல்லாம் சொல்லிப்புட்டேன். தயவு செஞ்சு என்னய மன்னிச்சு விட்டுருங்கய்யா.” என்று கண்ணீருடன் கெஞ்சிக் கேட்டாள் அன்னத்தாய்.

“இனிமே, நான் கெட்ட வழியே போக மாட்டேனுங்கய்யா!” என்று விசும்பினாள்.

கையில் இருந்த செல்ஃபோனை வெறித்த வண்ணம் குணசீலன் அசையாமல் அமர்ந்திருந்தான்.

அவன் மனம் இப்போது எப்படிக் குமுறிக் கொண்டிருக்கும் என்று சுகந்தினியால் உணர முடிந்தது. சொல்லப் போனால், அவளுமே உள்ளூர எரிமலையாய்க் குமுறிக் கொண்டுதான் இருந்தாள்.

உண்டு உருண்டிருக்கும் இவளது பேராசையால், ஒரு நல்ல பெண்மணியின் வாழ்க்கை என்ன மாதிரித் திசை மாறிப் போயிற்று!

ஆனால், விட்டு விடுவதாகச் சொல்லித்தான், குணா இந்த விவரங்களைப் பெற்றிருக்கிறான்.

எனவே சுகந்தினி எழுந்து சென்று, அன்னத்தாயின் கட்டுகளை அவிழ்த்து விட்டாள்.

பெரிதாக நன்றி சொல்லத் தொடங்கியவளைக் கை உயர்த்தித் தடுத்து நிறுத்தி, உதட்டின் மேல் விரலை வைத்துப் பேசாமல் செல்லுமாறு சைகை செய்தாள்.

சத்தமின்றி அன்னத்தாய் நழுவிச் சென்றுவிட , குணசீலனின் அருகே சென்று அவனது தோளை மெல்ல தொட்டாள்.

குணசீலன் சிலைக்கு உயிர் வர, “சுகி!” என்ற கதறலுடன், அவளை இறுக அணைத்து, அவளது மேனியில் முகம் புதைத்தான் அவன்.

அவனது சிகையை மெல்ல வருடியபடி அவளும் அப்படியே

நின்றாள்.

சற்று நேரம் கழித்து இறுக்கம் தளர, அவளை விடுவித்தான் குணா.

“சாரிமா. உன்னைப் போட்டு நசுக்கிவிட்டேன் போல! கூடவே தாங்க்ஸ்மா.” என்றான் .

“உங்கள் சாரி, தாங்க்ஸ் ஒன்றுமே வேண்டாம். ஆனால் . . கஷ்டமாக இருக்கும் என்று தெரியும்தானே? எதற்கு இவ்வளவு விளக்கமாகச் சொல்லச் சொன்னீர்கள்? அதுவும் ஹிப்னாட்டிசம் அது இது என்று கதை வேறு சொல்லி! ஆன்ட்டி கொஞ்சம் பலவீனம் என்பதால், நாம்தான் அதெல்லாம் முயற்சிக்கவே இல்லையே! நீங்கள் மிரட்டிய மிரட்டலில் அவள் வேறே மூச்சு விட்டதைக் கூடச் சொல்லித் தீர்த்துவிட்டாள்.” என்று சுகந்தினி இலகுவாகப் பேசினாள் .

அவனும் இறுக்கம் தளர்ந்து, “எல்லோரையும் ஏமாற்றி இருக்கிறாள். இப்போதோ கொலை செய்யவே துணிந்தவள்! அவளது நாற்ற வாயில் இருந்து வருவது முழுதும் உண்மை என்று எப்படி நம்புவது? அதனால்தான் அப்படி ஒரு மிரட்டு மிரட்டி வைத்தேன். “ என்று லேசாக முறுவலித்தான்.

சற்று யோசித்துவிட்டு, “இன்னும் ஒரே ஒரு ஒரு மர்மம். இருக்கிறது. அம்மா அணிந்திருந்த பட்டுச் சேலை! அரை மயக்கத்தில் இருப்பவளைக் கிராமத்து மருத்துவச்சியிடம். கூட்டிப் போனார்களாமே. அவள்தான் மாற்றுடை உடுத்து அந்த “இல்லத்”தில் விட்டிருக்க வேண்டும். பையை மட்டும் திருப்பிக் கொடுத்திருக்கிறாள். . . எப்படியோ, இனி இந்தத் துன்பியல் சரித்திரத்துக்கு, இத்தோடு ஒரு முற்றுப் புள்ளி. நாளை நாம் எல்லோரும் இங்கிருந்து கிளம்பலாம்.” என்றான்

“ஆனால், அன்னத்தாய்க்குத் தண்டனை இல்லையே குணா?” என்று கேட்டாள் சுகந்தினி.

“இல்லாமல் போவானேன்? சட்டப்படியான தண்டனை இல்லைதான். ஆனால், உன் தாத்தா சொன்ன உள்வீட்டு விரோதி! ஒருவருக்கு அங்கே மூன்று பேர் இருக்கிறார்கள்! அவள் இவ்வளவு குண்டானது கூட, மற்ற கவலைகளை மறக்கத் தின்றுகொண்டே இருந்த காரணத்தால் இருக்கலாம். இன்னும் நகை பற்றியும் கேட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். அன்னத்தாயைப் பிய்த்தெறிந்துவிட மாட்டார்களா?” என்று தோளைக் குலுக்கினான் அவன் .

பிரமையோ என்னவோ, அன்னத்தாயின் ஊருக்குச் சென்று

திரும்பியபின் மரகதம் இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சியோடு இருப்பது போல, சுகந்தினிக்குத் தோன்றியது.

அது பிரமை இல்லை, மெய்தான் என்று, அறுவை சிகிச்சைக்குப் பிறகான கடைசி செக்கப்புக்குப் போன போது, மருத்துவர் மயில்வாகனனும் தெரிவித்தார்.

“மரகதத்திடம் ஒரு புத்துணர்ச்சி, உற்சாகம் தெரிகிறது. அது அந்த ரத்தக் கட்டியின் பாதிப்பு அடியோடு விலகியதாலும் இருக்கலாம்.” என்றார்.

மேலும் சுகந்தினி ஆவலோடு பார்க்கவும், லேசாகத் தலையசைத்து, “மரகதம் முழுதாக எல்லோரையும் போல ஆகி விடுவாள் என்று சொல்ல முடியாதும்மா. அதுவும், குணசீலனை மகனாக அறிவது, மிகவும் அரிதுதான். ஆனால் தன் அன்பு வட்டத்துக்குள் ஏற்றுக் கொண்டதாகத் தோன்றுகிறது.” என்றார்.

“அதுவே எனக்கு சந்தோஷம்தான் டாக்டர்.” என்றான் குணசீலன்.

அன்று எல்லோருமாக வாகதீசர் வீட்டுக்கு வந்திருந்தார்கள்.

தாயையும் கண்ணனையும் திரும்ப அழைத்துச் செல்ல வந்த குணசீலன் வழக்கம்போலவே சற்று முன்னதாக வந்து பேசிக் கொண்டிருந்தான். பெரியவர்கள் இருவரும் மரகதத்தோடு சேர்ந்து கண்ணனிடம் குலாவிக் கொண்டிருக்க, குணசீலன் சுகந்தினியைத் தனியே அழைத்துச் சென்று, ஒரு பத்திரிகைக் குறிப்பை எடுத்துக் காட்டினான்.

“வினை அறுத்த செய்தி.” என்று அவன் காட்டிய இடத்தைப் படித்த சுகந்தினி சற்று அதிர்ச்சியுற்றாள்.

“பணம் நகைக்காகப் பிள்ளைகளே பெற்றவளைக் கொலை செய்த கொடுமை” என்று தலைப்பிட்டு, செய்தியைப் பிரசுரித்திருந்தார்கள்.

அன்னத்தாயைக் குத்திக் கொன்றதற்காக அவளுடைய மக்கள் மூவருமே கைது செய்யப் பட்டிருந்தார்கள்!

பெரிய பாவம் செய்தவளுக்கு என்ன மாதிரித் தண்டனை!

அது பற்றிய யோசனையில் இருந்தவர்களைக் கண்ணனின் உற்சாகச் சிரிப்பு கவர்ந்தது. மரகதத்தின் மேல் சாய்ந்தபடி அவன் ஏதோ சொல்ல, அவனைப் பெருமையோடு நோக்கியபடி மரகதம் அமர்ந்திருந்தாள்.

ஏதோ தோன்ற, சுகந்தினி குணசீலனைப் பார்த்தாள்.

“என்ன?”

“வந்து . . .ஒருவேளை . . மிகவும் அதிசயமாக ஒருவேளை ஆன்ட்டி குணமானால், அப்புறம் கண்ணனின் நிலை என்ன ,குணா?” என்று கேட்டாள் அவள்

“உன் “அதிசயமாக” என்ற வார்த்தை எனக்கும் புரிகிறது, சுகி. நானும் எந்த எதிர்பார்ப்போடும் இருக்கவில்லை. அந்த ஒரு வேளை என்கிற நப்பாசை லேசாக, மிக லேசாக உண்டுதான். ஆனால், இப்போது கண்ணனுக்கு வருவோம். என் தாயின் வறண்ட வாழ்வை ஐந்து ஆண்டுகளாகச் சோலைவனமாக்கி இருக்கிறான். மூன்று வயதில் இருந்து என்னை எப்படி வளர்த்து ஆனந்தப் பட்டிருப்பார்களோ, அதை அவர்களுக்குத் தந்திருப்பவன் கண்ணன். அவனை நான் ஒருபோதும் விட்டுவிட மாட்டேன். சொந்த சகோதரன் போலச் சொத்தில் பாதி கொடுக்க என்னால் முடியாது என்பது உண்மையே. ஆனால், பணத்தட்டுப்பாடு இல்லாமல் அவன் வளர்ந்து, விரும்பியது படித்து, அவன் தன் சொந்தக் காலில் வளத்தோடு வாழுமாறு செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிறேன். ஏன்? என்ன பெருமூச்சு?”

சற்றே முகம் கன்ற, “அதில்லை குணா, ஐந்து ஆண்டுகளாகக் கூடவே இருந்து வளர்கிறானா? அந்தப் பாசம். . .ஒரு சின்னத் தம்பி மாதிரி உணர்வு ஏற்பட்டுவிட்டதா? அவனது பிற்காலம் என்ன ஆகுமோ என்று சிறு கவலை . . ஏற்பட்டிருக்கக் கூடாது என்று இப்போது தோன்றுகிறது. நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள்!” என்றாள்

“என்னது, நானா?” என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டான் குணசீலன். “நான் மட்டுமாய் அவனை எப்படிப் பார்ப்பேன், சுகி? என்னால் எப்படி முடியும்?”

குழம்பிப் போய், “பிபின்னே . . சொன்னீர்களே! ?” என்று வினவினாள் அவள்.

“தனியாக நான் மட்டுமாகப் பார்ப்பதாக எப்போது சொன்னேன்?”

“பிபின்னே . .ஏதோ உறுதி கொண்டிருப்பதாகச் சொன்னீர்களே!”

“கூட இருந்து நீயும் செய்வதானால், செய்யலாம் என்று நினைத்தேன். என்ன? செய்வாயல்லவா? காலம் முழுதும் என் கூடவே இருந்து! “

கை பற்றி அவன் கேட்க, அவளது கன்னங்கள் அழகாய்ச் சிவந்தன. “இப்படிக் கூட மணம் புரியக் கேட்கலாம் என்று எனக்குத் தெரியாதுப்பா!” என்றாள் லேசான வெட்கப் புன்னகையோடு.

“இப்போது தெரிந்துவிட்டதுதானே? பதிலைச் சொல்லாமல், சஸ்பென்சில் நிறுத்தி வைக்கிறாய்? தாங்காது தாயே! உடனே சம்மதம் சொல்லிவிடு!” என்று அவன் அவசரம் காட்டிக் கெஞ்ச , அவள் அழகாக முறுவலித்தாள்.